# வைப்பகம்

அறிவுத் தேடலின் மையம்

2020 யூலை - செத்தெம்பர் மலர் 5 இதழ் 7 - 9

ரூ. 20/-


- 02 காரணியினை அடிப்படையாகக் கொண்ட சொத்து ஒதுக்கு
- 09 உலகம் முழுவதிலும் நாணயத்தினைப் பயன்படுத்துவதில் காணப்படும் புதிய போக்குகள்: மெய்நிகர் நாணயம்
- 19 படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மைப் பகுப்பாய்வு: இலங்கை
- 23 தகவல்களை அறிவதற்கான உரிமை 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சட்டம்
- 29 மத்திய வங்கியின் தொடர்பூட்டல்
- 33 மூப்படையும் இலங்கையர் சமூகப் பொருளாதாரத் தாக்கங்களும் புதிய வாய்ப்புக்களும்


ISSN 2513-3012

02079

9 770041 001670

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எழுத்தாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

பிரதியொன்றின் விலை: ரூ.20/-
ஆண்டுச் சந்தா (அஞ்சல் கட்டணம் உட்பட): ரூ. 320/

# காரணியினை அடிப்படையாகக் கொண்ட சொத்து ஒதுக்கு

பீ.ஜி. நிலுபுலி த சில்வா
மூத்த உதவிப் பணிப்பாளர்
பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## 1. அறிமுகம்

**காரணியினை அடிப்படையாகக் கொண்டு முதலீடு செய்தல் என்றால் என்ன?**

காரணி முதலீடு செய்தலானது, முதலீட்டாளர் சொத்துப்பட்டியலில் நன்கு நிறுவப்பட்டதும் அதிகரித்து வருகின்ற முக்கியத்துவத்தைக் கொண்டதுமான வகிபாகமொன்றினைக் கொண்டிருக்கிறது. இன்வெஸ்கோ குளோபல் பக்டர் இன்வெஸ்டிங் ஆய்வின்படி, 2018இல் அளவீடு செய்யப்பட்ட நிறுவன ரீதியான முதலீட்டாளர்களில் 70 சதவீதத்திற்கும் கூடுதலானோர் காரணிப்படுத்தல் உபாயங்களைப் பயன்படுத்தியிருந்தனர். மேலும், முதலீட்டாளர்கள் வருவாய்களைத் தூண்டுகின்றதும் இடர்நேர்வுகளைக் குறைக்கின்றதுமான அடிப்படைகளின் சிறந்த புரிந்துணர்வினை நிலையாக எதிர்பார்ப்பதனால் காரணிப்படுத்தல் முதலீடுகளை மேற்கொள்ளுதல் தனியார் முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமானதாக மாறியிருக்கிறது.

அதிகரித்து வருகின்ற நிதியங்களின் எண்ணிக்கையானது நெருக்கடியான[1] கொடுகடன் காலப்பகுதியில், பாரம்பரியமான சொத்து சார்ந்த ஒதுக்குகளுக்குப் பதிலாக, இடர்நேர்வு சார்ந்த சொத்து ஒதுக்குக் கொள்கைகளை எதிர்பார்க்கின்றன. இதன் காரணமாக காரணியினை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டு ஒதுக்குகள், இறுக்கமான கொடுகடன் நிலைமைகள் போன்ற நிலைமையொன்றில் பிரபலமான போக்காக மாறின. நிறுவன ரீதியான அநேக முதலீட்டாளர்கள் 2007-2009இல் காணப்பட்ட கொடுகடன் நெருக்கடிக் காலப்பகுதியில் அவர்கள் அனுபவித்த இடர்நேர்வுகள் பற்றி சரிவர புரிந்து கொள்ளாதவர்களாகக் காணப்படுகின்ற அதேவேளையில், "சொத்து சார்ந்த" அணுகுமுறை முதலீட்டாளர்கள் எதிர்பார்த்திருந்த பன்முகப்படுத்தப்பட்ட நன்மைகளை வழங்கவில்லை. காரணம் என்னவெனில், அவர்களது சொத்துப்பட்டியலில் காணப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் ஒரே திசையில் நகர்ந்திருந்தமையினை அவதானிக்க முடிந்தமையேயாகும். இதன் காரணமாக, காரணியினை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டுக் கட்டமைப்பு, நீண்ட காலத்தில் நேர்க்கணியமான வருமானக் கட்டணத்தினை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கின்ற காரணிகளை அடையாளம் காண்பதற்கும் அவற்றை ஒதுக்குவதற்கும் முயற்சிக்கிறது. "இவை இழப்பீட்டுக்களை வழங்கிய காரணிகள்" என அழைக்கப்படுகின்றன. காரணியினை முதலீடு செய்தல் என்பதும் ஒரு உபாயமாகும். இது உயர்ந்த வருமானங்களுடன் தொடர்பான பிணையங்களைத் தெரிவுசெய்கிறது.

மேலும், காரணியினை அடிப்படையாகக் கொண்டு முதலீடு செய்வதென்பது ஒரு கட்டமைப்பாகும். அது காரணி வெளிப்படுத்துகைத் தீர்மானங்களைச் சொத்துப்பட்டியல் நிருமாணச் செய்முறையுடன் ஒருங்கிணைக்கிறது. இருப்புக்கள், முறிகள் மற்றும் ஏனைய காரணிகள் என்பவற்றின் வருமானத்தினைத் தூண்டுகின்ற காரணிகளில் இரண்டு முக்கிய வகைகள் காணப்படுகின்றன. இவை பேரண்டப் பொருளாதாரக் காரணிகள் மற்றையது நவீனத்துவக் காரணிகள் முன்னையது சொத்து வகைகள் முழுவதிலுமுள்ள பரந்தளவிலான இடர்நேர்வுகளை உள்ளடக்குகின்ற அதேவேளையில், மற்றையது சொத்து வகைகளுக்குள் உள்ள வருவாயினையும் இடர்நேர்வுகளையும் விளக்குகிறது. சில பொதுவான பேரண்டப் பொருளாதார காரணிகள் கொடுகடன், பணவீக்கம் மற்றும் திரவத்தன்மையினை உள்ளடக்குகின்றவிடத்து நவீனத்துவ மாதிரிக் காரணிகள், நவீனத்துவ மாதிரி, பெறுமதி மற்றும் உத்வேகம் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

---

1 கொடுகடன் குறைப்பு (கொடுகடன் அழுத்தம் அல்லது கொடுகடன் நெருக்கடி எனவும் அறியப்படுகிறது) என்பது கடன்களின் (அல்லது கொடுகடன்) பொதுவான கிடைப்பனவில் ஏற்படும் சடுதியான குறைப்பு அல்லது வங்கிகளிலிருந்து கடன்களைப் பெறுவதற்காகத் தேவைப்படும் நிபந்தனைகளைச் சடுதியாக இறுக்கமாக்குதலாகும். கொடுகடன் குறைப்பு பொதுவாக அலுவல்சார் வட்டி வீதங்களில் ஏற்படும் சுயாதீனமான உயர்வுகளினால் கொடுகடன் கிடைப்பனவில் ஏற்படும் குறைப்புடன் தொடர்புபடுகிறது (மூலம்: விக்கிபீடியா).

2. எது காரணிப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகளை நோக்கி நிறுவன ரீதியான முதலீட்டாளர்களை தூண்டுகிறது?

நிறுவன ரீதியான அநேக முதலீட்டாளர்கள் காரணிப்படுத்தல் மூலம் பயனடைந்திருக்கின்றார்களோ, இல்லையோ அது தொடர்பான ஆராய்ச்சிகளை பல தசாப்தங்களாக மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள். நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் பெரும்பாலான சொத்து வகைகளுக்காக குறைந்தளவு வருமானத்தினையே அடைந்துள்ளமையினால் அல்பா வருமானமொன்று அவர்களுக்குத் தேவையானது (பொருத்தமான அடித்தள அளவுக்குறியீட்டு சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் அல்பா என்பது முதலீட்டுச் செயலாற்றமொன்றின் அளவு முறையாகும்) காரணி முதலீட்டினை மேற்கொள்வதனை நோக்கி அவர்களில் பெரும்பாலானவர்களைக் கவரக்கூடியதாக இருக்கும். காரணியினை முதலீடு செய்தல் முதலீட்டாளர்கள் முகாமைப்படுத்துகின்ற சொத்துப்பட்டியலுக்குள் அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு போட்டித்தன்மை வாய்ந்த இலாபத்தினை வழங்குகின்றதுடன், இது சிறந்த திரவத்தன்மையினையும் குறைந்த கட்டணங்களையும் வழங்கும் முறையாக இருப்பதனால் குறைந்த வருமானத்தினைக் கொண்ட சூழலில் கூடியளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மாறியிருக்கிறது. உண்மையில் குளோபல் பீட்டா அட்வைசர்ஸ் இனால் மேற்கொள்ளப்பட்ட அண்மைய அளவீடு, நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் அவர்களது காரணி ஒதுக்கங்களை அடுத்த ஐந்து ஆண்டுகளில் 12 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு அதிகரித்துக் கொள்ள திட்டமிடுகின்றார்கள் என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

3. காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டினைச் செய்வதன் நோக்கம்

கோட்பாட்டு ரீதியிலிருந்து நோக்குகையில், காரணி முதலீடுகளைச் செய்தல் என்பது பன்முகப்படுத்தலை அதிகரிப்பதற்காகவும் அதிகளவான சந்தை வருவாய்களை உருவாக்குவதற்காகவும் அதேவேளையில் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்காகவும் வடிவமைக்கப்பட்டதொன்றாகும். சொத்துப்பட்டியலைப் பன்முகப்படுத்தல் எப்பொழுதும் பிரபல்யமான பாதுகாப்பு வழிமுறையாக இருப்பினும் கூட, பரந்த சந்தையில் தெரிவுசெய்யப்பட்ட பிணையங்கள் நகரமுடியாமல் இறுக்கமடைந்து போயின் பன்முகப்படுத்தலின் நன்மைகள் இழக்கப்பட்டுவிடும். உதாரணமாக முதலீட்டாளரொருவர் தெரிவுசெய்த இருப்புக்கள் மற்றும் முறிகளைக் கொண்ட கலப்பு எல்லாவற்றினதும் பெறுமதி சந்தை நிலைமையில் தோன்றுகின்ற குறிப்பிட்ட நிலைமைகளினால் வீழ்ச்சியடைந்து போகலாம், நல்லதொரு செய்தி யாதெனில் காரணிகளை முதலீடு செய்தல், பரந்தளவான, நிலையான மற்றும் நீண்ட கால அங்கீகரிக்கப்பட்ட வருமானத் தூண்டல்களை இலக்கிடுவதன் மூலம் சாத்தியமான இடர்நேர்வுகளை எதிரீடு செய்யமுடிவதாகும்.

பாரம்பரியமாக சொத்துப்பட்டியல் ஒதுக்குகள் பொதுவாக 60 சதவீத இருப்புக்களையும் 40 சதவீத முறிகளையும் கொண்டிருப்பதுடன், ஒப்பீட்டு ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கும் இலகுவானதாகும். இதனால், இவற்றிலிருந்து பல்வேறு எண்ணிக்கையான காரணிகளைத் தெரிவுசெய்வதனைக் கவனத்தில் கொள்கையில் காரணியினை முதலீடு செய்வதனை மிக முக்கியமானதொரு நிகழ்வாகப் பார்க்கமுடியும். உத்வேகம் போன்ற சிக்கலான காரணங்களில் கவனம் செலுத்துவதிலும் பார்க்க, காரணிகளை முதலீடு செய்கின்ற தொடக்க நிலையிலுள்ளவர்கள் நவீன மாதிரி (வளர்ச்சி எதிர் பெறுமதி), அளவு (பாரிய உச்சளவு எதிர் சிறியளவு) மற்றும் இடர்நேர்வு (பீட்டா) போன்ற எளிமையான மூலங்களில் கவனம் செலுத்த முடியும். இவை பெரும்பாலான பிணையங்களுக்கும் பிரபல்யமான இருப்பு ஆராய்ச்சி வெப்தளங்களிலும் கிடைப்பதற்குத் தயாராகவுள்ளன. கொலம்பியா பிசினெஸ் ஸ்கூலின் பேராசிரியர் அன்ட்ரூ ஆங்கின்படி *"உணவிற்கு ஊட்டச்சத்துக்கள் எப்படியோ அப்படியே சொத்துக்களுக்குக் காரணிகளாகும். நிதியியல் உலகின் ஊட்டச்சத்து காரணிகளேயாகும். காரணிக் கோட்பாடுத் தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். அக்காரணி இடர்நேர்வு இழப்பீடு செய்யப்பட வேண்டுமென்பதுடன் காரணிகள் இடர்நேர்வுக் கட்டணங்களுக்கு பின்னாலிருந்து உந்துகின்ற விசைகளாகும். ....... இது சொத்து விலையிடலின் நவீன கோட்பாடாகும்: சொத்துக்கள் வருவாய்களைக் கொண்டிருக்கின்றனவெனினும் இவ்வருவாய்கள் அச்சொத்துக்களின் பின்னாலுள்ள அடிப்படைக் காரணிகளைப் பிரதிபலிப்பனவாகவுள்ளன."*

4. காரணிகளை முதலீடு செய்வதன் அடிப்படைகள்

- **பெறுமதி:** பெறுமதியானது, பங்குகளின் அடிப்படைப் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த விலைகளைக் கொண்டிருக்கின்ற அத்தகைய பங்குகளிலிருந்து மிகையான வருமானங்களைப் பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இது, பொதுவாக ஏடுகளுக்கான விலை, வருவாய்களுக்கான விலை, பங்கிலாபங்கள் மற்றும் கட்டுப்பாடற்ற காசுப்பாய்ச்சல் என்பனவற்றினால் கண்டறியப்படுகின்றன.
- **அளவு:** வரலாற்று ரீதியாக, சிறிய உச்ச எல்லையினைக் கொண்ட இருப்புக்களை உள்ளடக்குகின்ற சொத்துப்பட்டியல், வெறுமனே பாரிய உச்ச எல்லை இருப்புக்களுடன் கூடிய சொத்துப்பட்டியலிலும் பார்க்க பெருமளவு வருமானங்களை எடுத்துக்காட்டுகின்றன. முதலீட்டாளர்கள், இருப்பின் சந்தை மூலதனமயமாக்கலைக் கணிப்பதன் மூலம் அளவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- **உத்வேகம்:** கடந்த காலத்தில் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்த இருப்புக்கள் முன்னோக்கிய வலுவான வருவாய்களைக் காட்டின. உத்வேகம் மிக்க உபாயம் மூன்று மாதங்களிலிருந்து ஓராண்டு வரையிலான

பரந்த காலப்பகுதியின் தொடர்பான வருவாய்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

- **தரம்:** தரம் என்பது குறைந்த படுகடன், உறுதியான வருவாய்கள் நிலையான சொத்து வளர்ச்சி மற்றும் வலுவான கம்பனி ஆளுகை என்பனவற்றினால் வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. முதலீட்டாளர்கள் பங்குரிமை மூலதனத்திற்கான வருமானம், பங்குரிமை மூலதனத்திற்கான படுகடன் மற்றும் வருவாய்களின் வேறுபடும் தன்மை போன்ற பொதுவான நிதியியல் அளவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இருப்புக்களின் தரத்தினை அடையாளம் காணமுடியும்.
- **தளம்பல் தன்மை:** உயர்ந்த தளம்பல்களைக் கொண்ட சொத்துக்களிலும் பார்க்க குறைந்த தளம்பல்களுடன் கூடிய சொத்துக்கள் பெருமளவிற்கு இடர்நேர்வுகளுக்குச் சீராக்கம் செய்யப்பட்ட வருவாய்களை ஈட்டும் என்பதனை அனுபவ ரீதியான ஆராய்ச்சிகள் விதந்துரைக்கின்றன. ஒன்றிலிருந்து மூன்று ஆண்டுகள் வரையிலான காலக் கட்டமைப்பிலிருந்தான நியம விலகல்களை அளவிடுவது பீற்றாவினைப் பெற்றுக்கொள்வதற்கான பொதுவான முறையொன்றாகும்.

காரணி வெளிப்படுத்துகைகளை இழப்பீடு செய்யமுடியும் அல்லது இழப்பீடு செய்ய முடியாமலிருக்கும். எந்தவொரு காரணியையும் அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பில் இது மிக முக்கியமானதொரு வேறுபாடாகும். கவனிக்கத்தக்க முக்கியமானதொரு விடயம் யாதெனில், அனைத்துக் காரணி வெளிப்படுத்துகைகளும் நீண்ட காலத்தில் வருவாய்க் கட்டணங்களை ஈட்டும் என்பதனை எதிர்பார்க்கக்கூடாது என்பதேயாகும். உதாரணமாக, சந்தைக் காரணிகள் வரலாற்று ரீதியாக வருவாய்க் கட்டணங்களை ஈட்டுவதும், இக்கட்டணம் தொடர்ந்தும் காணப்படும் என்ற பொதுவான எதிர்பார்ப்புக்களும் பன்முகப்படுத்தப்பட்ட இருப்பு சொத்துப்பட்டியலை முதலீட்டாளர்கள் பரந்தளவில் கொள்வனவு செய்வதனை ஊக்குவிக்கிறது. மாறாக, சில காரணி வெளிப்படுத்துகைகள் இழப்பீடு செய்யப்படுவதில்லை. முதலீடொன்றினதும் குறிப்பிட்ட காரணியொன்றினதும் வருமானங்களின் வேறுபாட்டிற்கிடையில் தொடர்புகள் காணப்பட்ட போதும், இவ்விடர்நேர்வு ஈடுசெய்யப்படும் என்பதற்கு உத்தரவாதமெதனையும் வழங்காது. காரணி, காத்திரமான பன்முகப்படுத்தலினூடாக அகற்றிவிடக்கூடிய இயல்பான இடர்நேர்வொன்றினை எளிமையான முறையில் பிரதிபலிக்கக்கூடும். உதாரணமாக, தனியான இருப்பினைக் கொண்ட கம்பனியின் குறித்துரைத்த இடர்நேர்வு, பன்முகப்படுத்தப்பட்ட சொத்துப்பட்டியலின் செயலாற்றத்தின் மீது காத்திரமான தாக்கமெதனையும் கொண்டிருக்கக்கூடாது.

## 5. காரணியினை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டின் முக்கியத்துவம்

காரணி வெளிப்படுத்துகை தொடர்பான ஆழமான ஆய்வொன்று, வேறுபட்ட காரணிகள் வேறுபட்ட அளவுகளில் வருவாய்களை எவ்வாறு உருவாக்குகின்றன என்பது பற்றி முதலீட்டாளர்கள் அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கான வழியினை அமைத்துக் கொடுத்திருக்கிறது. காரணிக் கட்டமைப்பு தொடர்பான ஆராய்ச்சி அண்மைய ஆண்டுகளில் வளர்ச்சியடைந்திருப்பதுடன் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் அமைப்புக்களின் பரந்த வீச்சுடனான இணைப்பில் பயன்படுத்தப்படும் பொழுது இடர்நேர்வு-சீராக்கப்பட்ட வருவாய்களை மேம்படுத்துவதற்குச் சாத்தியமான அணுகுமுறைகளும் கண்டறியப்பட்டுள்ளன. ஆராய்ச்சி ஆய்வுகள் காரணிச் சொத்துப்பட்டியலின் செயலாற்றத்தினைப் பாரம்பரியமான 60 சதவீத ஐக்கிய அமெரிக்க இருப்புக்கள் மற்றும் 40 சதவீத ஐக்கிய அமெரிக்க முறிகளின் சொத்துப்பட்டியல் (பென்டரும் மற்றையவர்களும் 2010); உலகளாவிய இருப்புக்கள் மற்றும் முறிகள் தோற்றம் பெற்றுவரும் சந்தைகள், உண்மைச் சொத்துக்கள் மற்றும் பண்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியம் (இல்மனன் மற்றும் கீசர் 2012); மாற்றுச் சொத்துப்பட்டியல் (பேர்ட்லியம் மற்றும் துறொப் 2013; மற்றும் செயற்படுகின்ற முகாமையாளர்களின் சொத்துப்பட்டியல் (பென்டர், ஹம்மொன்ட் மற்றும் மொக் 2014) என்பனவற்றை ஒப்பிடுகின்றன. பன்முகப்படுத்தப்பட்ட சொத்துப்பட்டியலின் வீச்சுடன் இணைக்கப்படும் பொழுது வரலாற்று ரீதியாக காரணியினை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகள் மேம்பட்ட இடர்நேர்வு-சீராக்கப்பட்ட வருவாய்களைக் கொண்டிருப்பதனை இவ்வாராய்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

இதன்படி, காரணியினை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பு முதலீட்டாளர்கள் தமது ஒதுக்குத் தீர்மானங்களைச் சொத்து வகுப்புக்களிலிருந்து காரணி வெளிப்படுத்துகைகளுக்கு மாற்றுவதிலுள்ள எதிர்கால வாய்ப்புக்களை எடுத்துக்காட்டுகிறது. காரணிகள் ஏன் அந்தளவிற்கு முக்கியம் பெறுகின்றன என்பதற்கான காரணம் பாரம்பரியமான சொத்து வகுப்புக்கள் பொதுவாக அதே அடிப்படை இடர்நேர்வுக் காரணிக்கான வெளிப்படுத்துகைகளைக் கொண்டிருப்பதேயாகும். பங்குரிமை மூலதனம், முறிகள் மற்றும் மாற்று ஏற்பாடுகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட சொத்து ஒதுக்கொன்று, வருவாய்களைத் தூண்டுகின்ற அடிப்படைக் காரணிகளின் நியதிகளில் மிகச் சிறியளவு பன்முகப்படுத்தலை மட்டுமே இறுதியில் வழங்கும். எனவே, காரணிகளின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் முதலீட்டாளரொருவர் எந்த சொத்து வகுப்பு விரும்பத்தக்க இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை வழங்குமென்பதனைச் சிறந்த முறையில் கிரகித்துக் கொள்ள முடியும். ஆங்நோட்டின்படி "நிதியத்தின் முதலீடு மற்றும் வியாபார நடவடிக்கைகள் பற்றிய கூடியளவு முழுமையான தகவல்களைக் காரணிகள் வழங்க முடியும்."

## 6. காரணிகளின் முக்கிய வகைகள்

காரணிகளில் இரண்டு முக்கிய வகைகள் காணப்படுகின்றன. அவையாவன பேரண்டம் மற்றையது நவீனத்துவ வகை.

i. பேரண்டக் காரணிகள் - சொத்து வகைகள் முழுவதிலும் வருவாய்களைத் தூண்டுகிறது. முதலீட்டுக் கம்பனியான

பிளாக்றொக்சின் ஆய்வின்படி, இவ்வருமானங்களில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவற்றிற்கு 6 காரணிகள் வகை கூறுகின்றன. அவற்றுள் பொருளாதார வளர்ச்சி, உண்மை வீதங்கள் மற்றும் பணவீக்கம் என்பன மிக முக்கியமான மூன்று காரணிகளாக விளங்குகின்றன. கொடுகடன், தோற்றம்பெற்று வரும் சந்தைகள் மற்றும் திரவத்தன்மை என்பன மற்றையவைகளாகும். ஐக்கிய அமெரிக்க திறைசேரிகள் உண்மை வட்டி வீதங்கள் மற்றும் பணவீக்கம் என்பனவற்றினால் தூண்டப்படுகின்ற வேளையில் பங்குரிமை மூலதனங்கள் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவது தொடர்பில் பெருமளவு இடர்நேர்வுகளுக்குள்ளாகின்றன.

ii. நவீனத்துவக் காரணிகள் - சொத்து வகைகளுக்குள் இருக்கும் வருவாய்களை விளக்குகின்றன. கல்வியாளர்களும் தொழில்களை மேற்கொள்வோரும் மலிவான இருப்புக்கள் (பெறுமதி) போக்குகளைக் கொண்டிருக்கின்ற இருப்புக்கள் (உத்வேகம்) உயர்தர வருவாய்களுடன் கூடிய இருப்புக்கள் (தரம்) என நீண்ட காலத்தில் மிகச் சிறந்த சந்தைச் செயலாற்றத்தினைக் கொண்ட ஒரு சில காரணிகள் பெயர் குறிப்பிடத்தக்கனவாக இருப்பதனை நீண்ட கால அடிப்படையில் கண்டறிந்திருக்கின்றனர். நிலையான வருமானம், பண்டங்கள், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஏனைய சொத்து வகைகளும் இதே நவீனத்துவக் காரணிகளாக அவதானிக்கப்பட்டுள்ளன.

### 6.1. எமக்குத் தேவைப்படும் காரணிகள்

காரணிகளின் உத்தம கலப்பு முதலீட்டாளர்களிடையே வேறுபடக்கூடும். வேறுபட்ட மக்கள் வேறுபட்ட ஊட்டத் தேவைப்பாடுகளைக் கொண்டிருக்கக்கூடும். பரிசீலனையில் கொள்ளப்படக்கூடிய சில நியமத் தேர்வுகள் வருமாறு:

i. சமச்சீரான பேரண்டக் காரணி வெளிப்படுத்துகை - எளிமையானதும் ஆனால் வலுவானமான அடிப்படை அளவுக் குறியீடு, சொத்துப்பட்டியல் உயர்ந்தபட்ச பன்முகப்படுத்தலைக் கொண்டிருக்கிறது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஆறு பேரண்டக் காரணிகளிலும் சமமான நிறைகளைக் கொண்டிருக்கிறது. எனினும், சில முதலீட்டாளர்கள் சில காரணிகளின் பேரிலான அவர்களின் முன்னுரிமை கருதி அக்காரணிகள் கூடியளவு நிறையினைக் கொண்டிருக்க வேண்டுமென விரும்புகின்றனர். உதாரணமாக, குறைவடைகின்ற தன்மை பற்றி கரிசனைகொள்கின்ற முதலீட்டாளரொருவர் உண்மை வீதங்கள் மற்றும் பணவீக்கம் போன்ற பாதுகாப்புக் காரணிகளுக்காக கூடியளவினை ஒதுக்குக்கூடும்.

ii. நவீனத்துவக் காரணி வெளிப்படுத்துகை - பெறுமதி, உத்வேகம், தரம் மற்றும் அளவு போன்ற நவீனத்துவக் காரணிகள் சந்தை மூலதனமயமாக்கல் அடித்தள அளவுக்குறியீடு தொடர்பில் வருமானத்தினை உயர்த்த முடியும். மிகக் கூடுதலான இடர்நேர்வுகளைத் தவிர்க்க விரும்பும் முதலீட்டாளர்களுக்காக, குறைந்தபட்சத் தளம்பல் உபாயங்கள் பங்குரிமை மூலதனங்கள் குறைவடைவதனைக் குறைக்க உதவுகின்ற வேளையில் நீண்ட கால வருமான வாய்ப்புக்கள் பேணப்படுகின்றன.

iii. பேரண்ட மற்றும் நவீனத்துவக் காரணிகள் இரண்டும் முழுச் சொத்துப்பட்டியலிலுமுள்ள பேரண்டக் காரணிகளைக் குறிப்பிட்ட சொத்து வகுப்புக்களிலுள்ள இலக்கிடப்பட்ட நவீனத்துவக் காரணிகளூடாக இணைக்க முடியும். ஏனெனில் நவீனத்துவக் காரணிகளிலிருந்தான வருவாய்களை பேரண்டக் காரணிகளின் வருவாய்களுடன் தொடர்புபடுத்த முடியாது. நீண்ட மற்றும் குறுகிய அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருப்பின் பேரண்ட மற்றும் நவீனத்துவக் காரணிகள் இரண்டினையும் அதிகளவிற்குப் பன்முகப்படுத்திக் கொள்ள முடியும்.

### 6.2. காரணியினைத் தெரிவு செய்யும் பிரமாணங்கள்

i. பொருளாதாரக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது: காரணியானது காரணியுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுக் கட்டணத்திற்கான அடிப்படைக் காரணங்களை விளக்குகின்ற பொருளாதார அடிப்படையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். இவை முறையியல் சார்ந்த இடர்நேர்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டுமேயொழிய, இயல்பான தன்மைகளையல்ல.

ii. பொருளாதாரத்திலும் ஒழுங்குவிதிகளிலும் மாற்றங்களைச் செய்வதற்கான வலிமை: இடர்நேர்வுக் கட்டணம் மறைந்துவிடுமாயின், புதிய ஒழுங்குவிதிகள் விதிக்கப்படுமாயின் அல்லது பொருளாதார மாற்றங்கள் விதிக்கப்படுமாயின் கட்டணம் காரணியொன்றாகக் கருதப்படமாட்டாது.

iii. நீண்ட வருவாய் வரலாறு (வேறுபட்ட சூழ்நிலைகள் உட்பட): காரணி இடர்நேர்வுக் கட்டணம் என்பது எதிர்மறையான சூழலொன்றின் கீழ் சாத்தியமான இழப்புக்களைத் தாங்கிக் கொள்வதற்காக முதலீட்டாளர்கள் பெற்றுக்கொள்கின்ற வெகுமதியாகும். காரணியொன்றின் இடர்நேர்வு-வருவாய் சொத்துப்பட்டியலை மதிப்பிடுகின்ற முதலீட்டாளர்களுக்காக, இது மோசமான சூழ்நிலையொன்றில் காரணியின் நடத்தையினைக் காட்டுகின்ற நீண்ட கால வரலாற்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iv. நடைமுறைப்படுத்தத்தக்கவையும் அளவிடத்தக்கவையும்: முதலீட்டாளர்கள் அவர்களது இயக்கவாற்றலைக் கண்காணிப்பதனை அனுமதிக்கின்ற அளவையியல் ஒன்றினைக் காரணிகள் கொண்டிருத்தல் வேண்டும்.

காரணிப்படுத்தல் உபாயத்தினை உருவாக்குகின்ற நோக்கத்துடன் முதலீட்டாளர்கள் காரணியிலிருந்து இடர்நேர்வுக் கட்டணங்களைப் பெற்றுக்கொள்வதனை அனுமதிக்கின்ற பிணையங்கள் இருத்தல் வேண்டும்.

ஆரம்பத்தில் இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டாதல் வேண்டும்:

முதலாவது முதலீட்டாளர்கள் தேவையுடனோ அல்லது தேவையின்றியோ அவர்களது சொத்துப்பட்டியல்களுக்கிடையில் ஏற்கனவே சில காரணி வெளிப்படுத்துகைகளைக் கொண்டிருக்கலாம். உதாரணமாக குறைந்த விலைகள்/வருவாய் விகிதங்களுடன் கூடிய பங்குகளின் சொத்துப்பட்டியல் பெறுமதிக் காரணிக்கான வெளிப்படுத்துகையினைக் கொண்டிருக்கலாம். இரண்டாவது, சில காரணிகளுக்கான முதலீடுகளைப் பொறுத்தவரையில் அவை தற்பொழுது இடம்பெற்று வருகின்ற விவாதங்களுக்கு அதாவது கடந்த காலத்தில் அவதானிக்கப்பட்ட மிகையான இடர்நேர்வு-சீராக்கப்பட்ட வருவாய் எதிர்காலத்திலும் தொடருமா என்பது போன்ற விடயங்களுக்குட்பட்டதாக இருக்கும். காரணிகளின் பாரிய வீச்சு பகுப்பாய்வு செய்யப்பட்டு கல்வியியலாளர்களிடையே விவாதிக்கப்படுவதுடன், இவற்றில் பெரும்பாலானவை முதலீட்டாளர்களினால் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. வரைபடம் 1 பொதுவாக ஆராயப்பட்டு காரணி வெளிப்படுத்துகைகளைத் தொகுத்துத் தருவதுடன் அவை ஒவ்வொரு காரணியினையும் ஆவணப்படுத்துவது தொடர்பான விரிவான அறிவு மற்றும் அவற்றுடன் இணைந்து காணப்படும் வரலாற்று ரீதியான நேர்க்கணிய இடர்நேர்வு - சீராக்கப்பட்ட மிகையான வருவாயின் அனுபவ ரீதியான சான்றுகள் ஆகிய இரண்டிற்கும் குறிப்பிடத்தக்க பின்வரும் ஏழு பொதுவான வெளிப்படுத்துகைகளை ஆராய்ந்து தொகுத்துத் தருகின்றன.

### 7. காரணி-இனை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டினைச் செய்தல் மற்றும் தொடர்பான கோட்பாடுகள்

பூரணமான கல்வியியல் அறிவு காரணிகளை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகளை மேற்கொள்வதுடன் தொடர்பானதாக விளங்குவதுடன் ரெய்னர் (1961) சார்ப் (1964), லின்டனர் (1965) மற்றும் மோசின் (1966) ஆகியோரின் மூலதனச் சொத்து விலையிடல் மாதிரியுடன் ஆரம்பமாகின்றது. மூலதனச் சொத்து விலையிடல் மாதிரி, முதலீடொன்றின் மீதான வருமானம் என்பது அதன் சந்தை இடர்நேர்விற்கான அதன் உணர்திறனின் ஒரு தொழிற்பாடாகும் என முன்மொழிகிறது. எனவே, சந்தை இடர்நேர்வுகளுக்கான உயர் வெளிப்படுத்துகை அல்லது உயர் பீட்டாவுடன் கூடிய முதலீடொன்று உயர் வருவாயினை ஈட்டுதல் வேண்டும். மூலதனச் சொத்து விலையிடல் மாதிரி என்பது தனி-காரணி கட்டமைப்பொன்றாக இருக்கின்றவிடத்து, நீண்ட காலத்தில் முதலீடுகள் மீதான வருவாய் சந்தைக் காரணிகளுக்கான அதன் வெளிப்படுத்துகையின் மூலம் முழுமையாகத் தீர்மானிக்கப்படுகிறது. எனவே, இழப்பீடு வழங்கப்பட வேண்டிய ஒரேயொரு இடர்நேர்வாகச் சந்தை இடர்நேர்வு காணப்படுகிறது.

மூலதனச் சொத்து விலையிடல் மாதிரியினை விரிவுபடுத்தியதன் மூலம் வணிக விலையிடல் கொள்கை முன்மொழியப்பட்டதுடன், றோஸ் (1976) இது மூலதனச் சொத்து விலையிடல் மாதிரிக்கு மாறாக, முறைமையியல் சார்ந்த இடர்நேர்வின் பல மூலங்களை அனுமதிக்கிறது. இக்கட்டமைப்பின் கீழ் பல முறைமையியல் இடர்நேர்வு (இடர்வுக் காரணிகள்) வருவாய் கட்டணத்தினை உழைக்க முடியும். வருந்தத்தக்க விடயம் யாதெனில் கோட்பாடானது இழப்பீடு வழங்கத்தக்க இடர்நேர்வுக் காரணிகள் பற்றி குறிப்பிடாமையேயாகும். எனினும் வணிக விலையிடல் கோட்பாடானது காரணியினை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டிற்கான கோட்பாடு சார்ந்த தளமொன்றினை வழங்குகின்றது.

மூலதனச் சொத்து விலையிடல் மாதிரி, விலையிடல் முதலீடுகளுக்கான கோட்பாட்டு ரீதியான கட்டமைப்பினை வழங்கிய போதும் அனுபவ ரீதியான சான்றுகள் வேறுவிதமான கதையொன்றினைக் கூறின. பாசுவின் ஆரம்பத்துடன் (1977) ஆராய்ச்சியானது இருப்பு வருவாய்கள் இருப்புப் பண்புகளுடன்

**வரைபடம் 1 இருப்பு மற்றும் முறி காரணி வெளிப்படுத்துகை**

| | விபரணம் |
|---|---|
| சந்தை | இருப்புக்கள் இடர்நேர்வற்ற வீதத்திற்கும் மேலாக வருவாயினை உழைக்கின்றன |
| பெறுமதி | செலவில்லாத இருப்புக்கள் செலவு இருப்புக்களுக்கும் மேலாக வருவாயினை உழைக்கின்றன |
| அளவு | சிறிய கம்பனிகளின் இருப்புக்கள் பாரிய கம்பனிகளின் இருப்புக்களுக்கும் மேலாக வருவாயினை உழைக்கின்றன |
| உத்வேகம் | வலுவான அண்மைய செயலாற்றத்துடன் கூடிய இருப்புக்கள் பலயீனமான அண்மைய செயலாற்றத்தினைக் கொண்ட இருப்புக்களுக்கும் மேலான வருவாயினை ஈட்டுகின்றன |
| குறைந்த தளம்பல் | குறைந்த தளம்பல்களுடன் கூடிய இருப்புக்கள் உயர்ந்த தளம்பல்களைக் கொண்ட இருப்புக்களிலும் பார்க்க உயர்ந்த இடர்நேர்வு - சீராக்கப்பட்ட வருவாய்களை ஈட்டுகின்றன |
| காலம் | நீண்ட முதிர்ச்சிகளைக் கொண்ட முறிகள் குறுகிய முதிர்ச்சிகளைக் கொண்ட முறிகளுக்கும் மேலான வருவாயினை ஈட்டுகின்றன |
| கொடுகடன் | குறைந்த கொடுகடன் முறிகள் உயர்ந்த கொடுகடன் முறிகளுக்கும் கூடுதலான வருவாயினை ஈட்டுகின்றன |

மூலம்: வன்கார்ட் றிசேர்ஜ்

தொடர்புட்டிருந்தமைக்கான சான்றுகளை எடுத்துக்காட்டத் தொடங்கின. இத்தொடர்பு முறைகள் மூலதனச் சொத்து விலையிடல் மாதிரிக் கோட்பாட்டுடன் இணங்கிச் செல்லாமையின் காரணமாக அவை முரண்பாடுகளாக அடையாளம் காணப்பட்டன. அவ்வாறு அடையாளம் காணப்பட்ட முதலாவது முரண்பாடு அளவின் தாக்கமாகும். பான்ஸ் (1981), சிறிய உச்சஎல்லையினைக் கொண்ட இருப்புக்களின் சொத்துப்பட்டியலானது பாரிய உச்சஎல்லையினைக் கொண்ட இருப்புக்களின் சொத்துப்பட்டியலிலும் பார்க்க உயர்ந்த இடர்நேர்வு-சீராக்கப்பட்ட வருவாய்களைக் கொண்டிருப்பதனை நிறுவினார். பாமா மற்றும் பிரென்ச் (1992) இருப்புக்களின் பண்புகளுக்கும் வருவாய்களுக்குமிடையிலான உறவுகளை எடுத்துக்காட்டினர். பாமா - பிரென்ச் மூன்று காரணி மாதிரியானது இருப்புச் சொத்துப்பட்டியலின் வருவாய் வேறுபாட்டுத்தன்மையினை சந்தை, அளவு மற்றும் பெறுமதி ஆகிய மூன்று காரணிகளுக்கான சொத்துப்பட்டியலின் வெளிப்படுத்துகை மூலம் விளக்க முடியும் என்பதனை வலியுறுத்தியது.

சொத்து-வகுப்பு முதலீடுகள் மீதான வருவாயினை விளக்குவதற்குப் புறம்பாக, ஆராய்ச்சியானது, செயற்படுகின்ற முகாமையாளர்களினால் உருவாக்கப்பட்ட மிகையான வருவாய்களும் காரணி வெளிப்படுத்துகைகளுடன் தொடர்பானவையாக இருக்கமுடியும் என்பதனை எடுத்துக்காட்டியிருக்கிறது. பெஸ்டரும் மற்றையவர்களும் (2014) செயற்படுகின்ற முகாமையாளர்களினால் உருவாக்கப்பட்ட அல்பாவின் (மிகையான வருவாய்) 80 சதவீதம் வரையான அளவிற்கு அவர்களது சொத்துப்பட்டியலின் காரணி வெளிப்படுத்துகை மூலமே விளக்கமுடியும் என்பதற்கு சான்றுகளை வழங்குகின்றனர். இதேபோன்று போஸ், விம்மர் மற்றும் பிலிப்ஸ் ஆகியோர் (2013) காரணிகளின் சரிவுகள் தீவிரமான முறி நிதியச் செயலாற்றத்தின் முக்கிய தூண்டு விசையாக இருக்கின்றமையினை எடுத்துக்காட்டினர். இரண்டு ஆய்வுகளும் செயற்படாத முதலீடுகளின் வருவாயினை நிர்ணயிப்பதில் காரணிகள் முக்கியமான வகிபாகமொன்றினை ஆற்றுவதனை மட்டுமன்றி அவை செயற்படுகின்ற சொத்துப்பட்டியல்களின் வெற்றிகரமான முகாமையாளர்களின் வருவாயிலும் இன்றியமையாத வகிபாகமொன்றினைக் கொண்டிருப்பதனை எடுத்துக்காட்டின.

**8. காரணி முதலீடுகளைச் செய்தல் மற்றும் நிலையான வருமான முதலீடுகள் (வரைபடம் 2)**

**9. முடிவுரை**

பொதுவாக, சந்தை உச்ச-நிறையேற்றப்பட்ட சுட்டெண்ணானது சொத்து வகுப்பொன்றினையும் சிறந்த சொத்து நிருமாணக் கலந்தாராய்வுகளுக்கான தொடக்கப் புள்ளியினையும் சிறந்த முறையில் பிரதிநிதித்துவம் செய்கிறது. எனினும், காரணிகளை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டு

**வரைபடம் 2: நிலையான வருமான முதலீட்டிலுள்ள முக்கியமான நவீனத்துவக் காரணிகள்**

| | |
|---|---|
| காலம் | - **ஒரேவிதமான கொடுகடன் தரத்தின் குறுங்கால திகதியிடப்பட்ட முறிகளிலும் பார்க்க நீண்ட கால திகதியிடப்பட்ட முறிகளின் வருவாய் அதிகமாக இருத்தல்**<br>- கால சொத்துப்பட்டியல் முதிர்ச்சி வளையி முழுவதிலுமான அனைத்துத் திறைசேரி முறிகளையும் வாங்குகிறது |
| கொடுகடன் | - **ஒரேவிதமான முதிர்ச்சியில், உயர்ந்த வீதத்திலமைந்த கொடுகடனை விட குறைந்த வீத கொடுகடனின் வருவாய் அதிகமாக இருத்தல்**<br>- கொடுகடன் சொத்துப்பட்டியல் அனைத்து முதிர்ச்சிகள் மற்றும் வீதப் பிரிவுகள் அனைத்தையும் கொண்ட கொடுகடன் முறிகளை வாங்குகிறது |
| பெறுமதி | - **ஒரேவிதமான முறிகளுக்கான கழிவிடலில் உடமை முறிகளின் வருவாய்**<br>- ஒரே தொழில் துறையிலுள்ள ஒரேவிதமான வட்டி வீதத்தினைக் கொண்ட முறிகளிலும் பார்க்க உயர்ந்த வீச்சுடன் கூடிய முறிகளைப் பெறுமதிச் சொத்துப்பட்டியல் வாங்குகிறது |
| நிறைவேற்றல் | - **மிக உயர்ந்த ஒட்டுமொத்த விளைவு**<br>- நிறைவேற்றல் சொத்துப்பட்டியலானது இவ்வளவையியல் மூலம் தரம் பிரிக்கப்பட்ட முதல் 10 சதவீத முறிகளை வாங்குவதுடன் மிகக் குறைந்த 10 சதவீதத்தினை விற்பனை செய்கிறது |
| திரவத்தன்மை | - **வயது மற்றும் அளவு**<br>- திரவத்தன்மை சொத்துப்பட்டியலானது இவ்வளவையியல் மூலம் தரம் பிரிக்கப்பட்டவாறு குறைந்த திரவத்தன்மையினைக் கொண்ட முறிகளை வாங்குவதுடன் கூடியளவு திரவத்தன்மை கொண்ட முறிகளை விற்பனை செய்கிறது. |

மூலம்: இன்வெஸ்கோ. தெளிவுபடுத்தல் நோக்கத்திற்காக மாத்திரம் எளிமைப்படுத்தப்பட்ட திட்டவியலை வழங்குகிறது.

அணுகுமுறையில் ஆர்வமுடைய முதலீட்டாளர்கள் அவர்களது செயற்படுகின்ற இடர்நேர்விற்கான தாங்கும்தன்மை, அவர்களது முதலீட்டிற்கான அடிப்படைக் காரணத்திற்கு ஆதரவளிக்கின்ற குறித்துரைக்கப்பட்ட காரணிகள் மற்றும் காரணியினை அடிப்படையாகக் கொண்ட வருவாய்களின் சுழற்சி அடிப்படையிலான வேறுபாடுகள் என்பன உட்பட மேலதிக மற்றும் மிக முக்கியமான பிரச்சனைகளைப் பரிசீலனையில் கொள்ள வேண்டியுள்ளது. அனுபவ ரீதியான ஆராய்ச்சிகள், சில பொதுவான காரணி வெளிப்படுத்துகைகள் செயற்படுகின்ற முதலீடுகளின் பன்முகப்படுத்தப்பட்ட வீச்சின் மீதான வருவாய்களை விளக்க முடியும் என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. எனவே, முதலீட்டாளர்கள் காரணியினை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகளைப் பயன்படுத்தி இவ்விடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை அகற்றக்கூடியவர்களாக இருந்தனர். மேலும், காரணியினை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகளைச் செய்தல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டு இடர்நேர்வு மற்றும் வருவாய் பெறுபேறுகளை எய்துவதனையும் அதேவேளையில் பெருமளவு வெளிப்படைத்தன்மையினையும் அதிகரித்த கட்டுப்பாடுகளையும் குறைந்த செலவில் அடைவதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

**உசாத்துணை நூல்கள்:**


Ashby Monk, 2011. Factor based investment strategies, Canadian Investment Review.

Banz, Rolf W., 1981. The Relationship Between Return and Market Value of Common Stocks. Journal of Financial Economics 9: 3–18.

Basu, Sanjoy, 1977. Investment Performance of Common Stocks in Relation to Their Price-Earnings Ratios: A Test of the Efficient Market Hypothesis. Journal of Finance 32: 663–82.

Bender, Jennifer, Remy Briand, Frank Nielsen, and Dan Stefek, 2010. Portfolio of Risk Premia: A New Approach to Diversification. Journal of Portfolio Management 36: 17–25.

Bender, Jennifer, P. Brett Hammond, and William Mok, 2014. Can Alpha Be Captured by Risk Premia? Journal of Portfolio Management 40: 18–29,12.

Bhansali, Vineer, 2011. Beyond Risk Parity. Journal of Investing 20: 110,137–47.

Bird, Ron, Harry Liem, and Susan Thorp, 2013. The Tortoise and the Hare: Risk Premium Versus Alternative Asset Portfolios. Journal of Portfolio Management 39: 112–22.

Bosse, Paul M., Brian R. Wimmer, and Christopher B. Philips, 2013. Active Bond-Fund Excess Returns: Is It Alpha . . . or Beta? Valley Forge, Pa.: The Vanguard Group.

Fama, Eugene F., and Kenneth R. French, 1993. Common Risk Factors in the Returns on Stock and Bonds. Journal of Financial Economics 33: 3–56.

Fama, Eugene F., and Kenneth R. French, 1992. The Cross- Section of Expected Stock Returns. Journal of Finance 47: 427–65.

Warren, B., and Quance, S., 2019. Foundational concepts for understanding factor investing, Invesco.

Ilmanen, Antti, and Jared Kizer, 2012. The Death of Diversification Has Been Greatly Exaggerated. Journal of Portfolio Management 38: 15–27.

Lintner, John, 1965. The Valuation of Risk Assets and the Selection of Risky Investments in Stock Portfolios and Capital Budgets. Review of Economics and Statistics 47: 13–37.

Mossin, Jan, 1966. Equilibrium in a Capital Asset Market. Econometrica 34: 768–83.

Ross, Stephen A., 1976. The Arbitrage Theory of Capital Asset Pricing. Journal of Economic Theory 13: 341–60.

Scott N. Pappas, Joel M. Dickson. 2015. Factor –based investing. Vanguard Research.

Sharpe, William F., 1964. Capital Asset Prices: A Theory of Market Equilibrium Under Conditions of Risk. Journal of Finance 19: 425–42.

Treynor, Jack, 1961. Market Value, Time and Risk. Unpublished manuscript, 95–209.

# உலகம் முழுவதிலும் நாணயத்தினைப் பயன்படுத்துவதில் காணப்படும் புதிய போக்குகள்: மெய்நிகர் நாணயம்

**எஸ்.ஏ.வை.கே. சமரதுங்க,** மூத்த துணைப் பணிப்பாளர்
நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

உலகம் முழுவதிலும் நாணயங்களைப் பயன்படுத்துவதில் காணப்படும் புதிய போக்குகள் தொடர்பான இக்கட்டுரையானது, உலகிலுள்ள நாணயத்தின் பயன்பாடு தொடர்பில் மாற்றமடைந்துவரும் பார்வை பற்றி ஆராய்கிறது. உலகின் மூன்றாவது கைத்தொழில் புரட்சி என அறியப்படுகின்ற டிஜிட்டல் புரட்சிக்கு மத்தியில், 20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக மாற்றமடைந்து வருகின்ற நாணயம் பற்றி அறிந்து கொள்வதற்கான பேரார்வம் பற்றிய பார்வை பிந்திய தொழில்நுட்பவியல் அபிவிருத்திகளுடன் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. இக்கட்டுரையானது பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வன் நாணயங்கள் மற்றும் மெய்நிகர் நாணயங்களின் பரிணாம வளர்ச்சியின் மீது கவனத்தினைச் செலுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. வன் நாணயங்களுக்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. எதிர் மெய் நாணயங்களுக்கான கேள்வி குறைவடைந்து வருகின்றது என்ற இரண்டு விவாதங்கள் தொடர்பில் மிக அண்மைக் காலமாகப் பெருமளவிற்குக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இதுவும் இக்கட்டுரையின் இறுதிப்பகுதியிலும் ஆராயப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட சூழலில், ஒதுக்கு முகாமையாளர்கள் வருவாய்களை அதிகரிப்பதற்கான மாற்று முறைகள் பற்றி ஆராய்ந்து வருகின்ற அதேவேளையில், ஒதுக்குகளின் உயர்ந்தபட்ச பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துகின்றனர். அவ்வாறு மேற்கொள்ளும் பொழுது, முறி விளைவுகளுக்கும் முறி முதிர்ச்சிகளுக்குமிடையிலான தொடர்பு முறையாக விளங்கி வருகின்ற விளைவு வளையியை, விளைவு வளையியின் வடிவம் மற்றும் அதன் எதிர்பார்க்கப்படும் நகர்வு என்பனவற்றின் அடிப்படையில் தீவிரமான வர்த்தகப்படுத்தல் உபாயங்களைப் பயன்படுத்தி, வருவாயினை அதிகரிக்கின்றதொரு வழிமுறையாகப் பயன்படுத்த முடியும்.

## அறிமுகம்

1990களின் நடுப்பகுதிக்குப் பின்னர் பிறந்த ‘Z’ என அழைக்கப்படும் புதிய தலைமுறையினர், புத்தாயிரமாம் ஆண்டு தலைமுறையினர் என அழைக்கப்படும் ‘Y’ தலைமுறையினரையும் ‘X’ தலைமுறையினர் மற்றும் குழந்தைகள் ஆகியோரையும் எண்ணிக்கையில் விஞ்சிக் காணப்படுகின்றனர் (ஹொரோவிட்ஷ் 2012). தலைமுறை ‘Z’ இன் நோக்கு, சிந்தனையின் மாதிரி என்பன கடுமையான முறையில் மாற்றமடைந்திருக்கின்றன. தலைமுறை ‘Z’ குடித்தொகையினர் இணையத்தளமும் திறன் கைத்தொலைபேசிகளும் மலிவாகக் கிடைக்கத்தக்கனவாக இல்லாத போதிலும் கட்டுப்பாடின்றிக் கிடைக்கத்தக்கதாகவுள்ள சூழலொன்றில் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இது தலைமுறை ‘Z’ குடித்தொகையினரை இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் கற்பனை செய்தும் பார்க்க முடியாதிருந்த மின்னஞ்சல், கணனிவழி அதேநேர சங்கீதம், இணையத்தளம், தொலைக்காட்சி, கணனிவழி அதேநேரக் காணொளி நிகழ்ச்சிகள் போன்ற ஒட்டுமொத்த புதிய பணிகளுக்குத் திறந்துவிட்டிருக்கிறது. ஆகவே, மக்கள் ஒருவரையொருவர் தொடர்பு கொள்வதற்கான பழைய வழிகள், குறிப்பாக, பொருளாதாரக் கொடுக்கல்வாங்கல்கள் விரைந்த வேகத்தில் பரிணாமமடைந்திருக்கின்றன. ஏறத்தாழ ஓர் நூற்றாண்டிற்கு முன்னர் நிலவிய தங்க நியமங்கள் தொடர்பான சிந்தனையும் அந்நேரத்தில் நாணயப் பயன்பாட்டில் செல்வாக்கினைச் செலுத்தியது. எனினும், அத்தகைய நடைமுறைகள் இளந்தலைமுறையினரின் புருவங்களை உயர்த்தின. பொருளாதாரக் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட நாணயத்தின் நவீன முறைகளே இதற்குக் காரணமாகும்.

தங்க நியமங்கள் 1880 இலிருந்து 1914 வரையான காலப்பகுதியில் முக்கியமாக இடம்பெற்றிருந்ததுடன் அக்காலப்பகுதியில் ஒவ்வொரு நாட்டினதும் பண இருப்பு தங்கம் அல்லது வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகங்களில் கணக்கிடப்பட்டதுடன் அத்தகைய தங்கம் அல்லது வெள்ளி ஒதுக்குகளின் மூலம் தாள் நாணயங்கள் உத்தரவாதப்படுத்தப்பட்டன. இது பணச் சபை முறைமை என அழைக்கப்பட்டதுடன் இதில் நாடொன்றிலுள்ள உள்நாட்டுப் பணத்தின் இருப்பு, தங்கம் அல்லது வெள்ளியில் ஒதுக்குகளாக


வைத்திருக்கப்பட்ட நேரத்தில் வைத்திருக்கப்பட்ட பணத்தின் இருப்பினைப் பொறுத்ததாக இருந்தது. இது பன்னாட்டு வர்த்தகத்தின் பாய்ச்சலின் மீது வரையறைகளை விதித்ததுடன் பொருளாதார நடவடிக்கைகளின் மீது வரையறைகளைத் தோற்றுவித்தது. நாடொன்று வர்த்தகப் பற்றாக்குறையினைக் கொண்டிருக்குமாயின் அது பண இருப்பில் குறைவினைத் தோற்றுவித்ததுடன் நாடு வர்த்தக மிகையினைக் கொண்டிருக்குமாயின், அதன் விளைவாகப்பணத்தின் இருப்பில் அதிகரிப்பு ஏற்படும். பண இருப்பில் ஏற்படும் குறைப்பு மூலப்பொருட்களின் கிடைப்பனவின் அதிகரிப்பினைக் குறைத்துவிடுவதன் விளைவாக அந்நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளும் அவற்றிற்கேற்ப கட்டுப்படுத்தப்படுகிறது.

பிற்காலத்தில், தங்க நியமம், நிலையான செலாவணி வீத முறைமைக்கு மாற்றப்பட்டதுடன் இதில், ஒவ்வொரு நாட்டினதும் நாணயப் பெறுமதி, தங்கம் அல்லது வெள்ளியின் ஒதுக்கினது பெறுமதியில் தங்கியிராது ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் பரிவர்த்தனைகளைச் செய்யும் விதத்தில் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டன. எனினும், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சனாதிபதி றிச்சார்ட் நிக்சன் - ஐக்கிய அமெரிக்க டொலர்களை தங்கத்திற்கு அல்லது ஏனைய ஒதுக்குச் சொத்துக்களுக்கு மாற்றிக் கொள்வது ஒழிக்கப்பட்டது எனவும் எந்தவொரு நாடும் தங்கத்திற்காக தமது டொலர்களைப் பரிமாற்றிக் கொள்ளத் தேவையில்லை எனவும் அறிவித்த வேளையான 1971 வரை தங்க நியமம் முழுமையாகக் கைவிடப்படவில்லை. தங்கத்தினை மாற்றிக் கொள்ளும் முறைமை ஒழிக்கப்பட்டதன் பின்னர் பெரும்பாலான நாடுகள், பன்னாட்டு வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தமது சொந்த நாணயங்களைப் பயன்படுத்தத் தொடங்கின, எனினும், இடையேற்பாட்டு நாணயமாக ஐக்கிய அமெரிக்க டொலர் பயன்படுத்தப்பட்டது. இது, ஐ.அ.டொலரின் பிரபல்யத்தன்மையினை உத்வேகப்படுத்தியதுடன் அப்போதையிலிருந்து இது முன்னணி நாணயமாக மாறியதுடன் இன்றுவரை ஐ.அ.டொலர் மிக முன்னுரிமை வாய்ந்த பன்னாட்டு ஒதுக்கு நாணயமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆகவே, பன்னாட்டு ஒதுக்குகளின் இருப்பு பெரும்பாலான நாடுகளினால் ஐ.அ.டொலரிலேயே வைத்திருக்கப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்ட அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குத் தரவுத்தளத்தின்

**வரைபடம் 1: நாணய வகையின்படி பன்னாட்டு அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள்**

**அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் நாணய உள்ளமைப்பு (1965 - 2018)**



மூலம்: www.data.imf.org

நாணய உள்ளமைப்பின்படி, பன்னாட்டு ஒதுக்குகளில் பெரும்பாலானவை, மேலே வரைபடம் 1இல் காட்டப்பட்டவாறு ஐக்கிய அமெரிக்க டொலரில் வைத்திருக்கப்படுகின்றன. இது 2019இன் முதற்காலாண்டு இறுதியில் (ப.நா.நிதியம், 2019) 62 சதவீதத் தொகையாகக் காணப்பட்டது. ஐ.அ.டொலருக்கு முன்னர் ஒதுக்கு நாணயமாகப் பிரித்தானியாவின் ஸ்டேர்லிங் பவுண் பயன்படுத்தப்பட்டது. இது 105 ஆண்டுகளாக அதாவது 1815 இலிருந்து 1920 வரை பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. ஸ்டேர்லிங் பவுணுக்கு முன்னதாகப் பிரான்சிய பிராங் 1720 இலிருந்து 1815[1] வரையான 95 ஆண்டுகள் வரை பிரகடனப்படுத்தப்பட்ட நாணயமாகக் காணப்பட்டது.

1. மூலம்: _____, (2016, Jun 08). History of World Reserve Currencies. Retrieved July 24, 2019, from Philosophy of Metrics (FREEPOM #12):https://philosophyofmetrics.com/history-of-world-reserve-currencies.

### பணத்தின் தொழிற்பாடு

இக்கட்டத்தில், நாணயப் போக்கின் மூலைக்கல்லான பணத்தின் தொழிற்பாடுகளை அடையாளம் காண்பது முக்கியமானதொன்றாகும். பணத்தின் மூன்று முக்கிய தொழிற்பாடுகள் காணப்படுகின்றன. முதலாவதாக, பணம், பொருட்கள் மற்றும் பணிகளின் பெறுமதியினை அளவிடுவதற்கான கணக்கின் அலகொன்றாகப் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவதாக, பணப் பரிமாற்று ஊடகமொன்றாகப் பயன்படுத்தப்படுகிறது. மூன்றாவதாக, பணத்தினை பெறுமதியின் சேமிப்பியாகப் பயன்படுத்த முடிகிறது. இங்கு இதனை எதிர்காலத்தில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காகப் பயன்படுத்த முடியும். உதாரணமாக, நீங்கள் ரூ.60 பெறுமதியான பாண் துண்டொன்றினை நாளைக்கு வாங்க வேண்டுமாயின் நாளைக் காலையில் வெதுப்பகத்திற்குச் செலுத்துவதற்கு இன்று உங்கள் கையில் நாணயத் தாள்களோ குற்றிகளோ இருத்தல் வேண்டும்.

### பண்டப் பணம் மற்றும் கட்டளைப் பணம்

பணத்தின் மரபுவழி வரைவிலக்கணமானது பணம் என்பது பரிமாற்று ஊடகமாகவும் பெறுமதியினை அளவிடுவதற்காகத் தொழிற்படுகின்ற எந்தவொரு பண்டமும் பணமே எனக் குறித்துரைக்கிறது. ஆகவே, பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், பண்ட மாற்று முறைமையின் கீழ், பசு, குதிரை, ஆடு, பன்றி, கருவாடு, தானியங்கள், கற்கள், கோழி, கடல் சிப்பி, ஓடுகள், தோல், உலோகம் போன்றவையெல்லாம் பணமாகக் கருதப்பட்டன. அத்தகைய பணம் இயற்கையான பெறுமதியினையே கொண்டிருந்தன என்பதனைப் புரிந்து கொள்வது முக்கியமானதாகும். ஏனெனில் பணமாகப் பயன்படுத்தப்பட்ட பண்டங்கள் நீண்ட காலத்திற்கு அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட பெறுமதியினைக் கொண்டிருக்கவில்லை. எனினும், அதன் பின்னர் பணத்தின் பயன்பாடு தங்கம் மற்றும் வெள்ளி போன்ற பெறுமதிமிக்க உலோகங்களுக்கு மாற்றமடைந்ததுடன் அவற்றிற்கு நியம பெறுமதியொன்றும் வழங்கப்பட்டது. ஆகவே, இயற்கையான பெறுமதி அல்லது உருக்குப் பெறுமதி நாணயத்தின் முகப்பில் பதிக்கப்பட்டுள்ள பெறுமதியினைவிட வேறுபட்டதாக இருந்தது. ஏனெனில் குத்திகளின் நிரம்பல் அத்தகைய வகையிலான உலோகங்களின் பாரிய படிவுகளைக் கண்டுபிடிப்பதிலேயே தங்கியிருந்தது.

கடந்த பல தசாப்தங்களில் பணத்தின் வரைவிலக்கணம் பரிணாம வளர்ச்சியைக் கண்டுள்ளது. மத்திய வங்கிகள் நாணயத் தாள்களையும் குற்றிகளையும் மிகுந்த திரவச்சொத்துக்களாகக் கருத்தியவிடத்து தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களை நாணயத் தாள்களுக்கும் குற்றிகளுக்குமான மிக நெருங்கிய பதிலீடுகளாகக் கருதின. தற்பொழுது, மத்திய வங்கிகள், வங்கியல்லா இடையேற்பாடுகளுக்கெதிரான நிதியியல் கோரல்களையும் பணநிரம்பலுக்குள் ஈர்த்துக்கொள்ளும் விதத்தில் வரைவிலக்கணத்தினை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றன.

எது எவ்வாறெனினும், பண்ட பணம், உலகப் பொருளாதாரத்தில் வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு அத்தியாவசியமானவையாகக் கருதப்படும் சீரான தன்மை, ஒருபடித்தான தன்மை, நியம அளவு மற்றும் நிறை, நீண்ட காலப் பாவனை, சேமித்து வைத்தல், கொண்டு செல்லக்கூடிய தன்மை, பெறுமதியில் உறுதிப்பாடு, வகுத்துக் கொள்ளக்கூடிய தன்மை போன்றவற்றில் போதுமான பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. ஆகவே, மேற்குறிப்பிட்ட அனைத்துப் பண்புகளையும் உள்ளடக்கிய நாணயத்திற்கான கேள்வி கட்டளைப் பணத்தினை அறிமுகப்படுத்துவதற்கு நாணய மேலாண்மையாளர்களைத் தேவைப்படுத்தின. இலத்தீன் சொல்லான “வியட்” என்பதன் பொருள் “அவ்வாறே இருக்கட்டும்” என்பதாகும். கட்டளை நாணயம் வன்பொருள் நாணயமாகவே அறியப்படுவதுடன் பெறுமதிமிக்க உலோகங்களினால் செய்யப்பட்ட நாணயக் குத்திகள் போன்று உண்மையான பெறுமதியினைக் கொண்டிருப்பதில்லை. இன்று பெரும்பாலும் அனைத்து நாடுகளும் பணமாகப் பயன்படுத்தத்தக்க விதத்தில் கட்டளை நாணயங்களை வெளியிடுகின்றன. இவை முக்கியமாக விசேடமான பருத்திக் கூழினால் தயாரிக்கப்பட்ட தாளிலிருந்து தயாரிக்கப்பட்டவையாகும். வரலாற்றுப் பதிவுகளின்படி உலகின் முதலாவது தாள் நாணயம் சோங் அரச வம்சத்தின் கீழ் ஏறத்தாழ 10ஆம் நூற்றாண்டளவில் சீனாவில் வெளியிடப்பட்டது[2].

கட்டளை நாணயத்தில் உண்மையான பெறுமதி கிடைக்கத்தக்கதாக இல்லாமையும் பணத்தின் நடுநிலைத்தன்மைச் சிந்தனையொன்றினைத் தோற்றுவித்தது. பணத்தின் நடுநிலைத்தன்மை என்பதன் கருத்து பௌதீகப் பணம் அல்லது வன்பொருள் பணம் தொழில் நிலை, உண்மை மொ.உ.உற்பத்தி அல்லது உண்மையான நுகர்வு போன்ற உண்மையான மாறிகளின் மீது எந்தவொரு தாக்கத்தினையும் கொண்டிருக்காது என்பதாகும். ஏனெனில், எந்தவொரு பொருள் அல்லது பணியினதும் கேள்வி அத்தகைய பொருள் அல்லது பணியின் கொள்வனவிற்காகப் பயன்படுத்தப்படும் முறையின் மீது தங்கியிருக்காது.

ஆகவே, கட்டளை நாணயம் காலப்போக்கில் பரிணாம வளர்ச்சியடைந்து 10ஆம் நூற்றாண்டிலிருந்து அதன் முதன்மைத் தானத்தினை அடையாளப்படுத்திக் கொண்டதுடன் கணக்கின் அலகு, பரிமாற்று ஊடகம் மற்றும் பெறுமதிச் சேமிப்பு என்ற அதன் தொழிற்பாடுகளை நிறைவேற்றி வருகின்றது. உலகிலுள்ள அனைத்து நாடுகளும் தொடர்பான இறைமையுடைய நாடுகளினால் அல்லது அதிகாரசபைகளினால் வெளியிடப்பட்ட சட்டபூர்வமான நாணயமாகக் கட்டளை நாணயத்தினைப் பயன்படுத்துகின்றன. எனினும், தற்பொழுது, டிஜிட்டல் நாணயம் அல்லது மெய்நிகர் நாணயத்தின்


2. மூலம்: https://en.wikipedia.org/wiki/Fiat_money, accessed on 29.07.2019

வரைபடம் 2 : ஐரோப்பிய மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட அளவீட்டுப் பெறுபேறுகளிலொன்று

## நாட்டின்படி வாடிக்கையாளர்கள் முன்னுரிமையளிக்கின்ற கொடுப்பனவுச் சாதனம்

**வினா: கடையொன்றில் பல்வேறுபட்ட கொடுப்பனவு முறைகள் உமக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவென்று எண்ணுக. நீர் எத்தகைய கொடுப்பனவு முறைமைக்கு முன்னுரிமையளிப்பீர்? (%)**

(சதவீதங்கள்; ஐரோப்பிய பிராந்தியத்திலிருந்தான 42,957 பதிலிறுப்பாளர்களை அடிப்படையாகக் கொண்டது)




மூலங்கள்: ஐரோப்பிய மத்திய வங்கி, டியூச் புண்டர்ஸ் வங்கி மற்றும் டி நெதர்லான்ஸ் வங்கி

குறிப்புக்கள்: 2014ஆம் ஆண்டின் ஜேர்மன் அளவீட்டில் "நீர் பொருட்களை வாங்கும் பொழுது பல்வேறுபட்ட கொடுப்பனவுத் தேர்வுகளுக்கிடையில் தெரிவொன்றினை மேற்கொள்ள வேண்டியிருக்குமென எண்ணிக்கொள்க. உங்கள் கொள்வனவிற்கு எவ்வாறு கொடுப்பனவுகளை மேற்கொள்வீர்?" என்று ஒரு கேள்வி காணப்பட்டது. வகைகளாக "காசு மாத்திரம் அல்லது முக்கியமாக காசல்லாத வேறு ஏதேனும் கொடுப்பனவு முறை மற்றும் பொருள் கொள்வனவுகளின் சூழ்நிலைகளைப் பொறுத்து ஒன்றில் காசு அல்லது காசல்லாத கொடுப்பனவு முறை." பின்னைய வகை "காசு அல்லது காசல்லாத கொடுப்பனவு முறைகளுக்கிடையில் நீங்கள் தெளிவான முன்னுரிமையொன்றினைக் கொண்டிருக்கவில்லை" என்பதனைக் குறிக்கிறது.

மூலம்: பதிவிறக்க இணைப்பு: https://www.ecb.europa.eu/pub/pdf/scpops/ecb.op201.en.pdf

தோற்றத்துடன் கட்டளை நாணயம் சவால்களுக்குட்பட்டு வருகிறது.


### நாணயத்தின் இலத்திரனியல் நகர்வின் தோற்றம்

நிதிகளின் இலத்திரனியல் நகர்வு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் கட்டளை நாணயம் பரிமாற்று ஊடகம் என்ற அதன் நிலை தொடர்பில் ஆரம்பத்தில் சவால்களுக்குட்பட்டது. 1980 களிலிருந்து பெரும்பாலான கொடுக்கல்வாங்கல்கள் அவை நிதிச் சொத்துக்களுக்கானவையாக அல்லது பண்டங்களுக்கானவையாக இருப்பினும் அவை நேரம் மற்றும் மூலவள நியதிகளில் மிகச் செலவினம் குறைந்தனவாக இருக்கின்றவிடத்து, இலத்திரனியல் கொடுப்பனவு வலையமைப்பு, கணனியூடாக ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு உடனடியாகக் கொடுப்பனவுகளைச் செய்வதனைச் சாத்தியமாக்குகிறது (ரொபின் 1985).

எனினும், வன் நாணயமானது அதிகரித்துச் செல்லும் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் தொழில்நுட்பவியல் புத்தாக்கங்களின் அபிவிருத்திகளுடன் இன்னமும் முன்னேற்றம் கண்டு வருகிறது. எனினும், 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து உண்மை கொடுக்கல்வாங்கல்களுக்கான டிஜிட்டல் நாணயத்தின் தோற்றப்பாட்டுடன் கட்டளைப் பணத்தின் அதாவது நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகள் வடிவிலான நாணயத்தின் பங்கு சவாலுக்குட்பட்டுக் காணப்பட்டது. 2017இல் ஐரோப்பிய மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட அளவீட்டின் வினாக்களில் ஒன்றிற்குப் பெறப்பட்ட பதிலின்படி, ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 19 நாடுகளில் 15 நாடுகளிலுள்ள மக்களில் 45 சதவீதத்திற்கும் குறைவானவர்களே கீழேயுள்ள வரைபடம் 2இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு வன் நாணயத்தில் கொடுப்பனவுகளைச் செய்ய முன்னுரிமையளிக்கின்றனர். மறுசொற்களில் கூறுவதாயின் 55 சதவீதத்திற்கும் கூடுதலான மக்கள் வன் நாணயத்தினைப் பயன்படுத்தும் முறையினைத் தவிர்த்து ஏனைய முறைகளில் கொடுப்பனவுகளைச் செய்ய முன்னுரிமை அளிக்கின்றனர். வன் நாணயத்தினைப் பயன்படுத்தும் பழக்கத்திலிருந்து ஏற்படுகின்ற இத்தகைய மாற்றம் பேரேட்டுத் தொழில்நுட்பவியல் மாற்றத்துடன் உத்வேகம் பெறும்.

வரைபடம் 3 : தற்போதைய தீர்ப்பனவு முறைமை எதிர் பகிரப்பட்ட பேரேட்டு தொழில்நுட்பவியல் முறைமை

பகிரப்பட்ட தரவுத்தளத்துடனான பேரேட்டுத் தொழில்நுட்பம் எவ்வாறு நிதியியல் நிறுவனங்களுக்கிடையேயான மூன்றாந்தரப்பினருக்கான தேவையினை இல்லாதொழிக்கிறது?




மூலம்: பீச், எம், மற்றும் காரட், ஆர். (செத்தெம்பர் 2017), மத்திய வங்கி மறைகுறி நாணயங்கள், பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கி காலாண்டு மீளாய்வு, 55-70.

### பேரேட்டுத் தொழில்நுட்பவியல் என்றால் என்ன?

அதன் பரந்த அடிப்படையிலான தன்மையொன்றில் பேரேட்டுத் தொழில்நுட்பம் என்பதன் கருத்து, தரவுகளுக்கு எவருமே சொந்தக்காரர்களோ அல்லது கட்டுப்பாட்டாளர்களோ இருக்காத வலையமைப்பிற்குள் இருக்கும் பல நிறுவனங்களிடையே என்றும் இணைப்புக்களை ஏற்படுத்தும் தரவுத் தளங்களின் வலையமைப்பு என்பதாகும். இவ்வலையமைப்பு பகிரப்பட்ட பேரேட்டு தொழில்நுட்பவியலைப் பயன்படுத்துகிறது. இதன்படி, வலையமைப்பிலுள்ள தரவுத்தளத்திற்கு எவரும் தரவுகளைச் சேர்த்துக் கொள்ள முடியுமெனினும் வலையமைப்பின் பங்கேற்பாளர்களின் உடன்பாடு இல்லாமல் வரலாற்று ரீதியான தரவில் மாற்றங்களைச் செய்யமுடியாது. ஆகவே, வலையமைப்பினைப் பயன்படுத்திக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது, பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் விடயத்தில் நம்பிக்கைக்குரிய மூன்றாந்தரப்பினராக எவரும் இருக்கமுடியாது. தீர்வகத்தினைப் பயன்படுத்துகின்ற பாரம்பரிய முறைக்குப் பதிலாகப் பேரேட்டு முறைமையினால் பயன்படுத்தப்படும் பொறிமுறை மேலேயுள்ள வரைபடம் 3இல் விளக்கப்படுகிறது. பேரேடு கொடுக்கல்வாங்கல்களைப் புகுபதிகை செய்வதற்காக மறைகுறியியல் என அழைக்கப்படும் பொறிமுறையொன்றினைப் பயன்படுத்துகிறது. இது குறிப்பிட்ட கணிதவியல் தீர்வுகளுடன் தரவு அமைப்புக்களைப் பயன்படுத்தி வடிவமைக்கப்படுகிறது.

### மெய்நிகர் நாணயம் என்றால் என்ன?

“மெய்நிகர் நாணயம்” என்பதன் பொருள் பெறுமதியினை டிஜிட்டல் முறையில் சமர்ப்பிப்பதாகும். இது மத்திய வங்கியினால் அல்லது அரச அதிகாரசபையினால் வெளியிடப்படுவதோ அல்லது உத்தரவாதப்படுத்தப்படுவதோ இல்லை. இது சட்ட ரீதியாக நிறுவப்பட்ட நாணயத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்ற அவசியத்தினைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் நாணயத்தின் அல்லது பணத்தின் சட்ட ரீதியான அந்தஸ்தினையும் கொண்டிருக்கவில்லை. எனினும், இயல்பான அல்லது சட்ட ரீதியான ஆட்களினால் பரிவர்த்தனை ஊடகமொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இதனை மாற்றல் செய்ய சேமிக்க அல்லது இலத்திரனியல் ரீதியாக வர்த்தகப்படுத்த முடியும் (தஜானி மற்றும் பவ்லோவா 2018 மே 30). இது, பணிப்புரை (ஐரோப்பிய ஒன்றியம்) 2015/84 இற்கான புதிய திருத்தமொன்றாக பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிக்கும் நோக்கத்திற்காக நிதியியல் முறைமையினைப் பயன்படுத்துவதனைத் தடைசெய்தல் மீதான பணிப்புரை இலக்கம் 2018/843 ஆக 2018.05.30ஆம் நாளன்று ஐரோப்பிய பாராளுமன்றத்தினாலும் சபையினாலும் விடுக்கப்பட்டது. இப்புதிய பணிப்புரையும் பணம் தூயதாக்கலுக்கெதிரான ஐந்தாவது பணிப்புரையாகக் குறிப்பிடப்படுகிறது (கூபென் மற்றும் சினியோர்ஸ் 2018 யூலை). ஐக்கிய அமெரிக்காவில்

பெடரல் வரி விதிப்பு நோக்கங்களுக்காக, மெய்நிகர் நாணயம் சொத்தொன்றாகக் கருதப்படுகிறது. சொத்து கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடைத்தான பொதுவான வரிக்கோட்பாடுகள் மெய்நிகர் நாணயங்களைப் பயன்படுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்களுக்கும் பிரயோகிக்கப்படுகின்றன (ஆகூய் 2014 மாச்சு). மேலும், மெய்நிகர் நாணயம் என்பது மறைகுறி வரையியலைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட டிஜிட்டல் நாணயங்களின் வேறுபட்ட வகைகளின் பாரிய துணைப் பிரிவாகும்.

## மறைகுறி நாணயம் என்றால் என்ன?

மறைகுறி நாணயம் என்பது பாதுகாப்பிற்காக மறைகுறி வரையியலைப் பயன்படுத்துகின்ற டிஜிட்டல் அல்லது மெய்நிகர் நாணயமாகும். “பிட்கொயின்” என அழைக்கப்படும் மறைகுறி நாணயம் தனிப்பட்ட ஒருவரினால் அல்லது சட்டோஷி நகமோட்டோ என அறியப்பட்ட குழுவினால் 2009இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது, கடந்த தசாப்த காலத்தில் பெரும் வளர்ச்சி உத்வேகத்தினை அடைந்தது. பிட்கொயினின் அபிவிருத்தி சட்டோஷி நகமோட்டோவின் பாய்ச்சலுடன் ஆரம்பிக்கப்பட்டது. இவர் 2008இல் பிட்கொயின் “ஒன்றுக்கொன்று சமம் இலத்திரனியல் காசு முறைமை” என அழைக்கப்படும் பத்திரிகையொன்றை வெளியிட்டார். பிட்கொயின் மீதான கொடுக்கல்வாங்கல்களை நடத்துவது தொடர்பான முறை தொடர்பில் கூடுதலாக தகவல்களைப் பெறுவதற்கு சட்டோஷி நகமோட்டோவினால் வெளியிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட பத்திரிகையினைப் பார்க்கவும்.

பிட்கொயின் பேரேட்டினைப் பயன்படுத்தி கொடுக்கல்வாங்கல்களை நடத்துகின்ற முறையினை விளக்குவதற்கு உதாரணமொன்றினை எடுத்துக் கொள்வோம். அனா 100 பிட்கொயின்களை ஜெவ்விற்கு அனுப்புதல் வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் முதலில் அவள் தனது தனிப்பட்ட இரகசியக் குறியீட்டினைப் பயன்படுத்தி (இது அவளுக்கு மட்டுமே தெரியும்) இக்கொடுக்கல்வாங்கலை டிஜிட்டல் முறையில் கையொப்பம் இட்டுக்கொள்ள வேண்டியிருக்கும். அவள் கொடுக்கல்வாங்கலை ஜெவ்வின் பகிரங்க குறியீட்டிற்கு முகவரியிடல் வேண்டும். இது பிட்கொயின் வலையமைப்பின் மீதான ஜெவ்வின் முகவரியாகும். அடுத்ததாக, கொடுக்கல்வாங்கல் தொகுதி ஒப்பிட்டுப் பார்க்கப்படுவதுடன், பிட்கொயின் வலையமைப்பிற்குள்ளேயுள்ள ஒன்றையொன்று சந்திக்கும் புள்ளிகளுடன் சரிபார்க்கப்படுகின்றன. இங்கு அனாவின் பகிரங்கக் குறியீடு அவளது கையொப்பத்தினைச் சரிபார்ப்பதற்குப் பயன்படுத்தப்படும். அனாவின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படின், வலையமைப்பு கொடுக்கல்வாங்கல்களைச் செய்முறைப்படுத்தி, பேரேட்டிற்கு மாற்றல் செய்து அனாவின் 100 பிட்கொயின்களை ஜெவ்விற்கு மாற்றல் செய்யும் (கூபென் மற்றும் சினியோர்ஸ் 2018 யூலை). இது கொடுக்கல்வாங்கலின் ஒவ்வொரு கட்டத்தினையும் மிக இலகுவாக இலத்திரனியல் ரீதியாகப் பதிவுசெய்கிறது. எனினும், கொடுக்கல்வாங்கல் செய்யும் முறை வலையமைப்பில் கட்டியெழுப்பப்பட்டுள்ள தொழிற்பாட்டு முறையினைப் பொறுத்து வேறுபடும்.

பிட்கொயின் வழங்கலுக்குப் பின்னர், நூற்றுக்கணக்கான ஏனைய வகை மறைகுறி நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை உலகிலுள்ள டிஜிட்டல் சந்தைகளில் வர்த்தகப்படுத்தப்பட்டு வருகின்றன. மறைகுறி நாணயங்களின் வேறு பெயர்களாக எதித்திறியம், றிப்பிள், லிட்கொயின், டாஷ் மற்றும் மொனெரோ என்பன காணப்படுகின்றன. அவை மறைகுறி நாணயமென குறிப்பிடப்பட்ட போதும் கூட, அவை எந்த ஒரு இறைமையுடைய நாட்டினாலும் இன்றுவரை சட்ட ரீதியான நாணயமாகக் கருதப்படவில்லை.

இம்மறைகுறி நாணயங்கள், இறைமையுடைய அதிகாரசபைகளினால் வெளியிடப்பட்ட பெரும்பாலான கட்டளை நாணயங்களை அல்லது இணையத்தளமூடாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இணையத்தளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மறைகுறி நாணயச் செலாவணி வீதங்களில் பெருமளவிற்கு வர்த்தகம் செய்யப்பட்டு வருகின்றன. இம்மறைகுறி நாணயங்களின் சந்தை மூலதனமயமாக்கல் ஐ.அ.டொலர் 100 பில்லியனுக்கும் அதிகமாகும். மறைகுறி நாணயம் சிலவற்றின் செலாவணிகளாக பினான்ஸ், கொயின்பேஸ், பிட்றெக்ஸ், கறக்கென் மற்றும் கியூகொயின் என சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடலாம். மேலும், இணையத்தளத்தில் பல பணி வழங்குநர்கள் தோற்றம் பெற்றிருக்கின்றனர். அவர்கள் வங்கித்தொழில் (டிஜிட்டல் வலட்) மற்றும் கொடுகடன் அட்டைப் பணிகள் போன்ற மறைகுறி நாணயங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்க விரும்புகின்றனர்.

## மறைகுறி நாணயத்தின் கட்டுக்கதை

மறைகுறி நாணயங்களின் இவ்வனைத்து வகைகளும் மேலே குறிப்பிடப்பட்டவாறு பண்டமொன்றாக வர்த்தகப்படுத்தப்படுகின்றன. ஆகவே, எந்தவொரு இறைமையுடைய நாட்டினாலும் அல்லது வெளியிடுகின்ற அதிகாரசபைகளினாலும் பரிமாற்று ஊடகமொன்றாக மறைகுறி நாணயங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது தற்பொழுது கேள்விக்குரியதாகவுள்ளது. ஆகவே, மறைகுறி நாணயத்தினை சட்ட ரீதியான நாணயமாகக் கருதமுடியாதிருப்பதுடன் அத்தகைய மறைகுறி நாணயங்களுடன் தொடர்பான முறைமைகளில் ஏற்படும் தவறுகள் அவற்றில் சேமிக்கப்பட்டுள்ள பெறுமதிகளின் பாரிய இழப்புக்களுக்கும் வழிவகுக்கக்கூடும்.

## ஸ்ரேபிள் கொயின் என்றால் என்ன?

ஸ்ரேபிள் கொயின் மறைகுறி நாணயத்தின் மற்றொரு வகையாக இருப்பதுடன், மறைகுறி நாணயத்தின் பெறுமதித் தளம்பல்களைக் குறைப்பதற்காக ஐ.அ.டொலர், யூரோ, யென் போன்ற உண்மையான சட்ட ரீதியான நாணயங்கள் மூலம் உத்தரவாதப்படுத்தப்படுகின்றன. இது, கிறிப்ரோ ஸ்ரேபிள் கொயின் எனவும் அழைக்கப்படுகிறது. ஸ்ரேபிள் கொயின்,

உண்மையான கட்டளை நாணய வகையொன்றிற்கு ஸ்ரேபிள் கொயினை மீட்டுக் கொள்வதற்கு உத்தரவாதமளிக்கிறது. ஸ்ரேபிள் கொயினானது அவற்றின் பெறுமதியில் மிக உயர்ந்த தளம்பல்களைக் கொண்டிருக்கின்ற ஆரம்ப மறைகுறி நாணயத்தின் வகைகளுக்கான மாற்று ஏற்பாடொன்றாகத் தோற்றம் பெற்றிருக்கிறது. ரிதெர் ஐ.அ.டொலர், றூ ஐ.அ.டொலர், ஜெமினி டொலர், பிட்சினி, கனேடியன் ஸ்ரேபிள் கொயின் போன்ற பல வகையான ஸ்ரேபிள் கொயின் வகைகள் சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ளன. அவற்றுள் சில ஐ.அ.டொலர் கனேடியன் டொலர், சீன யுவான் போன்றவற்றினால் (லேட் 2019) உத்தரவாதப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் பல ஒன்றில் கட்டளை நாணயத்தினால் பிணையுறுதி மயப்படுத்தப்பட்ட ஸ்ரேபிள் நாணயங்களாக அல்லது மறைகுறி நாணயத்தினால் பிணையுறுதி மயப்படுத்தப்பட்டவையாகக் காணப்பட்டனவெனினும் சில பிணையுறுதி மயப்படுத்தப்படவேயில்லை.

இந்த ஸ்ரேபிள் கொயின் வகைகள் மறைகுறி நாணயச் சந்தையில் சமநிலையினை ஏற்படுத்துவனவாக செயற்படுகின்றவிடத்து உயர் விலைத் தளம்பல்கள் மறைகுறி நாணயத்தினை ஸ்ரேபிள் கொயினிற்கு மாற்றிக் கொள்வதன் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றவிடத்து, பரிமாற்ற ஊடகத்தினைக் கட்டளை நாணயத்தின் உத்தரவாதப்படுத்தலின் மூலம் இலகுவாக நிறுவிக் கொள்ளமுடியும்.

### மறைகுறிச் சொத்துக்கள்

மறைகுறிச் சொத்துக்கள், நம்பிக்கையான மூன்றாந்தரப்பு இடையேற்பாடுகளுக்கான தேவையில்லாமல் பெறுமதியின் மாற்றங்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் ஆரம்பித்திலேயே வடிவமைக்கப்பட்டிருந்தன (நகமோட்டோ 2008). ஆகவே, மறைகுறிச் சொத்துக்கள் தனிப்பட்ட சொத்து வகையாகக் காணப்படுவதுடன் அவை முக்கியமாக மறைகுறி வரையியலின் மீது தங்கியிருந்ததுடன் அவற்றின் உணரப்பட்ட அல்லது இயல்பாகவே இணைந்துள்ள பெறுமதியின் ஒரு பகுதியாக பேரேட்டு அல்லது அதையொத்த தொழில்நுட்பம் பகிரப்பட்டது (போர்ட் 2018). மறைகுறிச் சொத்துக்கள் எந்தவொரு அரசாங்கத்தினாலோ அல்லது ஏதேனும் அதிகாரசபைகளினாலோ உத்தரவாதப்படுத்தப்படவில்லை என்பதுடன் எந்தவொரு நியாயாதிக்கத்திலும் சட்ட ரீதியான நாணயமாகவும் இருக்கவில்லை. எனினும், சில தனியார் தொழில்முயற்சிகளும் சில அரச துறை நிறுவனங்களும் சில மறைமுகச் சொத்துக்களை கொடுப்பனவாக ஏற்றுக்கொள்வதற்குத் தெரிவுசெய்துள்ளன. குறிப்பாக, சுவிற்சர்லாந்தின் சூக் மாகாணமும் சியாசோஸா மாகாணமும் சில கட்டணங்களின் கொடுப்பனவிற்காக மறைகுறிச் சொத்துக்களை ஏற்றுக்கொண்டுள்ளன (அலென் 2017).


### மத்திய வங்கியின் டிஜிட்டல் நாணயம் என்றால் என்ன?

அண்மையில், மத்திய வங்கிகள் அவற்றின் கொடுக்கல்வாங்கல்களில் பகிரப்பட்ட பேரேட்டு தொழில்நுட்பத்தினை நடைமுறைப்படுத்துவதின் சாத்தியத்தினைக் கண்டறிவது தொடர்பில் பரிசீலித்திருக்கின்றன. வர்த்தக வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினாலும் மத்திய வங்கியில் வைத்திருக்கின்ற ஒதுக்குகள் அல்லது தீர்ப்பனவுக் கணக்குகளின் நோக்கத்திற்காக டிஜிட்டல் பண்டத்துடன் ஏற்கனவே வணிகங்களை மேற்கொண்டுள்ளன. இப்பணம் ஏற்கனவே மத்திய வங்கியின் பொறுப்பாக இருக்கிறது. இவை நாணயக் கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. எனினும், மெய்நிகர் நாணயத்தின் பாரிய தோற்றத்தின் பின்னணியில் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்திற்கான உண்மைக் கருத்தினை இனிமேல் தான் வரைவிலக்கணம் செய்ய வேண்டியிருக்கும்.

ஆகவே, நான்கு முக்கிய சொத்துக்களை அதாவது வழங்குநர் (மத்திய வங்கி அல்லது மற்றையவை) வடிவம் (இலத்திரனியல் அல்லது பௌதீகம்) அடையக்கூடியதன்மை (உலகளாவிய அல்லது மட்டுப்படுத்தப்பட்டவை) மற்றும் மாற்றல் பொறிமுறை (மையப்படுத்தப்பட்டது அல்லது பரவலாக்கப்பட்டவை) என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட பணத்தின் உயர்மட்ட வகைப்படுத்தலின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம் தொடர்பாக தெளிவான புரிந்துணர்வினைக் கொண்டிருப்பது இன்றியமையாததாகும் (பீச் மற்றும் கறாட் 2017 செத்தெம்பர்). இதன்படி, மத்திய வங்கியின் டிஜிட்டல் நாணயத்தினை மத்திய வங்கி பணத்தின் இலத்திரனியல் வடிவம் என வரைவிலக்கணம் செய்யமுடியும் என்பதுடன் "ஒன்றிற்கு ஒன்று சமம்" என அறியப்படும் பன்முகப்படுத்தப்பட்ட விதத்தில் பரிமாற்றம் செய்யவும் முடியும். இதன் கருத்து யாதெனில் மத்திய இடையேற்பாடுகளுக்கான தேவை எதுவுமில்லாமல் செலுத்துபவருக்கும் செலுத்தப்படுபவருக்குமிடையில் நேரடியாகக் கொடுக்கல்வாங்கல் இடம்பெறுவதாகும். தூய வடிவத்திலமைந்த ஒன்றுக்கொன்று சமமான கொடுக்கல்வாங்கல்கள் என்பது காசு பரிமாற்றமாகவும் கணனி வலையமைப்பிலும் காணப்படுவதுடன் மத்திய சேமிப்பியின் தேவையில்லாமல் கொடுக்கல்வாங்கல்களை செய்முறைப்படுத்தவும் முடிகிறது.

பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கியின்படி, மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்தினை பொதுவான நோக்கிற்கான மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம், மொத்த விற்பனைக்கான மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம் என வகைப்படுத்த முடியும். இதில், பொதுவான நோக்கத்திற்கான டிஜிட்டல் நாணயமானது நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகளுக்குப் பதிலாக நாளாந்தக் கொடுக்கல்வாங்கல்களுக்காக பொதுமக்களினால் பயன்படுத்தப்படும் மத்திய வங்கியின் டிஜிட்டல் நாணயங்களைக் குறிப்பதுடன் மொத்த விற்பனை என்பது பாரிய பெறுமதி தீர்ப்பனவுகளுக்காகப் பயன்படுத்தப்படும் மத்திய வங்கியின் டிஜிட்டல் நாணயத்தினைக் குறிக்கிறது. இவை மத்திய வங்கி வைப்புக்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன்

### வரைபடம் 4 : பண மலர் - பணத்தின் உயர் பிரிவு




மூலம்: பீச், எம், மற்றும் காரட், ஆர். (செத்தெம்பர் 2017), மத்திய வங்கி மறைகுறி நாணயங்கள், பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கி காலாண்டு மீளாய்வு, 55-70.

பகிரப்பட்ட பேரேட்டு தொழில்நுட்பவியல் போன்ற புதிய தொழில்நுட்பவியலும் பின்பற்றப்பட்டது.

இதனைப் மேலே காட்டப்பட்டுள்ள வென் வரைபடத்தின் மூலம் மிக இலகுவாக விளங்கமுடியும். இது பண மலர் என அழைக்கப்படுகிறது. இதில் பல்வேறுபட்ட பண வகைகள் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்தினை விளங்கிக் கொள்வதற்காக நான்கு முக்கிய சொத்துக்களாக அதாவது வழங்குநர், வடிவம், அணுகும்தன்மை மற்றும் மாற்றல் பொறிமுறை என்பனவற்றின்படி வேறுபட்ட பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

### மறைகுறி நாணயத்திற்கெதிரான விவாதங்கள்

மறைகுறி நாணயத்தில் காணப்படும் ஓரளவு அநாமதேயத்தன்மை கொடுக்கல்வாங்கலின் அடிப்படை நோக்கத்தினை வெளிப்படுத்தாது என்பதனால் நாணய வர்த்தகத்தினை மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கச் செய்கிறது. வன் நாணயத்தினைப் பொறுத்தவரை அத்தகைய நிலைமை ஏற்படாது. இதேபோன்று வலையமைப்பின் வடிவமைப்பு உயர்பளுமிக்க கொடுக்கல்வாங்கல் வீதங்களைக் கையாளமாட்டாது என்பதனால் மறைகுறி நாணயத்தின் கட்டுப்பாடற்ற பயன்பாட்டினையும் கட்டுப்படுத்துகிறது.

மேலும், மறைகுறி நாணயத்தின் பாதுகாப்பு இன்னமும் கேள்விக்குரியதாகவே காணப்படுகின்றது. பிட்கொயின் ஆரம்பமானதிலிருந்தே அறிக்கையிடப்படுகின்ற களவு விடயங்கள் மறைகுறி நாணயச் சந்தைக்குப் புதிதாக நுழைபவர்களைக் குழப்பமடையச் செய்கின்றன. அரசாங்கத்தின் கண்காணிப்புப் பொறிமுறையும் சட்டவாக்க அதிகாரங்களும் போதாமல் இருப்பது பல்வேறு தகவல்களைத் தவறான முறையில் கையாள்வதற்கும் மெய்நிகர் நாணயத்தினைப் பயன்படுத்தி செல்வத்தினை உருவாக்கிக் கொள்வதற்கும் தவறுபுரிபவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குகின்றன.

மேலும், மறைகுறி நாணயம் பெரும்பாலும் ஒரு பண்டம் போன்று கையாளப்பட்டு வருவதுடன் இது கணனிவழி அதேநேர பரிமாற்றமாக வர்த்தகம் செய்யப்படுகிறது. ஆகவே, மறைகுறி நாணயம், நாணயத்திலும் பார்க்க பெறுமதிகளைச் சேமிப்பதற்கான பண்டமொன்றாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது பரிமாற்று ஊடகமாக அல்லது கணக்கு அலகாகச் செயற்பட முடியும். மறைகுறி நாணயத்தில் சேமிக்கப்பட்டுள்ள பெறுமதியானது மறைகுறி நாணயத்திற்கான கேள்வியின் உணர்வு பூர்வமான தன்மை காரணமாக குறிப்பிடத்தக்களவிற்கு தளம்பலடைகின்றது. மறைகுறி நாணயத்தின் பெறுமதியில் காணப்படும் நம்பிக்கை இழப்பு காரணமாக இந்நாணயத்தினைக் குறிப்பிடத்தக்க நீண்ட காலப்பகுதிக்கு உடமையில் வைத்திருப்பதற்கு அதன் விலைத் தளம்பல்கள் வாடிக்கையாளர்களை ஊக்கம் குன்றச் செய்கின்றன. இது, முறைமை பழுதடைகின்ற சந்தர்ப்பத்தில் மறைகுறி நாணயத்தினை உடமையில் வைத்திருக்கும் சட்டபூர்வத்தன்மை பற்றிய சந்தேகங்களுக்கு

| நாடு | எடுக்கப்பட்ட வழிமுறைகள் |
|---|---|
| சீனா | 2013 திசெம்பர் 5ஆம் நாளன்று சீன மத்திய வங்கி பிட்கொயின் கொடுக்கல்வாங்கல்களைக் கையாள்வதிலிருந்தும் நிதியியல் நிறுவனங்களைத் தடைசெய்தது. தனிப்பட்டவர்களும் தனியான தரப்பினரும் பிட்கொயினைச் சட்டபூர்வமாக வர்த்தகம் செய்யலாம். |
| ருஷ்யா | 2015 பெப்புருவரியில் ருஷ்ய வழக்குத்தொடுநர் நாயகத்தின் அலுவலகம் பிட்கொயினைத் "தனிப்பட்டவர்களோ சட்ட நிறுவனங்களோ பயன்படுத்த முடியாது என அறிவித்தது". |
| யப்பான் | பிட்கொயினை வர்த்தகப்படுத்தல், பிட்கொயினைக் கொள்வனவு செய்தல் என்பனவற்றிலிருந்தான இலாபங்களும் கொடுக்கல்வாங்கலிலிருந்தான வருமானங்களும் வரிவிதிப்பிற்குள்ளாக்கப்பட்டன. வங்கிகளும் பிணையங்கள் நிறுவனங்களும் பிட்கொயின் வர்த்தகங்களிலிருந்து தடைசெய்யப்பட்டன. |
| ஜேர்மனி | குறைந்தபட்சம் ஓராண்டிற்கு திரட்டி வைக்கப்பட்டிருந்தாலொழிய, மூலதன இலாப வரிக்குட்பட்டு சுரங்கமகழ்தல் அல்லது வர்த்தகப்படுத்தலிலிருந்தான இலாபம். |
| இந்தியா | இந்திய ஒதுக்கு வங்கியின் செயலாளர் நாயகம் அஜித் பிரசாத் "கொடுப்பனவு ஊடகமொன்றாக பிட்கொயின் உட்பட, மெய்நிகர் நாணயங்களை உருவாக்குதல், வர்த்தகப்படுத்தல் அல்லது பயன்படுத்தல் என்பன எந்தவொரு மத்திய வங்கியினால் அல்லது நாணய அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்படவில்லை" எனக் குறிப்பிடுகின்றார். எனினும், மறைகுறி நாணயங்கள் தற்பொழுது ஒழுங்குமுறைப்படுத்தப்படுவதில்லை. |
| தாய்வான் | பிட்கொயின் தன்னியக்கக் கூற்றுப் பொறிக்கான ஒப்புதல் மறுக்கப்பட்டது. |

வழிவகுக்கிறது. மறைகுறி நாணயத்தினை அதன் தற்போதைய சந்தையிலும் நாட்டிலும் முதிர்ச்சியடைந்த நாணய வடிவத்தில் காணமுடியவில்லை.

சில அரசாங்கங்கள் மறைகுறி நாணயத்திற்கு சட்ட ரீதியான அளவு முறைகளை வரைவிலக்கணம் செய்வதற்காகவும் அதன் நடவடிக்கையினையும் பயன்பாட்டினையும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன. இதுவரை உலகிலுள்ள பல நாடுகளினால் பின்பற்றப்படும் வழிமுறைகளின் விபரங்களை மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணை சுருக்கமாகத் தருகிறது (பாறல் 2015).

**காசு இன்னமும் கொடுப்பனவுகளின் "அரசனாக" காணப்படுகின்றதா?**

உலகிலுள்ள அநேக நாடுகளில் வன் நாணயப் பயன்பாட்டினைத் தூண்டுபவைகள் பற்றி ஆராய்வது உண்மையில் அவசியமானதாகும். தூண்டுதல்களில் சில உலக நடுத்தர வருமான வகையின் அதிகரிப்புடன் குடித்தொகையில் ஏற்படும் அதிகரிப்பு போன்ற குடித்தொகையியலில் ஏற்படும் மாற்றங்கள், அரசியல் மற்றும் பொருளாதாரத்தின் நிச்சயமற்ற தன்மை மற்றும் இயற்கை அனர்த்தங்களின் அச்சுறுத்தல் போன்றனவாக இருக்கக்கூடும். இத்தூண்டுதல்கள் பெறுமதியின் சேமிப்பியாக முக்கியமாக வன் நாணயத்திற்கான தேவைப்பாடுகளுக்கான கேள்வியை ஏற்படுத்தும். இது சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தினை எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மிக உயர்ந்த வீதத்தில் உயர்த்துவதற்கு வழிவகுக்கும். பொருளாதார வளர்ச்சி வீதங்கள் உலகில் சுமை நிறைந்ததாகக் காணப்பட்ட வேளையான கடந்த தசாப்த காலப்பகுதியில் இதனைக் காணமுடிந்ததுடன் பூஜ்யத்திற்கு அணித்தான அல்லது எதிர்க்கணியமான வட்டி வீதங்கள் போன்ற மரபுவழியற்ற நாணயக் கொள்கை கருவிகள் முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்கள் பலவற்றில் நடைமுறைக்கிடப்பட்டன. இது, மேலேயுள்ள அட்டவணை மூலம் விளக்கப்படுகிறது (சிறாய்,

**அட்டவணை 1: பெயரளவு மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக காசு**

| நாடு | 2000 | 2005 | 2010 | 2015 |
|---|---|---|---|---|
| யப்பான் | 12.8 | 16.0 | 17.4 | 19.4 |
| ஐக்கிய அமெரிக்கா | 5.7 | 6.0 | 6.5 | 7.8 |
| யூரோ வலயம் | 4.8 | 6.2 | 8.3 | 9.9 |
| சுவீடன் | 4.1 | 3.8 | 3.0 | 1.7 |
| நோர்வே | 3.1 | 2.6 | 2.1 | 1.7 |
| டென்மார்க் | 2.8 | 3.0 | 2.9 | 2.9 |
| ஐக்கிய இராச்சியம் | 3.2 | 3.3 | 3.8 | 4.0 |
| கனடா | 3.2 | 3.2 | 3.4 | 3.7 |
| அவுஸ்திரேலியா | 3.9 | 3.6 | 3.5 | 4.1 |
| சிங்கப்பூர் | 6.8 | 6.9 | 6.9 | 8.1 |
| கொரியக் குடியரசு | 3.4 | 2.8 | 3.4 | 5.5 |
| சீன மக்கள் குடியரச | 14.6 | 12.7 | 10.9 | 9.0 |
| இந்தியா | 9.8 | 11.1 | 11.7 | 11.4 |

மூலம்: தொகைமதிப்புப் பொருளாதார தகவல் நிலையம், பெடரல் ஒதுக்கு வங்கி

2019). இது, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வன்நாணயம் 2000 இலிருந்து யப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் சிங்கப்பூர் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் பலவற்றிலும் அதிகரித்துள்ளமையினைக் காட்டிய போதிலும் அத்தகைய நாடுகளில் மெய்நிகர் நாணயம் அளப்பரிய அபிவிருத்திகளை அடைந்திருக்கின்றது.

## முடிவுரை

கடந்த இரண்டு தசாப்த காலப்பகுதியில் உலகின் கொடுப்பனவு முறைமைகளில் அநேக அபிவிருத்திகள் இடம்பெற்றுள்ளதுடன், நாளாந்த பொருளாதார நடவடிக்கைகளில் பாரம்பரியமான கட்டளை நாணயங்களின் பயன்பாட்டினையும் சவாலுக்குட்படுத்தியிருக்கிறது. அதேபோன்று, டிஜிட்டல் வங்கித்தொழில் அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் கணனி வலையமைப்பினூடாக தனிப்பட்டவர்களுக்கிடையே அல்லது நிறுவனங்களிடையே நாணயப் பெறுமதிகளை மாற்றல் செய்கின்ற புதிய முறைகள் வன்நாணயத்தின் பிரபல்யம் குறைவடையக் காரணமாயின. மெய்நிகர் நாணயத்தின் தோற்றம் பொதுமக்களை அடையத் தொடங்கியதும் கற்பனையின் எல்லைகள் விரிவடைந்ததுடன் வன்நாணயத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் சவாலுக்குட்படுத்தின. ஒவ்வொரு நாடும் மெய்நிகர் நாணயத்தினைப் பின்பற்றுகின்ற மட்டம் புதிய பாதைக்கு இட்டுச்செல்லும் என்பதுடன் இது தொழில்நுட்பவியல் நிபுணர்களுக்கு கூடியளவு வாய்ப்புக்களையும் உருவாக்கும்.

அண்மிய எதிர்காலத்தில் முகநூலின் மூலம் “லிப்றா” என அழைக்கப்படும் புதிய மறைகுறி நாணயம் வெளியிடப்பட்டிருக்கின்றமை மிகச் சிறந்த உதாரணமாகும். முகநூலைப் பயன்படுத்தும் குடித்தொகை தற்பொழுது 2.4 பில்லியனை அடைந்திருக்கிறது (எக்கொனமிஸ்ட் 2019). ஐக்கிய அமெரிக்காவின் தொகைமதிப்புப் பணியகத்தின்படி 2018.09.19இல் உலகின் மொத்த குடித்தொகை 7.5 பில்லியனாக இருக்கும் என்பதனைக் கவனத்தில் கொள்கையில் உலகின் பெரும்பாலான நாடுகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பின் தோற்றப்பாட்டினை இது குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றக்கூடும்.

ஆகவே, மெய்நிகர் நாணயங்கள் அவற்றின் கொள்கைக் கட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவான வேகத்தில் பரிணாம வளர்ச்சி கண்டு வருவதனால், மத்திய வங்கிகள் அவற்றின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பில் மெய்நிகர் நாணயங்களை அங்கீகரிப்பதனைப் பரிசீலனையில் கொள்ள வேண்டிய நேரம் இதுவேயாகும். மேலும், அவசியம் எனக் கருதுமிடத்து எதிர்காலத்தில் கூடியளவு பொருளாதாரம் சார்ந்த மற்றும் வினைத்திறன் மிக்க கொடுப்பனவு முறைமைகளை உருவாக்குவதில் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைகின்ற நாடுகளின் வேகத்திற்கு ஈடுகொடுக்கின்ற விதத்தில் புதிய சட்டவாக்கங்களையும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினையும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை ஆரம்பிப்பது மிக இன்றியமையாததாகும்.

## உசாத்துணை நூல்கள்


_____2019Currency Composition of Official Foreign Exchange Reserves (COFER)http://data.imf.org/regular.aspx?key=41175

2016History of World Reserve Currencieshttps://philosophyofmetrics.com/history-of-world-reserve-currencies

The Economist2019Coin Flip49-51

2018Crypto-asset markets: Potential channels for future financial stability implicationsBaselFinancial Stability Board

1985Financial Innovation and Deregulation in PerspectiveTokyoCowles Foundation Papers

2014A Century and a Half of Central Banks, International Reserves and International CurrenciesUniversity of California, Berkeley and Graduate Institute of International and Development Studies, GenevaJune

September 2016An Analysis of Cryptocurrency, Bitcoin and the FutureInternational Journal of Business Management and CommerceVol.1 No.2, pages 1-9

2015An Analysis of the Cryptocurrency IndustryWharton Research ScholarsPhiladelphiaUniversity of PennsylvaniaMay

2016Bitcoin and Cryptocurrency TechnologiesNew JersyPrinceton University Press

2008Bitcoin: A Peer-to-Peer Electronic Cash SystemSatoshi Nakamoto Institute

March 2019Cash Use Across Countries and the Demand for Central Bank Digital CurrencyWashigton DCInternational Monetary Fund

2018Casting Light on Central Bank Digital CurrencyIMF Staff Discussion NoteWashigton DCInternational Monetary FundNovember

September 2017Central bank cryptocurrenciesBIS Quarterly Review55-70

March 2018Central bank digital currenciesBaselBank for International Settlements

2019CoinCodex, "Different Types of Stablecoins: How Do They Work and Why Are They Needed?"https://coincodex.com/article/3051/different-types-of-stablecoins-how-do-they-work-and-why-are-they-needed/

July 2018Cryptocurrencies and BlockchainEuropean Parliament's Special Committee on Financial Crimes, Tax Evasion and Tax AvoidanceBrusselsPolicy Department for Economic, Scientific and Quality of Life Policies, European Parliament

2019Cryptocurrency Regulations: Institutions and Financial Openness ADBI Working Paper Series, No.978TokyoAsian Development Bank InstituteJuly

2019Digital Innovation, Data Revolution and Central Bank Digital CurrencyBank of Japan Working Paper SeriesTokyoBank of JapanFebruary

30 May 2018Directive (EU) 2018/843Official Journal of European Union54

February 2017Distributed ledger technology in payment, clearing and settlementBaselBank for International Settlements

2019Motivations and prospects for central bank digital currencyCentral Bankinghttps://www.centralbanking.com/fintech/cbdc/4162496/motivations-and-prospects-for-central-bank-digital-currency

2014 MarNotice 2014-21WashingtonDCThe Internal Revenue Service, Income Tax & Accounting

2017swissinfo.chChiasso accepts tax payments in bitcoinhttps://www.swissinfo.ch/eng/swiss-fintech_chiasso-accepts-tax-payments-in-bitcoin/43503464

1964The Evolution of the International Monetary System: Historical Reappraisal and Future PerspectivesPrinceton Studies in International FinanceNew JersyPrinceton University

2017The use of cash by households in the euro areaOccasional Paper SeriesEuropean Central BankNovember

USCensusBureauNewsroom:World Population Day: July 11, 2018https://www.census.gov/newsroom/stories/2018/world-population.html

# படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மைப் பகுப்பாய்வு: இலங்கை

ஆர்.எம்.எம்.கே. ரத்நாயக்க
துணைப் பணிப்பாளர்
புள்ளிவிபரவியல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

கே.ஏ.யு.எஸ்.கே. திலகரத்ன
துணைக் கண்காணிப்பாளர்
பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

### படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மை

படுகடன் "உறுதிப்பாட்டுத்தன்மை" என்பது படுகடன் நிவாரணத்தினைக் கேட்டுக் கொள்ளாது அல்லது நிலுவைகளை ஒன்றுசேரவிடாது நாடொன்று அதன் படுகடன் கடன்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான இயலாற்றலைக் கொண்டிருப்பது என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.[1] நாடொன்று அதன் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை, விதிவிலக்கற்ற நிதியிடல்களை நாடாமல் அல்லது அதன் வருமானம் மற்றும் செலவினங்களைச் சமப்படுத்துவதற்கு முக்கிய திருத்தங்களைச் செய்யாமல் பூர்த்திசெய்யக்கூடிய இயலாற்றலைக் கொண்டிருப்பதனை படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மை என வரைவிலக்கணம் செய்யலாம் என வர்மா (2006) குறிப்பிடுகின்றார். ஆகவே, இது பொருளாதார உறுதிப்பாட்டிற்கான முக்கிய முன்நிபந்தனையொன்றாக இருப்பதுடன் இது பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இன்றியமையாததாகவும் இருக்கிறது.

### இலங்கைக்கு படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மை ஏன் முக்கியமானது?

பாரிய அரச படுகடன் இலங்கையின் பொருளாதாரத்தின் மீது கடுமையான உறுதியற்றதன்மைகளைத் தோற்றுவித்திருக்கிறது. அரச படுகடனின் தொகை, படுகடனை நிதியிடுகின்ற மூலங்கள் மற்றும் பாரிய படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் என்பன கடுமையான நீண்ட கால பொருளாதார மற்றும் சமூக விளைவுகளைக் கொண்டிருக்கின்றன. கடந்த ஆண்டுகளில் ஒன்றுசேர்ந்த இறைப்பற்றாக்குறைகள் இலங்கை மத்திய அரசாங்கத்தின் படுகடன்களை அதிகரித்திருப்பதுடன் இதன் உயர்ந்த படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் பணவீக்க அழுத்தங்களைத் தோற்றுவிப்பதுடன் இது உற்பத்திச் செலவினை அதிகரித்து, பன்னாட்டுச் சந்தையில் நாட்டின் போட்டித்தன்மையினைக் குறைத்துவிடுகின்றது. மேலும், உயர்ந்த அரச படுகடனும் படுகடனைத் தாங்கக்கூடிய குறைந்த தன்மையும் தரமிடல் முகவர்களின் முக்கிய கரிசனைக்குரிய விடயங்களாகக் காணப்படுகின்றன. இது இலங்கையின் நாட்டிற்கான தரமிடலை விரும்பத்தகாத விதத்தில் பாதிக்கிறது. பாரிய அரச படுகடனும் நெருக்கடியான படுகடன் தீர்ப்பனவுச் செலவுகளும் அரச செலவின முன்னுரிமைகளில் திரிபுகளை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்திகளின் மீது இடையூறுகளை ஏற்படுத்துகின்றது. மேலும், வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு உயர்ந்த வேகத்தில் அதிகரிக்குமாயின் அது வெளிநாட்டுத் துறை பாதிப்படைவதற்கு வழிவகுக்கும். ஆகவே, அரச படுகடனைக் கட்டுப்படுத்துவதும் இறைப்பற்றாக்குறைகளைக் கட்டுப்படுத்துவதும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகளை குறைவடையச் செய்வதும் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் நீண்ட கால பொருளாதார அபிவிருத்திக்கும் மிக முக்கியமானவையாகும்.

### இலங்கைக்கான முக்கிய படுகடன் குறிகாட்டிகள்

கடந்த பல ஆண்டுகளாக இலங்கை அரசாங்கத்தின் படுகடன் கணிசமாக மாற்றமடைந்து வருவதனை அவதானிக்க முடிந்ததுடன் இது மற்றைய அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்வானதாகவும் காணப்படுகின்றது. 1950இல் மொ.உ.உற்பத்தியின் 16.9 சதவீதத்தில் காணப்பட்ட மத்திய அரசின் தேறிய படுகடன் 2018இல் 82.9 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கின்றது. 2018இல் ஆசிய நாடுகளினதும் (52.0 சதவீதம்) தோற்றம்பெற்று வரும் சந்தை மற்றும் மத்தியதர வருமான நாடுகளினதும் (50.8 சதவீதம்) சராசரி வெளிநின்ற பொதுவான அரசாங்க மொத்தப் படுகடனுடன் ஒப்பிடுகையில்,

1. http://www.development-finance.org/en/topics-of-work/debt-strategy-information/debt-sustainability.html

இலங்கை உயர்ந்த படுகடன் சுமையான 84.1 சதவீதத்தினைக் காட்டியது (ப.நா.நிதியம் 2019). பெயரளவு நியதிகளில், வெளிநின்ற மத்திய அரச தேறிய படுகடன் 1950 களில் ரூ.654 மில்லியனிலிருந்து 2018இல் ரூ.11,977.5 பில்லியனுக்கு படிப்படியாக அதிகரித்திருக்கிறது. மறுசொற்களில் கூறுவதாயின், மத்திய அரசாங்கத்தின் படுகடன் கடந்த பல தசாப்தங்களாக ஒவ்வொரு 5 - 6 ஆண்டுகளுக்கொரு முறை பெயரளவு நியதிகளில் இருமடங்காகி வந்திருக்கிறது.

மேலும், முக்கிய படுகடன் குறிகாட்டிகளில் ஒன்றான அரசாங்கத்தின் படுகடன் தீர்ப்பனவுச் செலவு அண்மைய கடந்த காலத்தில் குறிப்பிடத்தக்களவிற்கு பலயீனமடைந்திருக்கிறது. 2018இல், மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2017இன் மொ.உ.உற்பத்தியின் 11.9 சதவீதத்திலிருந்து 2018இல் 14.5 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கிறது. மேலும், அரச அரசிறைக்கான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் விகிதம் 2018இல் 108.8 சதவீதத்திற்கு அதிகரித்து அரசாங்கத்தின் மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் அரச அரசிறையினை விட பாரியதாக இருந்தமையினை எடுத்துக்காட்டின. மேலும், ஏற்றுமதிகளின் சதவீதமாக[2] வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் 2017இன் 13.4 சதவீதத்திலிருந்து 2018இல் 16.0 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. பொருட்கள் மற்றும் பணிகள் மற்றும் ஆரம்ப வருமானம் என்பனவற்றின் சதவீதமாக மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் இலங்கையைப் பொறுத்தவரை 2017இல் 21.2 சதவீதத்தில் பதிவுசெய்யப்பட்ட வேளையில் தென்னாசிய நாடுகள் மற்றும் மத்தியதர வருமான நாடுகளுக்கான அதே விகிதம் முறையே 10.7 சதவீதமாகவும் 14.3 சதவீதமாகவும் மாத்திரம் காணப்பட்டன.[3]

**படுகடன் குறைப்பை நோக்கிய பாதை: இலங்கை**

பன்னாட்டு நாணய நிதியம் கண்டறிதல், தடுத்தல் மற்றும் சாத்தியமான நெருக்கடிகளுக்கு தீர்வு காணுதல் என்பனவற்றிற்கான சிறந்த கருவியொன்றாக அரச மற்றும் வெளிநாட்டுப் படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மைப் பகுப்பாய்விற்காக முறைசார்ந்த கட்டமைப்பொன்றினை உருவாக்கியிருந்ததுடன் இக்கட்டமைப்பு 2002இல் தொழிற்பாட்டிற்கு வந்தது (ப.நா.நிதியம் 2017). மேலும், அனைத்தையுமுள்ளடக்கிய இக்கருவிக்குப் புறம்பாக, ப.நா. நிதியமும் அதன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளுக்காக எளிமையான படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மைக்கும் இவ்வாய்வினைப் பயன்படுத்தியது.

இவ்வாய்வில், இலங்கையின் நடுத்தர கால மத்திய அரச படுகடன் மட்டங்கள், ப.நா.நிதியத்தின் படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மைப் பகுப்பாய்வு மாதிரியைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டதுடன் உள்நாட்டு நாணயப் படுகடன் மீதான பெயரளவு வட்டி வீதங்கள், வெளிநாட்டு நாணயங்கள் மீதான பெயரளவு வட்டி வீதங்கள், உள்நாட்டுப் பணவீக்கம், உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி மற்றும் செலாவணி வீதம் போன்ற பல்வேறு முக்கிய மாறிகள் என்பன எதிர்காலப் படுகடன் பாதையொன்றினைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன.


மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளின் பெறுபேறுகளின்படி (அட்டவணை 1), நடுத்தர காலப்பகுதியில் ஏறத்தாழ 1 சதவீதம் - 2 சதவீதம் கொண்ட **தாழ்ந்த ஆரம்ப மிகை**யினை எய்துவது மொ.உ.உற்பத்திக்கான மத்திய அரச படுகடன் விகிதத்தினை 2023 அளவில் ஏறத்தாழ 75 சதவீதத்திற்குக் குறைக்க உதவும். மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற குறைப்பிற்கு உண்மை வட்டி வீதத்திலும் பார்க்க உயர்வானதாக இருக்குமென ஊகிக்கப்படும் சாதகமான பொருளாதார வளர்ச்சி விகிதத்தினால் ஆதரவளிக்கப்படும். எனினும், எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்த வளர்ச்சி வீதங்கள், தேறிய கடன்பாட்டுத் தேவைகள் மீதான உயர்வடைந்து வரும் அழுத்தங்களுடன் சேர்ந்து நாட்டின் படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மை மீது கடுமையான சவால்களைத் தோற்றுவிக்கக்கூடும். கீழேயுள்ள அட்டவணை 1 இலுள்ள **ஆரம்பப் பற்றாக்குறை** அமைப்பில்

**அட்டவணை 1: பல்வேறு ஆரம்ப நிலுவைகளின் கீழ் படுகடன் பாதை**

| | | | | | மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
| தாழ்ந்த ஆரம்ப மிகை | | | | | | |
| ஆரம்ப நிலுவை | 0.6% | 0.2% | 0.6% | 1.1% | 1.7% | 2.5% |
| மத்திய அரசாங்கப் படுகடன் | 82.9% | 84.3% | 83.3% | 81.3% | 78.4% | 74.4% |
| உயர்ந்த ஆரம்ப மிகை | | | | | | |
| ஆரம்ப நிலுவை | 0.6% | 4.0% | 4.0% | 4.0% | 4.0% | 4.0% |
| மத்திய அரசாங்கப் படுகடன் | 82.9% | 80.5% | 76.2% | 71.5% | 66.6% | 61.5% |
| ஆரம்பப் பற்றாக்குறை | | | | | | |
| ஆரம்ப நிலுவை | 0.6% | -1.0% | -1.0% | -1.0% | -1.0% | -1.0% |
| மத்திய அரசாங்கப் படுகடன் | 82.9% | 85.5% | 86.1% | 86.2% | 85.8% | 85.0% |

2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதி
3. https://data.worldbank.org/indicator/DT.TDS.DECT.EX.ZS

வரைபடம் 1: பல்வேறு ஆரம்ப நிலுவைகளின் கீழ் படுகடன் பாதை (மொ.உ.உற்பத்தியின் சதவீதம்)




எடுத்துக்காட்டப்பட்டவாறு, இறைத்திரட்சிச் செயன்முறை அதன் எதிர்பார்க்கப்பட்ட பாதையிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு விலகியுள்ளமையானது படுகடன் விகிதத்தினை 2023 அளவில் ஏறத்தாழ 85 சதவீதத்திற்கு அதிகரிக்கக்கூடும். மாறாக, மேலேயுள்ள அட்டவணை 1இல் அனுமானிக்கப்பட்டவாறு ஆரம்ப நிலுவையில் ஏற்படக்கூடிய பாரிய முன்னேற்றங்கள் (**உயர்ந்த ஆரம்ப மிகை**) படுகடன் விகிதத்தினை 2023 அளவில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்குக் குறைவடைய வழிவகுக்கக்கூடும். இம்மூன்று வேறுபட்ட படுகடன் பாதைகள் மேலேயுள்ள வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.

மேலும், வளர்ச்சி அதிர்வு, செலாவணி வீத அதிர்வு மற்றும் வட்டி வீத அதிர்வு என்பனவற்றை உள்ளடக்கிய வேறுபட்ட அதிர்வுகள் இறைத்திரட்சிப் பாதைக்குக் குறிப்பிடத்தக்களவு கீழ் நோக்கிய இடர்நேர்வுகளை ஏற்படுத்தி படுகடன் குறைப்பினைக் கூடியளவு சவால்களுக்குட்படுத்தலாம். இதன்படி, ஆய்வு படுகடன் பாதை மீதான வளர்ச்சி அதிர்வின் தாக்கத்தினைப் பார்ப்பதற்காக நீடிக்கப்பட்டது (வரைபடம் 2).

2019 - 2021 காலப்பகுதியில் உண்மை வளர்ச்சி வீதம் 1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, 2022இல் அடிப்படை வளர்ச்சி அனுமானங்களுக்கு திரும்புமாயின், மத்திய அரசாங்கத்தின் படுகடன், அடிப்படைச் சூழலில் காணப்பட்ட 75 சதவீதம் கொண்ட படுகடன் மட்டத்துடன் ஒப்பிடுகையில் (தாழ்ந்த ஆரம்ப நிலுவை) 2023 அளவில் ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு மாத்திரம் குறைவடையும். இதனால், படுகடன் இருப்புக்கள் மீதான அதிர்வுகள் நாட்டின் படுகடன் திரட்சி முயற்சிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடுமாகையால் அரசாங்கம் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகும்.

**படுகடன் உறுதிப்பாட்டுத்தன்மை மீதான அண்மைய கொள்கை வழிமுறைகள்**

கடந்த அண்மைக் காலப்பகுதியில், அரச படுகடனை மேலும் உறுதியடையச் செய்யும் பொருட்டு அரசாங்கம் பல கொள்கை வழிமுறைகளை மேற்கொண்டது. இது தொடர்பான முக்கிய வழிமுறைகளாக, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் கீழ் இணங்கப்பட்ட ஆரம்ப நிலுவை மட்டமொன்றினைப் பேணுதல், தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் இயற்றப்பட்டமை, நடுத்தர காலப்படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் நடைமுறைப்படுத்தல் மற்றும் இறை விதிகளை வலுப்படுத்தல் என்பன காணப்பட்டன. அரசாங்கம் இலக்கிடப்பட்ட மத்திய அரசாங்க ஆரம்ப நிலுவைகளை அடைவதற்கான கடப்பாடுகளைக் கொண்டிருப்பதனால் இது அரசாங்கத்தின் படுகடன் சுமையினைக் குறைப்பதற்கு வழிவகுக்கக்கூடும். தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்திற்கு 2018 மாச்சில் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டதுடன் தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின்படி, பாராளுமன்றம் குறிப்பிட்டதொரு நிதியாண்டின் போது காலத்திற்குக் காலம் தீர்மானத்தின் மூலம் அரசாங்கத்தின் பொதுப்படுகடனுக்கு மீள் நிதியளிக்கும் மற்றும் முன்நிதியளிக்கும் நோக்கங்களுக்காக, கடனொன்றாக முற்போந்த நிதியாண்டின் இறுதியிலுள்ளவாறாக மொத்த வெளிநின்ற படுகடனில் பத்து சதவீதத்தினை விஞ்சாதிருக்க வேண்டியதொரு தொகையில் பணத்தினைத் திரட்டுவதற்கு அங்கீகாரமளிக்கலாம்.[4] எனவே, தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் நடுத்தர காலப்பகுதியில் படுகடன் தோற்றப்பாட்டிற்குள் எதிர்காலப் பொறுப்புக்களைச் சுமுகப்படுத்துவதற்கும் இடைவெளிகளைக் கட்டியெழுப்புவதற்கும் வசதியளித்தது. 2019 ஏப்பிறலில்[5] வெளியிடப்பட்ட நடுத்தரகாலப் படுகடன் முகாமைத்துவ உபாய அறிக்கையின்படி, சுழலும் திட்டமாக விளங்கும் நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயம் முன்மதியுடைய கடன்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனையும் அரசாங்கத்தின் படுகடன் முகாமைத்துவக் குறிக்கோள்களையும் எய்தும் நோக்கத்துடன் அடுத்த ஐந்தாண்டு காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்காக நிதி அமைச்சரினதும் மத்திய

4 2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டம்

5 நடுத்தரகாலப் படுகடன் முகாமைத்துவ உபாயம் 2019/2023, நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி, 2019 ஏப்பிறல்

வங்கியினதும் உபாயங்களையும் படுகடன் முகாமைத்துவக் கட்டமைப்பினையும் தெளிவுபடுத்துகிறது. நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயம் கோட்பாட்டு ரீதியாக முக்கியமாகப் படுகடன் சாதனங்களின் பொருத்தமான உள்ளமைப்பினைக் கட்டியெழுப்புவதன் மீதும் பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு மற்றும் சந்தைச் சூழல் என்பனவற்றில் எறிவுசெய்யப்பட்ட பாதையின் மீது கவனத்தினைச் செலுத்துகிறது. இலங்கை, 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மைச்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட இறை முகாமைத்துவப் பொறுப்பாண்மைக் கட்டமைப்பினைக் கொண்டிருப்பதுடன், அரச படுகடன் இருப்பினைக் குறைப்பது இவ்விறை முகாமைத்துவப் பொறுப்பாண்மைச் சட்டத்தின் முக்கிய குறிக்கோளாகவும் காணப்படுகின்றது. தற்பொழுது இறை விதிகளை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, இவ்வழிமுறைகள் நடுத்தர காலப்பகுதியில் அரச படுகடனை உறுதியானதொரு மட்டத்திற்குக் குறைப்பதற்குப் பங்களிக்கும்.

**உசாத்துணை நூல்கள்**


1. Central Bank of Sri Lanka, "Annual Reports".
2. International Monetary Fund, "Debt Sustainability Analysis", 2017.
3. International Monetary Fund, "Fiscal Monitor April 2019", 2019.
4. Varma, S., "Debt Relief, Debt Sustainability, and Growth in Low-Income Countries", World Bank Global Seminar Series, 2006.

# தகவல்களை அறிவதற்கான உரிமை

## 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சட்டம்

**திலினி நிலங்கா விலத்கமுவ**
துணைப் பணிப்பாளர்
சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**சுருக்கம்**

*தகவலுக்கான உரிமைக்கான சட்ட ரீதியான அமைப்பினை ஏற்படுத்துகின்றமையின் நோக்கம், பொதுமக்களின் நலவுரித்துக்களுக்கு மாறானவையாக இருந்தாலொழிய, சமூகத்திலுள்ள அனைத்துத் துறையினருக்கும் தகவல்களை அணுகுவதற்கு பெருமளவானதும் சமமானதுமான அணுகுவசதிகளை வழங்குகின்ற அதேவேளையில் தனிப்பட்டவர்களின் இரகசியத்தன்மைகளுக்கும் பொருத்தமான பாதுகாப்பினை வழங்குவதேயாகும். உலகெங்குமுள்ள 100 இற்கு மேற்பட்ட நாடுகள் ஏதோ ஒரு வடிவத்தில் தகவல்களை அறிவதற்கான உரிமைச் சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதுடன் அவற்றுள் சுவீடனின் 1766ஆம் ஆண்டிற்கான பத்திரிகைச் சுதந்திரச் சட்டம் உலகின் மிகப் பழைமை வாய்ந்த சட்டமாக விளங்குகிறது. 2017 மாச்சு 03ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்த தகவல்களை அறிவதற்கான உரிமைச் சட்டம் இப்பிராந்தியத்தில் தகவல்களை அறிவதற்கான உரிமைச் சட்டங்களை இயற்றியுள்ள மற்றைய நாடுகளுடன் இலங்கையினையும் இணைய வைத்திருக்கிறது.*

*எது எவ்வாறெனினும், தகவல்களை அறிந்து கொள்வதற்கான பெரும்பாலான சட்டங்கள், தனியார் துறையினை அவற்றின் நியாயாதிக்கத்திலிருந்து விலக்கி வைத்திருப்பதுடன் அதன் காரணமாக, தனியார் வசமுள்ள தகவல்களை சட்ட ரீதியான உரிமையாக அணுகமுடியாது. தனியார் துறையினால் ஆற்றப்படும் பல்வேறு செயற்பாடுகள் முன்னர் அரச துறையினால் மேற்கொள்ளப்பட்டமையினால், இந்நவீன யுகத்தில் இதனை ஒரு கடுமையான வரையறையாக அடையாளம் காணமுடியும். மேலும் தகவலைக் கோருகின்ற பிரசையொருவர் அத்தகைய தகவல்களைக் கேட்பதற்கான காரணங்களைத் தர வேண்டுமென தேவைப்படுத்தப்படவில்லையெனினும், சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க காரணம் தகவல்களை அறிவதற்கான உரிமச் சட்டங்கள் பெரும்பாலானவற்றின் கீழ் பகிரங்க அதிகாரசபையின் மீதான நிரூபிக்கப்பட்ட சுமையொன்றாகத் தகவல்களை வெளியிடப்படாத பகிரங்க அதிகாரசபையினால் வழங்கப்படுதல் வேண்டும். மேலும், தகவல்களை அறிவதற்கான உரிமைகளுக்கெதிரான தனிப்பட்ட அந்தரங்கத் தன்மையினைக் காக்கும் உரிமைக்கிடையிலான முரண்பாடுகளும் கூட நடுத்தீர்ப்பிற்குரியனவாகும்.*

*சந்தர்ப்பங்களைக் கவனத்திற்கொண்டு, இக்கட்டுரையில், 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமச் சட்டத்தின் ஏற்பாடுகளை, சட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள தகவல்களை வழங்குகின்ற நடைமுறைகளுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் ஆராய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.*

### 1. அறிமுகம்

அரசியல் யாப்பிற்கு செய்யப்பட்ட 19ஆவது திருத்தத்தின் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட யாப்பின் 14(அ) உறுப்புரையின் மூலம் தகவல்களை அறிவதற்கான உரிமை சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையாக மாறியிருக்கிறது.[1] குறிப்பிட்ட உறுப்புரை 14(அ)இன் கீழ், குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒவ்வொரு பிரசையும் தகவல்களை அணுகுவதற்கான உரிமை தாபிக்கப்பட்டிருக்கிறது. இத்திருத்தத்திற்கிணைய, பிரசைகளின் உரிமைகளைப் புரிவதற்கு அல்லது பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான தகவல்களை அணுகுவதற்கும் தகவல்களை வெளிப்படையான முறையில் பயன்படுத்துவதற்குமாக 2016 ஓகத்து 04ஆம் நாளன்று இலங்கை பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமச் சட்டத்தினால் சட்ட ஏற்பாடுகள் தாபிக்கப்பட்ட வேளையில் இலங்கை தாராளமான முன்னோக்கிய நடவடிக்கையினை மேற்கொண்டது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் முக்கியமான நோக்கம் தகவல்களை அணுகுவதற்கான உரிமையினை வழங்குவது, தகவல்களை அணுகுவதனை நிராகரிப்பதற்கான காரணங்களைக் குறித்துரைப்பது, தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினை நிறுவுவது, தகவல் அலுவலர்களை நியமிப்பது, தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை முறைகளை ஏற்படுத்துவது மற்றும் அவற்றுடன் இணைந்த விடயங்களை அல்லது இடைநேர்விளைவான தன்மைகளுக்கு வசதிகளை வழங்குவது என்பனவாகும்.[2]

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் பயனுறுவதாதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க, இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடுள்ள விடயத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.[3]

### 2. தகவல்களை அணுகுதல்

சட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டு, ஒவ்வொரு பிரசையும் பகிரங்க அதிகாரசபையின் உடமையிலுள்ள அல்லது கட்டுக்காப்பிலுள்ள அல்லது கட்டுப்பாட்டிலுள்ள தகவல்களை அணுகுவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கின்றனர்.[4] பிரசை என்ற சொற்பதம் கூட்டிணைக்கப்பட்டதோ அல்லது கூட்டிணைக்கப்படாததோ அத்தகைய குழாமினை நான்கில் மூன்று பங்கினருக்குக் குறையாதவர்களாக இருப்பின் அக்குழாத்தினை உள்ளடக்குகிறது. “தகவல்” என்ற சொற்பதம் பரந்தளவு பொருள் விளக்கத்தினைத் தருகின்றது. பொதுவாக, பகிரங்க அதிகாரசபை, அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அரச அல்லது பொதுக் கூட்டுத்தாபனங்கள் 25 சதவீதம் அல்லது அதற்கும் கூடுதலான பங்குகளைக் கொண்டுள்ள கம்பனிகள் மற்றும் அதிகாரசபைகள், அரசாங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்கள், மாகாண சபைகளுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள், அரசாங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் பல்கலைக்கழகங்கள், தொழில் பயிற்சியை வழங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் ஏதாவதொரு வழியில் அரசினால் நிதியிடப்பட்ட, ஏதேனும் வடிவத்திலமைந்த தொழில்நுட்பக் கல்வியை வழங்குகின்ற நிறுவனங்கள், நீதிமன்றங்கள் மற்றும் நியாயச் சபைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.[5]

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குக் காத்திரமான தன்மையினை வழங்குகின்ற நோக்கத்திற்காக, ஒவ்வொரு பகிரங்க அதிகாரசபையும் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் தகவலளிக்கும் அலுவலர்களாக ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான அலுவலர்களையும் மனுக்களை விசாரிக்கும் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்களையும் நியமித்தல் வேண்டும்.[6] இவ்வலுவலர்களின் பிரதான கடமை, ஏற்பாடுகளுக்குட்பட்டு தகவல்களைக் கோருகின்ற அத்தகைய பிரசைகளுக்குத் தகவல்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதேயாகும்.

#### 2.1 தகவல்களைப் பெறுவதற்கான நடைமுறை

தகவலை அறிவதற்கான உரிமச் சட்டத்தின் கீழ், தகவலைப் பெற எதிர்பார்க்கின்ற எவரேனும் பிரசை, சட்டம் தொடர்பான ஒழுங்குவிதிகளின் கீழ் 2017.02.03ஆம் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட “படிவம் 01” இனைப் பயன்படுத்தி எழுத்து மூலமான கோரிக்கையொன்றினைச் செய்தல் வேண்டும். எனினும், அத்தகைய விண்ணப்பத்தினை எழுத்து மூலம் செய்ய முடியாத பிரசையொருவர் வாய்வழி மூலம் அக்கோரிக்கையை விடுப்பதற்கான உரிமையினையும் கொண்டிருக்கின்றார். ஏதேனும் அதிகாரசபையிடமிருந்தும் மின்னஞ்சல் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் சட்டம் செய்திருக்கிறது.[7]

தகவல்களுக்கான கோரிக்கையினை விடுக்கின்ற அத்தகைய எவரேனும் பிரசை, தேவைப்பட்ட தகவல்களை அடையாளம் கண்டுகொள்ளும் விதத்தில் போதுமான தகவல்களை, தகவல் அலுவலர் வழங்கியுள்ளார் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

சட்டத்தின் 5ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட காரணங்களுக்காக, ஏதேனும் கட்டணம் செலுத்துவதற்குட்பட்டு கோரப்பட்ட தகவல்களை வழங்குவதா அல்லது கோரிக்கையினை நிராகரிப்பதா என்ற தீர்மானத்தினை மேற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தீர்மானத்திற்கு கோரிக்கையினை விடுத்த பிரசைக்கு 14 வேலை நாட்களுக்குள் அறிவித்தலும் வேண்டும். தகவலை வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்படுமிடத்து, அத்தகைய தீர்மானத்திற்கு வந்ததிலிருந்து 14 நாட்களுக்குள் அதனை வழங்குதல் வேண்டும். தொடர்பான தகவலுக்கான கோரிக்கை எவரேனும் பிரசையின் உயிர் அல்லது தனிப்பட்ட சுதந்திரத்துடன் தொடர்பானதாயின் அக்கோரிக்கைக்கான பதில் கோரிக்கை கிடைக்கப்பெற்ற 48 மணித்தியாலங்களுக்குள் வழங்கப்பட வேண்டும்.[8]

கோரிக்கையானது பெரும் எண்ணிக்கையான பதிவேடுகளுடன் தொடர்பானதாகவும் தொடர்பான தகவல்கள் தகவல் அலுவலரிடம் இல்லாமல் ஆனால் சற்று தூரத்திலுள்ள அமைவிடத்தில் இருக்குமாயின் அதன் காரணமாக அத்தகைய தகவல்களை 14 நாட்களுக்குள் சேகரிப்பதற்கு தகவல் அலுவலருக்கு கஷ்டமாக இருக்குமிடத்து கோரிக்கையினை வழங்குவதற்கான காலப்பகுதியினை மேலும் 21 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு நீடிக்கலாம் என்பதுடன் அத்தகைய நீடிப்பினை தொடர்பான பிரசைக்கு அறிவித்தலும் வேண்டும்.

தகவல்களை வழங்குவது தொடர்பில், அத்தகைய தகவல்களைக் குறித்த வர்த்தமானியில் வெளியிடப்பட்ட படிவம் 04 இனைப் பயன்படுத்தி வழங்குதல் வேண்டும் என்பதுடன், தகவலளிக்கும் அலுவலர் குறிப்பிட்ட படிவத்தினைப் பயன்படுத்துவது அத்தகைய தகவலின் பாதுகாப்பிற்கு அல்லது காத்துப் பேணுவதற்கு தீங்கிழைக்கும் என்ற கருத்தினைக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய தகவல்களை வேறு ஏதேனும் பொருத்தமான முறையில் வழங்க முடியும்.

பிரிவு 29(1)இல் விபரிக்கப்பட்டுள்ள நேரக்கட்டமைப்பிற்குட்பட்டு, எவரேனும் பிரசையினால் செய்யப்பட்ட கோரிக்கையொன்று ஒரு மூன்றாந்தரப்பினர் தொடர்பானதாக அல்லது அம்மூன்றாந்தரப்பினரால் வழங்கப்பட்டதாகவுள்ளவிடத்து, அத்தகைய தகவல்களை வெளியிடுவதற்கு அத்தகைய மூன்றாந்தரப்பினர் விரும்புகின்றார்களா அல்லது

விரும்பவில்லையா என்பது பற்றி அத்தகைய மூன்றாந்தரப்பினரிடம் விசாரித்தல் வேண்டும்.[9] அத்தகைய தகவல்களை வழங்குவது தொடர்பில் தகவல் அலுவலர் தீர்மானத்தினை எடுக்கும் போது அத்தகைய மூன்றாந்தரப்பினரின் கருத்துக்களையும் உரிய முறையில் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

### 2.2 தகவல்களை அணுகுவதனை மறுத்தல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் எவரேனும் பிரசையினால் தகவல்களுக்காகச் செய்யப்படும் ஏதேனும் விண்ணப்பங்களைப் பொறுத்தவரை அவை:

(i) கோரப்பட்ட தகவல்கள் தனியாளுடன் தொடர்பான தகவல்களாக இருக்குமிடத்தும் அவற்றின் வெளிப்படுத்துகை தனிப்பட்ட ஆளின் அந்தரங்கத்தின் மீது தேவையற்ற வரம்பு மீறல்களுக்குக் காரணமாக அமையக்கூடுமாக இருக்கின்றவிடத்தும் அத்துடன் அத்தகைய வெளிப்படுத்துகை பொதுமக்களின் அக்கறையினை மேம்படுத்தாதவிடத்தும்;

(ii) அத்தகைய வெளிப்படுத்துகை அரசின் பாதுகாப்பினை அல்லது அதன் ஆட்புல இறைமையை அல்லது தேசிய பந்தோபஸ்தை பாதிக்கக்கூடியதாக இருக்குமிடத்து;

(iii) அத்தகைய வெளிப்படுத்துகைகள் பன்னாட்டு உறவுகளுக்கு தீங்கிழைப்பதாக அமையுமிடத்து;

(iv) செலாவணி வீதங்கள் அல்லது கரைகடந்த செலாவணி வீதக் கொடுக்கல்வாங்கல்களைப் கட்டுப்படுத்தல் தொடர்பான அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகள், வங்கித்தொழில் அல்லது கொடுகடன் ஒழுங்குவிதிகள், வரி விதிப்பு, பொருட்கள் மற்றும் பணிகளின் விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல் மற்றும் வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்தல் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்திற்குக் கடுமையான தீங்குகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையுமிடத்து;

(v) தகவல்கள், வியாபார இரகசியம் அல்லது புலமைச்சொத்து தொடர்பானதாக அமைந்து வெளிப்படுத்துகையானது மூன்றாந்தரப்பினரின் போட்டித்தன்மைக்கு தீங்கு விளைவிக்குமாக உள்ளவிடத்து;

(vi) தகவலானது, எவரேனும் ஆள் அத்தகைய வெளிப்படுத்துகைக்கு சம்மதமளித்திருந்தாலொழிய, அத்தகைய ஆள் தொடர்பான எவையேனும் மருத்துவப் பதிவேடுகளின் வெளிப்படுத்துகைக்கு வழியமைக்கின்றவிடத்து,

(vii) நம்பக உறவு இல்லாதிருக்கும் காரணத்தினால் தகவலானது அந்தரங்கமாக வைத்திருக்கத் தேவைப்படுத்தப்படுமிடத்து;

(viii) அத்தகைய தகவல்களின் வெளிப்படுத்துகையானது ஏதேனும் குற்றத்தினைத் தடுப்பதனை அல்லது துப்புத்துலக்குவதனை அல்லது குற்றமிழைத்தோரைக் கைப்பற்றப்படுவதனை அல்லது அவருக்கெதிராக சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதனை அல்லது நீதிமன்ற அவமதிப்பாக இருக்கின்றவிடத்து அல்லது பாராளுமன்றத்தின் சிறப்புரிமையினை மீறுகின்றவிடத்து அல்லது தகவலின் வெளிப்படுத்தலானது இரகசியமாக வைக்கப்பட வேண்டிய பரீட்சையுடன் தொடர்பான தகவல்களாக இருக்குமிடத்து அல்லது இரகசியமாக வைத்திருக்கப்பட வேண்டிய தேர்தலொன்றுடன் தொடர்பான தகவலொன்றாக இருக்குமிடத்து, அல்லது இறுதித் தீர்மானம் எடுக்கப்படாத அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பானதாக இருக்கின்றவிடத்து;

அவற்றை நிராகரிப்பதற்கு தகவல் அலுவலர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.[10]

எனினும், இங்கு வலியுறுத்தப்பட வேண்டிய உண்மை யாதெனில், தகவலுக்கான கோரிக்கையொன்று, தகவலின் வெளிப்படுத்துகையின் பகிரங்க அக்கறை, அதனை வெளிப்படுத்துவதிலிருந்து விளையும் தீங்கினை விஞ்சியிருக்குமிடத்து அதன் வெளிப்படுத்துகையினை மறுத்தலாகாது என்பதாகும்.

மேலே, குறிப்பிடப்பட்ட ஏதேனும் காரணங்களுக்காக தகவலுக்கான கோரிக்கை மறுக்கப்படுமிடத்து, எது எப்படியிருப்பினும் மறுக்கப்பட்ட காரணங்களின் கீழ், வராத அத்தகைய ஏதேனும் பதிவேட்டின் தகவல்களில் உள்ளடக்கியுள்ள ஆவணத்தின் அத்தகைய பாகத்திற்கு கோரிக்கையினைச் செய்த பிரசைகளுக்கு அவற்றை அணுகும் வசதியை வழங்கலாம்.[11]

தகவலுக்கான கோரிக்கை தகவல் அலுவலரொருவரினால் மறுக்கப்படுமிடத்து, அத்தகைய அலுவலர், கோரிக்கையினை விடுத்த தொடர்பான பிரசைக்கு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட படிவம் 05 இனைப் பயன்படுத்தி எத்தகைய காரணங்களுக்காக அத்தகைய கோரிக்கை மறுக்கப்பட்டது என்பது பற்றியும் யாருக்கு மேன்முறையீடு செய்யப்பட வேண்டும் என்பது பற்றியும் அறிவித்தல் வேண்டும்

### 2.3 மேன்முறையீடுகள்

#### 2.3.1 குறித்துரைக்கப்பட்ட அலுவலருக்கான மேன்முறையீடுகள்

தகவலுக்கான கோரிக்கையினை விடுத்த பிரசையை தகவல் அலுவலரின் பதில் திருப்திப்படுத்தாதவிடத்து, அவர் பதில் பெறப்பட்ட 14 நாட்களுக்குள் குறித்துரைக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்யலாம். குறித்துரைக்கப்பட்ட அலுவலர், மேன்முறையீடு கிடைக்கப்பெற்ற 3 வேலைநாட்களுக்குள் மேன்முறையீட்டினைச் செய்த பிரசைக்கு மேன்முறையீடு கிடைத்தமை பற்றிய அறிவித்தலை வழங்க வேண்டும் என்பதுடன் மேன்முறையீடு தொடர்பான தீர்மானத்தினை அது கிடைத்த திகதியிலிருந்து 3 வாரத்திற்குள் மேற்கொள்ளுதலும் வேண்டும்.

### 2.3.2 தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தல்

தகவலுக்கான உரிமை ஆணைக்குழு 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட பிரதான மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்தல் நிறுவனமாகும்.[12] இது ஒரு சுயாதீனமான நியதிச் சபையாக இருப்பதுடன் தகவல்கள் மறுக்கப்படுவது தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கும் இச்சட்டத்தின் கீழ் பிழையான நடத்தையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் குற்றவியல் வழக்குத் தொடுப்புக்களை மேற்கொள்வதற்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவருக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடு மீது பெறப்பட்ட பதில் தொடர்பில் திருப்திப்படாத எவரேனும் பிரசையொருவர் அத்தகைய பதிலைப் பெற்ற இரண்டு மாதங்களுக்குள் ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்யலாம். ஆணைக்குழுவிற்குச் செய்யப்பட்ட மேன்முறையீடு மீதான விசாரணைகளைச் செய்கின்ற நடைமுறை, சட்டத்தின் 42(2)ஆம் பிரிவின் கீழ் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் 13 - 31இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### 2.3.3 மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தல்

ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட தீர்மானத்தினால் இன்னலுற்ற பிரசையொருவர் அல்லது பகிரங்க அதிகாரசபை, அத்தகைய தீர்மானத்திற்கெதிராக, அத்தகைய பிரசைக்கு அல்லது பகிரங்க அதிகாரசபைக்கு அத்தகைய தீர்மானம் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.[13]


தகவல்களைப் பெறும் நடைமுறை பின்வரும் வரைபடம் மூலம் எளிமையாக விளக்கப்படுகிறது.

### 3. விமர்சனங்கள்

இச்சட்டத்தினை முழுமையாகவும் ஆழமாகவும் ஆராயும் போது, தகவல்களைப் பெறுவதற்கு எதிர்பார்க்கும் பிரசையொருவருக்கு இச்சட்டம் மிகச் சாதகமாகவுள்ளமை கண்கூடு. தகவல்களைப் பெறுவதற்குள்ள உரிமை காரணமாக ஆட்களின் உரிமைகள் இடர்நேர்விற்குட்படலாம் என நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதன் கருத்து யாதெனில் பகிரங்க அதிகாரசபைகளின் உடமையிலிருந்த சில தகவல்கள் சில ஆட்களின் உரிமைகள் மீறப்படுவதற்கு வழிவகுக்கலாம் என்பதாகும். எனினும், சட்டமானது ஏதேனும் தகவல்களை வெளியிடுகையில் தனிப்பட்ட ஒருவரின் அந்தரங்கங்களின் வரம்பு தேவையற்ற விதத்தில் மீறப்படும் போல் தெரியுமிடத்து தகவல்களை வெளிப்படுத்தாது விடுவதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குகிறது.[14] ஆகவே, தகவலுக்கான உரிமைச் சட்டம் தனிப்பட்டவர்களின் உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது என்ற வாதம் குறிப்பிட்ட அளவிற்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

இச்சட்டம் தொடர்பிலும் இச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தகவலுக்கான உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு பற்றியும் பொதுமக்களிடையேயான விழிப்புணர்வு இன்னமும் போதுமானதாக இல்லை போல் தோன்றுகிறது. இச்சட்டத்தின் முக்கியத்துவத்தினை பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கு

தகவலுக்கான உரிமை நடவடிக்கை முறை



பொருத்தமான நடவடிக்கைகளும் உரிமையொன்றாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான இயலாற்றலும் பின்பற்றப்படாவிடின் இச்சட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எய்துவது கடினமாகிவிடும். மறுபுறத்தில் பகிரங்க அதிகாரசபைகள் இச்சட்டம் தொடர்பில் பாரபட்சமற்ற மனோபாவங்களைக் கொண்டிருக்கின்றன போல் தெரிகிறது. ஏனெனில் சட்டமானது தகவல்களைச் சேகரிக்கின்ற மற்றும் அவற்றை வழங்குகின்ற மேலதிகப் பணியினை அவற்றிடம் ஒப்படைத்திருப்பதுடன் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களுடன் அத்தகைய கடமைகளைக் கவனிக்க வேண்டியும் இருக்கின்ற வேளையில் நாளாந்த கடமைகளையும் ஆற்ற வேண்டியிருப்பது அவற்றின் மேலதிக இடர்ப்பாடுகளுக்கும் காரணமாகியிருக்கிறது. சட்டத்தின் முக்கியத்துவமும் பிரசைகள் என்ற முறையில் அவர்கள் பெறக்கூடிய நன்மைகளையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்படின் பகிரங்க அதிகாரசபைகளின் அலுவல்சார் உறுப்பினர்கள் இச்சட்டம் தொடர்பான நடவடிக்கைகளை மிக நேர்க்கணிய நோக்குடன் பெரும்பாலும் கவனிப்பர்.

சில சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் பொதுமக்களின் அக்கறை கருதிக் கூட தகவல்களை வெளிப்படுத்துவதனைத் தடைசெய்கின்றன. எடுத்துக்காட்டாக, நிறுவனக் கோவையானது அரச கொள்கை மற்றும் நிருவாகத் தீர்மானங்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதிலிருந்தும் அரச அலுவலர்களைத் தடைசெய்கிறது.[15] இலங்கை பத்திரிகை ஆணைக்குழுச் சட்டம் செய்தி அறிக்கைகளில் காணப்படும் தகவல்களின் மூலங்களை வெளிப்படுத்துவதனைத் தடைசெய்கிறது.[16] 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர் தொடர்பான தகவல்களைப் பாதுகாப்பது மற்றும் வெளிப்படுத்துகை தொடர்பில் சட்ட ரீதியான கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றன.[17] மேலும், இது அரச வங்கிகள் தொடர்பானதாக இருப்பின் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் வரையறைகளுக்கும் ஏற்பாடுகளுக்குமிடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இச்சூழ்நிலைகளில், அரச அலுவலர்கள் எந்தச் சட்டத்திற்கு தாம் இணங்கி நடக்க வேண்டுமென்பதனைத் தீர்மானிப்பதில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். ஆனால், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 4ஆம் பிரிவு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எழுதப்பட்ட மற்றைய எந்தவொரு சட்டத்தினையும் விட மேலோங்கி நிற்றல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. ஆகவே, பகிரங்க அதிகாரசபையின் அலுவல்சார் உறுப்பினர்களுக்கு இதனைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது அவசியமானதாகும்.

தகவலுக்கான உரிமைகள் சட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பில் பொதுமக்களின் விழிப்புணர்வினை உயர்த்தும் பொருட்டு எந்தவொரு தாமதமும் இல்லாமல் சில முறைசார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் அடிப்படை உரிமையொன்றாக இதனை அவ்வாறு நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும். இதனைப் பகிரங்க அதிகாரசபைகளுக்காக நிறுவன ரீதியான மட்டங்களில் நடைமுறைப்படுத்த முடியும் என்பதுடன் பொதுமக்களுக்காக இவற்றைப் பிரதேச செயலக அலுவலகங்களினூடாக செயலமர்வுகள் மூலமும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமும் வலியுறுத்த முடியும்.

தற்போதுள்ள சிரத்தையற்ற மனோபாவங்களுக்குப் பதிலாக, மிகச் சாதகமான மனோபாவத்துடன் குறிப்பிட்ட சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களை ஊக்குவிப்பதற்காக பொது அதிகாரசபைகளின் அலுவல்சார் உறுப்பினர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தகவல் அலுவலர்களுக்கும் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள தகவல்களை வெளிப்படுத்துகின்ற/ தகவல்களை மறுக்கின்ற சட்ட ரீதியான செயன்முறைகள் பற்றியும் குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றியும் விசேடமாகத் தெரியப்படுத்தப்படல் வேண்டும்.

பாடசாலை பாடவிதானத்தில் தகவல்களுக்கான உரிமைகள் உட்பட, அடிப்படை உரிமைகள் மீதான பாடங்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் என்பதுடன் இதன் மூலம் சமூகம் இவ்வுரிமையினையும் அதன் முக்கியத்துவத்தினையும் அறியக்கூடியதாக இருக்கும்.

அரச நிறுவனங்களில் தகவல்களைச் சேகரிப்பது மற்றும் அவற்றைப் பேணுவதுடன் தொடர்பான நடைமுறைகளில் ஓட்டைகள் காணப்படுகின்றன. இது, உட்கட்டமைப்பில் காணப்படும் குறைபாட்டின் விளைவாகும். தகவல்கள் கணனி மயப்படுத்தப்பட்டிராமையின் காரணமாக சட்டத்தினால் விதிக்கப்பட்ட நேரக் கட்டமைப்பிற்குள் தகவல்களை வழங்குவது இடர்ப்பாடானதாகக் காணப்படுகிறது. இப்பின்னணியில், பல்வேறு நிறுவனங்களிலுள்ள தகவல்களைச் சேகரிக்கும் பொருட்டும் அத்தகைய தகவல்களைத் தேவையான வேளையில் இலகுவாக சீர்ப்படுத்திக் கொள்வதனை இயலச்செய்கின்ற விதத்தில் சேமித்துக் கொள்வதற்குமாக தேவையான மூலவளங்களையும் பயிற்சிபெற்ற அலுவலர்களையும் புதிய தொழில்நுட்பங்களையும் உட்கட்டமைப்பினையும் வழங்குவதற்கு அரசாங்கத்தின் தலையீடு தேவைப்படுகிறது. நீண்ட கால வழிமுறையொன்றாக, பொதுமக்கள் தரவுத் தளத்தினை அணுகத்தக்கதாகவும் தேவையான தகவல்களை இடர்ப்பாடுகளின்றி சீர்ப்படுத்திக் கொள்ளக் கூடியதுமாகவிருக்கும். சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளிலுள்ளமை போன்று அரசின் தலையீட்டுடன் பொதுவான பகிரங்க தரவுத் தளமொன்றினை நாட்டிற்கு அறிமுகப்படுத்துவது அவசியமாகும். பொதுவாக, வெளிப்படுத்தக்கூடிய அத்தகைய அனைத்துத் தகவல்களையும் குறிப்பிட்ட பொதுவான அரச தரவுத் தளத்தில் பகிரங்க அதிகாரசபைகள் தரவேற்றம் செய்யக்கூடியதாக இருப்பதன் காரணமாக, சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் இடர்ப்பாடுகளை அவை எதிர்நோக்கத் தேவையில்லாமல் இருக்கும்.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அத்தகைய தகவல் அலுவலர்களினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட தகவல் வெளிப்படுத்துகைக்காக தகவல் அலுவலர் அல்லது ஏதேனும் பகிரங்க அதிகாரசபையின் மீது குற்ற அல்லது சிவில் பொறுப்புக்கள் எதுவும் விதிக்கப்படமாட்டாது.[18]

எது எவ்வாறெனினும், இச்சட்டத்தின் கீழ் தவறிழைத்த நபரொருவருக்கெதிராக நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரமிருக்கிறது.[19] அத்தகைய விசாரணையில் அவர் குற்றவாளியாகக் காணப்படுவாராயின், குற்றமிழைத்தவர் ரூ.50,000 இற்கு மேற்படாத குற்றப் பணமொன்றிற்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்தண்டனைக்கு அல்லது அவ்விரண்டு தண்டனைகளுக்கும் ஆளாதல் வேண்டும். மேலும், பொருத்தமான ஒழுக்காற்று அதிகாரியினால் குற்றமிழைத்தவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கான சாத்தியங்களுமுண்டு. இதன்படி, சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்துவதனை யார் தவிர்த்தார்களோ அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கான இயலாற்றலையும் சட்டம் கொண்டிருக்கிறது. இச்சட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை எய்துவதற்கான சாத்தியங்களைத் தேவையான வேளையில் குறிப்பிட்ட ஏற்பாடுகளைப் பொருத்தமான விதத்தில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதிகரிக்க முடியும்.

## 4. முடிவுரை

மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் (1948) மற்றும் ஐக்கிய நாடுகளின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான பன்னாட்டு உடன்படிக்கையின் 19ஆவது உறுப்புரை (1966) என்பனவற்றினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவாறு தடைகள் மற்றும் பாரபட்சங்களுக்கு அப்பால் தகவல்களைத் தேடுவதற்கும் பெற்றுக்கொள்வதற்குமான உரிமை சட்ட ரீதியாக தற்பொழுது ஆசியாவிலுள்ள 19 நாடுகளினால் பாராளுமன்ற சட்டங்களின் மூலம் சட்ட ரீதியாக உள்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் மற்றும் நேபாளம் என்பன அந்நாடுகளிடையே காணப்படுவதுடன் 2005இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தியாவின் தகவலுக்கான உரிமைகள் சட்டம் மிகத் தீவிரமான பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இப்போக்கினைத் தொடர்ந்து இலங்கையும் 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் மூலம் தகவலைப் பெறுவதற்கான பரந்தளவு சட்டக் கட்டமைப்பினை நிறுவியிருக்கிறது. தகவல் வெளிப்படுத்துகையினை மேற்பார்வையிடவும் நடைமுறைப்படுத்துவதற்குமாகக் குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவொன்று நிறுவப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட சட்டக் கட்டமைப்பினைப் பொருத்தமான விதத்தில் நடைமுறைப்படுத்துவதனூடாக இச்சட்டத்திலிருந்தான பெறுபேறுகளை எய்துவது ஒவ்வொரு பிரசையினதும் பாரிய பொறுப்பாகும் என்பதுடன் இப்பொறுப்பினை உணரும் விதத்தில் சமூகத்தின் மனோபாவங்களை மாற்றுவதற்காகத் தேவைப்படும் அவசியமான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதில் ஈடுபாடு கொள்வதும் தேவையான உட்கட்டமைப்பினை வழங்குவதும் அரசின் பொறுப்பாகும்.

சுருக்கமாகக் கூறுவதானால் தகவலுக்கான உரிமையினை சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தியதன் மூலம் அரச துறையில் வினைத்திறனற்ற தன்மை, படிப்படியான முறையிலமைந்த பணித் துறையாட்சி, நடுத்தீர்ப்பு என்பன மீது பெரும் தாக்கமொன்று ஏற்படக்கூடுமென்பதுடன் அது இறுதியில் குடியரசு, பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளை நிறுவுவதற்கும் உறுதித்தன்மை வாய்ந்த அபிவிருத்திகளை எய்துவதற்கும் பெருமளவு ஆதரவினை வழங்கும்.

### உசாத்துணை நூல்கள்


1. 19th Amendment to the Constitution, Article 2
2. Right to Information Act No.12 of 2016, Preamble
3. Right to Information Act No.12 of 2016, s 4
4. Right to Information Act No.12 of 2016, s 3A
5. Right to Information Act No.12 of 2016, s 43
6. Right to Information Act No.12 of 2016, s 23
7. Right to Information Act No.12 of 2016, s 26 (6) read with Regulation 4(4) of the Gazette Notification dated 03.02.2017
8. Right to Information Act No.12 of 2016, s 25
9. Right to Information Act No.12 of 2016, s 29
10. Right to Information Act No.12 of 2016, s 5
11. Right to Information Act No.12 of 2016, s 6
12. http://www.rticommission.lk/web/index.php?option=com_content&view=article&id=11&Itemid=142&lang=en (accessed on 10.09.2019)
13. Right to Information Act No.12 of 2016, s 34(1)
14. Right to Information Act No.12 of 2016, s (1) (a)
15. Establishment Code, Chapter 31, s 3
16. Sri Lanka Press Council Law s 32(1)
17. Banking Act No 30 of 1988, s 77
18. Right to Information Act No.12 of 2016, s 30
19. Right to Information Act No.12 of 2016, s 39

# மத்திய வங்கியின் தொடர்பூட்டல்

எஸ். எம். விமலசூரியா
துணைப் பணிப்பாளர்
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## 1. அறிமுகம்

மத்திய வங்கியிடம் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றை அவற்றின் தொடர்பான பொருளாதாரங்களில் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விலை உறுதிப்பாட்டுக் குறிக்கோளை எய்துவதற்கு, பொருளாதாரத்தின் எண்ணிறைந்த ஆர்வலர்களினால் ஏற்படுத்தப்படும் விலை தொடர்பில் மத்திய வங்கிகள் செல்வாக்கினையும் வழிகாட்டல் தீர்மானங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாத்துக் கொள்வதில், நிதியியல் இடர்நேர்வுகளைப் புரிந்து கொள்வதற்கு பொதுமக்களுக்கு உதவுதல், சீரற்ற தகவல்களைக் குறைத்தல், நிதியியல் சந்தைகளின் தொழிற்பாடுகளை மேம்படுத்தல் என்பன முக்கிய வகிபாகத்தினை ஆற்றுகின்றன. எனவே, மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் தொடர்பூட்டல் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு இரண்டினையும் பாதுகாப்பதில் முக்கிய வகிபாகத்தினை ஆற்றுகின்றது.

மேலும், மத்திய வங்கிகள் அரச நிறுவனங்களாக இருப்பதனை கவனத்தில் கொள்கையில், அவை முதன்மையானதாக விளங்கும் பாராளுமன்றமும் அதேபோன்று நாட்டிலுள்ள மக்களும் மத்திய வங்கி அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றதா என்பதனை மதிப்பிடக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். இதன்படி, மத்திய வங்கிகள் பொறுப்புக்கூறும் தன்மையினைப் பேணுவதில் தொடர்பூட்டல் கருவியொன்றாக அதன் வகிபாகத்தினை ஆற்றுகின்றது. அதேவேளை, மத்திய வங்கிகளின் உள்ளக தொடர்பூட்டல், அது காத்திரமாகவும் வினைத்திறனுடனும் தொழிற்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தவிர்க்க முடியாத வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது.

## 2. நாணயக் கொள்கையினைத் தொடர்பூட்டுதல்

விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்காக, மத்திய வங்கிகள் நாணயக் கொள்கையினை வடிவமைத்து நடைமுறைக்கிட்டு வருகின்றன. இது, முக்கியமாக சந்தை வட்டி வீதங்களுக்கு வழிகாட்டுதல் கொடுகடன் மற்றும் பணத்தின் செலவினையும் கிடைப்பனவினையும் தீர்மானித்தல் என்பன மூலம் வழிநடத்தப்படுவதுடன் இதன் மூலம் பொருளாதாரத்தில் விலை நிர்ணயத்தின் மீது செல்வாக்கும் வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. நாணயக் கொள்கை தொடர்பில் மத்திய வங்கிகள் தொழிற்பாட்டு ரீதியான சுயாதீனத்தினைக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக நாணயக் கொள்கை வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் மத்திய வங்கிகளின் நடவடிக்கைகளின் பொறுப்புக்கூறும் தன்மை அவசியமாகவுள்ளது. மாறாக பொறுப்புக்கூறும் தன்மை மத்திய வங்கிகள் நாணயக் கொள்கை தொடர்பில் வெளிப்படைத்தன்மையினைப் பேண வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றன. உண்மையில், வெளிப்படைத்தன்மையினைப் பேணுவதற்கு மத்திய வங்கிகள் அவற்றின் ஆர்வலர்களுடன் தொடர்பூட்டல்களை ஏற்படுத்தி நாணயக் கொள்கை தொடர்பான அவர்களது நடவடிக்கைகளுக்கான அடிப்படைக் காரணங்களை விளக்குதல் வேண்டும்.

அதேவேளை, நாணயக் கொள்கையின் காத்திரமான தன்மை நாணயக் கொள்கையின் தொடர்பூட்டலிலேயே முக்கியமாகத் தங்கியிருக்கிறது. நாணயக் கொள்கையானது நிதியியல் சந்தைகளினூடாகப் பல்வேறு பொருளாதார முகவர்களுக்கும் ஊடுகடத்தப்படுகிறது. எனவே, மத்திய வங்கிகள் நிதியியல் சந்தைப் பங்கேற்பாளர்கள் அதேபோன்று ஏனைய பொருளாதார முகவர்கள் ஆகிய இருசாரார்களும் மத்திய வங்கியினால் கொள்கை எவ்வாறு ஏற்படுத்தப்படுகின்றது என்பது பற்றியும் பொருளாதாரத் தாக்கத்தினை ஏற்படுத்தும் விதத்தில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் இணைந்த தொழிற்பாடுகள் பற்றியும் இறுதியில் அவை பணவீக்க மட்டங்களில் தோற்றுவிக்கும் விளைவுகள் பற்றியும் புரிந்து கொள்வதற்கு உதவுதல் வேண்டும். பொருளாதார

முகவர்கள் தொடர்பிலான புரிந்துணர்வு போன்றவற்றுடன் மத்திய வங்கியின் நம்பகத்தன்மையும் சேர்ந்து மத்திய வங்கி பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மீது செல்வாக்குச் செலுத்துவது தொடர்பில் பெருமளவு வெற்றியை அடைந்ததன் மூலம் அவற்றின் கொள்கை நடவடிக்கைகளின் காத்திரமான தன்மை அதிகரித்தது. இதன் மூலம் மத்திய வங்கி தொடர்பூட்டல் பொருளாதாரமொன்று எவ்வாறு செயலாற்றுகின்றது என்பது பற்றியும் மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் எவ்வாறு நாணயக் கொள்கையினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு மிக முக்கியமாக அமைகின்றன என்பது பற்றிய புரிந்துணர்வினை அதிகரிப்பதனையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது. கொள்கை வீதங்களில் தேவைப்படும் சீராக்கமும் அதன் விளைவாக சந்தை வட்டி வீதங்களின் சீராக்கமும் நாணயக் கொள்கையின் பாரிய காத்திரமான தன்மை காரணமாக சிறிதாகவே இருக்கும் போல் தோன்றுகின்றது.

அதேவேளை, நாணயக் கொள்கைக் கருவியொன்றாக தொடர்பூட்டலின் வகிபாகம் உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் பின்னர் முன்னேற்றம் கண்டது. பல முக்கிய பொருளாதாரங்களின் மத்திய வங்கிகள் கணியம்சார் தளர்த்தல்களை அதாவது சொத்துக் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டங்களை நாடிய வேளையில் ‘முன்னோக்கிய வழிகாட்டல்கள்’ முக்கிய நாணயக் கொள்கைக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முன்னோக்கிய வழிகாட்டல்கள் என்பது நாணயக் கொள்கைக் கருவிகளை நிர்ணயிக்கின்றமை பற்றிய தொடர்பூட்டலாகும். உதாரணமாக முன்னோக்கிய வழிகாட்டல்களினால் கொள்கை வட்டி வீதங்களின் போக்குகள் பற்றிய விடயங்களையும் அவற்றிற்குச் செய்யப்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பான நேரத்தினையும் வழங்க முடியும். உதாரணமாக ஐரோப்பிய மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்கள் அதேபோன்று அதனால் மேற்கொள்ளப்பட்ட கணியம்சார் தளர்த்தல்கள் தொடர்பில் ஏறத்தாழ ஓராண்டு காலப்பகுதியை உள்ளடக்கிய முன்னோக்கிய வழிகாட்டலை வழங்கியது. பொருளாதார அபிவிருத்திகளுக்கான மத்திய வங்கிகளின் பதிலிறுப்புக்களாக வழங்கப்படுகின்ற தகவல்கள் வடிவில் வழங்கப்படுகின்ற அவற்றின் முன்னோக்கிய வழிகாட்டல்கள் எதிர்காலக் கொள்கை வீதங்கள் பற்றிய எதிர்பார்ப்புக்களை நிறுத்தவும் நிச்சயமற்ற தன்மையினைக் குறைக்கவும் உதவியிருக்கும் போல் தெரிகிறது.

### 3. நிதியியல் உறுதிப்பாட்டு தொடர்பூட்டல்

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாக்கின்ற மத்திய வங்கிகளின் பொறுப்பு தொடர்பில் அவர்களது நடத்தையைப் பொறுத்தவரையில் அவற்றின் பங்கு மீதான பொறுப்புக்கூறும் தன்மையானது, அது தொடர்பில் அவர்களால் எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் பற்றிய வெளிப்படைத்தன்மையினை அவர்கள் பேண வேண்டுமெனத் தேவைப்படுத்துகிறது. இதன் மூலம் மத்திய வங்கிகள், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற நோக்கத்திற்காக எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் பற்றி பொதுமக்களுக்கு தொடர்பூட்டுதல் வேண்டும்.

அதேவேளை, தொடர்பூட்டலானது சீரற்ற தகவல்களைக் குறைக்க உதவுகின்றமை, நிதியியல் சந்தைகளின் தொழிற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் நிதியியல் நெருக்கடிகளைப் புரிந்துகொள்ள மக்களுக்கு உதவுதல் என்பன மூலம் நிதியியல் கொள்கை உறுதிப்பாட்டினைப் பேணுவதில் மிக முக்கியமான வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது. இது தொடர்பில், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வினை காலத்திற்குக் காலம் வெளியிடுதல், தரவுகளை வெளியிடுதல் மற்றும் பத்திரிகை வெளியீடுகளை வெளியிடுதல் என்பனவற்றின் மூலம் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் தொடர்பூட்டல்களுக்குப் புறம்பாக, மத்திய வங்கிகள் அவை ஒழுங்குமுறைப்படுத்தும் நிதியியல் நிறுவனங்கள் மீது வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளையும் விதிக்கின்றன. இதன் மூலம் முதலீட்டாளர்களுக்கும் வைப்பாளர்களுக்கும் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் தகவல்கள் முதலீட்டாளர்கள் மற்றும் வைப்பாளர்கள் என்ற முறையில் அவர்களால் எதிர்நோக்கப்படும் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கு அவர்களுக்கு உதவுகிறது.

நிதியியல் உறுதிப்பாட்டு இடர்நேர்வுகள் கட்டியெழுப்பப்படுகின்ற நேரத்தில் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு உதவுகின்ற விதத்தில் பொருளாதார முகவர்களின் நடத்தைகள் வழிகாட்டத்தக்க விதத்தில் அமைவது அவசியமாகுமென்பதனால் தொடர்பூட்டல் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது. நிதியியல் சந்தைகளில் இறுக்கமான தன்மை அல்லது அழுத்தம் காணப்படுகின்ற நேரத்திலும் கூட, அத்தகைய நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறுபட்ட ஒழுங்குமுறைப்படுத்துநர்களும் திறைசேரியின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளும் தேவைப்படுவதனால், தொடர்பூட்டல் முக்கியமான வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது.

### 4. மத்திய வங்கியின் தொடர்பூட்டல் பற்றிய முன்கூட்டிய அறிவித்தல்

முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட கலண்டர் ஒன்றினைக் கிடைக்கச் செய்வதன் வாயிலாக, மத்திய வங்கி கொள்கைத் தீர்மானங்களை அறிவித்தல் மற்றும் பல்வேறுபட்ட அறிக்கைகள், தரவுகள் மற்றும் அதன் தொழிற்பாடுகள் தொடர்பான தகவல்களை எப்பொழுது அறிவிப்பது என்பது பற்றிய முன்கூட்டிய அறிவித்தலை வெளியிடுகின்ற நடைமுறையினை அநேக மத்திய வங்கிகள் பின்பற்றுகின்றன. அவ்வாறு செய்யும் போது மத்திய வங்கி பொறுப்புக்கூறும் தன்மையினைப் பேணுவதற்கு உதவுவது மட்டுமன்றி அனைத்து இலக்கிடப்பட்ட குழுமங்களும் தகவல்களை உள்வாங்கிக் கொள்வதற்காக ஒரேவிதமான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. நாணயக் கொள்கைத் தீர்மானம் போன்ற சந்தை உணர்திறன் கொண்ட தகவல்களைப் பொறுத்தவரை, அவற்றினைத் தொடர்ந்து

முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட தொடர்பூட்டல் செயன்முறை மிக முக்கியமானதாகும். சந்தை - உணர்திறன் கொண்ட தகவல்களை வெளியிடுவது தொடர்பான தொடர்பூட்டலின் நேரம் மற்றும் முறை தொடர்பில் முன்கூட்டிய அறிவித்தல் கட்டாயம் வழங்கப்படல் வேண்டும்.

## 5. மத்திய வங்கிகளின் தொடர்பூட்டலுக்கான வழிகாட்டல் தத்துவங்கள்

மத்திய வங்கியின் தொடர்பூட்டல் தொடர்பில் தெளிவான தன்மை மிக முக்கியமானதொன்றாகும். இது, பயன்படுத்துவதற்கு எளிமையானதாகவும் சிறப்பானதாகவும் இருக்கின்ற வேளையில் தெளிவான மொழியினைப் பயன்படுத்துவதும் புரியாத விதத்திலானவற்றைத் தவிர்ப்பதும் சாத்தியமானளவிற்குப் பரந்தளவு வாசகர்களை அடைவதற்கு மத்திய வங்கிகளுக்கு உதவும்.

தொடர்பூட்டல் மூலமாக மத்திய வங்கியினால் வழங்கப்படும் தகவல்கள் நன்கு கண்டறியப்பட்டனவாகவும் தொடர்பானவையாகவும் இருத்தல் வேண்டும். தெரிவிக்கப்படுகின்ற தொடர்பான தகவல்கள் மத்திய வங்கியின் அர்த்தம் நிறைந்த வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு இன்றியமையாதனவாகும்.

மத்திய வங்கியொன்று எதனைத் தொடர்பூட்டுகின்றதோ அதற்குப் பொறுப்புக்கூறும் தன்மையினைக் கொண்டிருத்தல் வேண்டும். எனவே, மத்திய வங்கியினால் விடுக்கப்படும் எந்தவொரு தொடர்பூட்டலும் மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

மத்திய வங்கிகள் அவற்றின் தொடர்பூட்டல்கள் தொடர்பில் தொழில்சார் நிபுணத்துவத்தினைப் பேணுதல் வேண்டும். இதன் மூலம் அரசியல் அல்லது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் உட்பட எந்தவித பாரபட்சமுமற்ற விதத்தில் தொடர்பூட்டல்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மத்திய வங்கி அது நடைமுறைப்படுத்துகின்ற ஏதேனும் கொள்கைகள் அல்லது வெளியிடுகின்ற ஏதேனும் விடயங்கள் தொடர்பில் ஒரே குரலில் பேசுவதும் முக்கியமானதாகும். இல்லையெனில் அதன் விளைவு பொதுமக்களிடையே குழப்பத்தினை ஏற்படுத்திவிடும்.

## 6. தொடர்பூட்டல் மாதிரிகள்

மத்திய வங்கிகள் அவற்றின் பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு, அவை வெவ்வேறுபட்ட வாசகர்களுக்கு தொடர்பூட்டல்களை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகிறது. புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் தோற்றத்துடன் அவற்றின் வாசகர்களின் எண்ணிக்கை விரிவடைந்த அதேவேளையில், தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் சாத்தியமாகிப் போன பரந்தளவு செய்திகள் உடனடியாகக் கிரகிக்கப்படுவதனைக் கவனத்தில் கொள்கையில், தொடர்பூட்டலுடன் தொடர்புபட்ட சிக்கலான தன்மைகளும் கூட குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளன. குறிப்பாக, வேறுபட்ட வாசகர்களுக்குக் கிடைக்கத்தக்க செய்திகளை அவர்களுக்கு வழங்க முயற்சிக்கையில் அது அவர்களைத் திசைதிருப்பிவிடக்கூடும். இதன் காரணமாக தொடர்பூட்டல்கள் மத்திய வங்கிகளுக்கு சவால்மிக்கனவாக மாறும் பொழுது அவர்களினால் வெளியிடப்படும் தகவல்களைக் குறிப்பிட்ட வாசகர்களுக்குப் பொருத்தமான விதத்தில் மாற்றியமைத்துக் கொள்வதில் போதுமான கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

மத்திய வங்கி அதன் கம்பனி வெப்தளத்தினைப் பயன்படுத்துகையில் ஆளுநரினால் அல்லது உயர் முகாமைத்துவ உறுப்பினர்களினால் ஆற்றப்படும் உரைகள், காணொளிகள், சமூக ஊடகங்கள், நேர்காணல்கள், பத்திரிகை மாநாடுகள், பத்திரிகைச் செய்திகள் அல்லது பல்வேறுபட்ட அறிக்கைகள், நிதியியல் துறை, வியாபாரத் துறை, பாராளுமன்றம், பன்னாட்டு முகவர்கள், தரமிடல் முகவர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் போன்ற வேறுபட்ட வாசகர்களுக்கு சென்றடைவதனாலும் சில வாசகர்களைச் சென்றடைவதில் சில அலைவரிசைகள் மிகக் காத்திரமான தன்மையினைக் கொண்டிருப்பதனைக் கவனத்தில் கொண்டும், அத்தகைய குறிப்பிட்ட வாசகர்களைச் சென்றடையக்கூடிய விதத்தில் அலைவரிசைகளைத் தெரிவுசெய்வதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். பொருளாதாரம், நிதியியல் முறைமை அதேபோன்று மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் ஆழமான புரிதலை ஏற்படுத்தும் நோக்குடன் படங்கள் மூலம் கதை சொல்லுதல், தகவல் படவரைக்கலையினைப் பயன்படுத்தல் அதேபோன்று காணொளிகளைப் பயன்படுத்தல் என்பன தொடர்பூட்டுவதிலும் மாணவர்களுக்கு பொதுமக்களுக்கும் கல்வி புகட்டுவதிலும் மிகப் பிரபல்யமாக மாறி வருகின்றன. வேறுபட்ட வாசகர்களுக்கு ஏற்றவிதத்தில் தொடர்பூட்டல்களை மாற்றியமைத்துக் கொள்வதும் தொடர்பூட்டலில் படிமுறையாக்கப்பட்ட அணுகுமுறைகளை மேற்கொள்வதும் உண்மையில் மத்திய வங்கிகள் குடித்தொகையினரில் வேறுபட்ட பிரிவினரிடையே காத்திரமான விதத்தில் சென்றடைவதனை இயலுமைப்படுத்தும்.

## 7. முடிவுரை

1990 களுக்கு முன்னர் மத்திய வங்கித்தொழிலின் இரகசியங்கள் மறைக்கப்பட்டிருந்தன. எனினும், அதன்பின்னர் குறிப்பாக, பெடரல் றிசேர்வ் முறைமையின் ஆளுநர் சபையின் தலைவராக இருந்த அலொன் கிறீன்ஸ்பன்னின் காலப்பகுதியினைத் தொடர்ந்து மத்திய வங்கிகள் அவற்றின் கொள்கைத் தீர்மானங்கள் பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்கான விருப்பத்தினை உறுதியாக அதிகரித்திருக்கின்றன. அதனைத் தொடர்ந்து மத்திய வங்கிகள் அவை எதிர்காலத்தில் செய்யக்கூடிய தீர்மானங்கள் பற்றி கதைப்பதற்குரிய அவற்றின் நாட்டத்தினை அதிகரித்து வந்திருக்கின்றன.

மத்திய வங்கிகளின் தொடர்பூட்டல்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களுடன் சேர்ந்து அவற்றின் வெளிப்படைத்தன்மையிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மேலும், மத்திய வங்கியின் தொடர்பூட்டல் காரணமாக ஏற்பட்ட பெறுபேறின் காரணமாக மத்திய வங்கிகளின் கொள்கை நடவடிக்கைகளில், குறிப்பாக, நாணயக் கொள்கையின் அதிகரித்த ஊகத்தன்மைகள் மத்திய வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளின் காத்திரமான தன்மையினை மேம்படுத்த உதவின.

**உசாத்துணை நூல்கள்:**


Bascand, Geoff , "Communication, understanding, and credibility", Speech delivered to Admirals Breakfast Club in Auckland on 6 December 2013, Reserve Bank of New Zealand, 2013.

Stankova, Olga, "Frontiers of Economic Policy Communications", Communications Department, International Monetary Fund, 2019.

Sveriges Riksbank, "The Riksbank's communication policy", 2018.

Woodford, Michael, "Central-Bank Communication and Policy Effectiveness", Presented at the Federal Reserve Bank of Kansas City Symposium "The Greenspan Era: Lessons for the Future", Jackson Hole, Wyoming, August 25-27, 2005, Columbia University, 2005.

Ehrmann, Michael; Gaballo, Gaetano; Hoffmann, Peter; Strasser, Georg, "Signalling a future path of interest rates: The international evidence on forward guidance", VOX EU, CEPR (Centre for Economic Policy Research), 2019.

# மூப்படையும் இலங்கையர் சமூகப் பொருளாதாரத் தாக்கங்களும் புதிய வாய்ப்புக்களும்

முனைவர். சுஜீதா ஜெகஜீவன்
பிரதிப் பணிப்பாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

### 1.0 பின்னணி


உலகில் பெரும்பான்மையான நாடுகள் குடித்தொகை மாற்றத்தின் பிந்திய கட்டத்திலிருப்பதனால் வயதடையும் சனத்தொகையென்பது ஒரு உலகளாவிய குடித்தொகைப் போக்காகக் கருதப்படுகின்றது. இது பிறப்பு வீதத்தில் விரைவான வீழ்ச்சியுடன் மருத்துவ மற்றும் சுகாதார நலச் சேவைகளிலான முன்னேற்றத்தின் விளைவான நீண்ட ஆயுட்காலம் போன்றவற்றின் இணைந்த விளைவாகும். ஐக்கிய நாடுகள் சபை (UN, 2019) இன்படி 65 வயதிற்கு மேற்பட்டோர் 2019இல் 11 நபர்களில் 1 நபர் என்பதுடன் ஒப்பிடுமிடத்து 2050இல் 6 நபர்களில் 1 நபராகவிருக்குமென்பதுடன் 2019 இற்கும் 2050 இற்குமிடையில் தெற்காசியா உட்பட நான்கு பிராந்தியங்களில் வயதடைந்த குடித்தொகை ஆகக் குறைந்தது இரு மடங்காகும். மேலும் 65 வயதுக்கு மேற்பட்டோரில் மூன்றில் ஒரு நபர் தெற்கு மற்றும் கிழக்காசியாவில் வசிப்பதனையும் இது குறித்துக்காட்டுகின்றது. இந்தக் குடித்தொகை மாற்றம் இலங்கையில் கரிசனைக்குரியதொன்றாகவிருப்பதுடன் பொதுமக்கள், அரசாங்கம் மற்றும் நிறுவனங்கள் போன்றவை மூப்படைதலின் பொருளாதார மற்றும் சமூக விளைவுகளுக்கு முகம்கொடுப்பதற்கு இன்னமும் முழுமையாக தயாராகாமலிருப்பது கவலைக்குரியதாகும். இந்த மூப்படைதல் பல்வேறு சவால்களை பொருளாதாரங்களில் கொண்டுள்ள போதிலும், பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நியதிகளில் பல புதிய சந்தர்ப்பங்களையும் உருவாக்கியுள்ளது. இலங்கையில் வயதடையும் சனத்தொகையின் பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்களை கலந்துரையாடுகின்ற அதேவேளை இந்த மாற்றத்தினால் புதிதாக உருவாகியுள்ள/ உருவாகவுள்ள சந்தர்ப்பங்களையும் எடுத்துரைப்பதனை இந்த கட்டுரை நோக்காகக் கொண்டுள்ளது. மேலும் வயதடையும் சனத்தொகையின் பாதகமான சமூகப் பொருளாதாரத் தாக்கங்களைக் குறைப்பதற்கும் இத்தகைய தவிர்க்கமுடியாத மாற்றத்தினால் உருவாகியுள்ள புதிய சந்தர்ப்பங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதற்காகவும் அரசாங்கம், தொடர்புபட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினர் போன்றோரினால் மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய கொள்கை வழிமுறைகளும் இங்கு ஆராயப்படுகின்றன.

### 2.0 இலங்கையில் குடித்தொகையின் பரிணாமம்

இலங்கை, ஏனைய விரைவாக வயதடையும் தெற்காசிய நாடுகளை விட விரைவான வீதத்திலும் வயதடையும் சனத்தொகையின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஏனைய நாடுகளினைவிட ஒப்பீட்டளவில் பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்பக் கட்டத்திலும் இவ்வாறானதொரு குடித்தொகைப் பரிமாற்றத்திற்குட்பட்டுள்ளது (ADB, 2019).

வரைபடம் 1ஆனது 65 வயதுக்கும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சனத்தொகையின் நியதிகளில் உலகின் முக்கிய புவியியல் வலயங்களுடன் ஒப்பிடுமிடத்து இலங்கையின் இந்தக் குடித்தொகை மாற்றத்தின் தீவிரத்தன்மையினை வெளிப்படுத்துவதில் துணைபுரியும் வயதடையும் குடித்தொகையின் விரைவுத் தன்மையில் இலங்கை 2010ஆம் ஆண்டளவில் ஆசியா மற்றும் தெற்காசியாவினை விஞ்சியதுடன் உலகின் முக்கிய வயதடைந்த சனத்தொகையைக் கொண்ட

வரைபடம் 1: வயதடைந்த குடித்தொகை ஒப்பீடு - இலங்கையும் தெரிவுசெய்யப்பட்ட பிராந்தியங்களும்





மூலம்: World Population Prospects, 2019, United Nations

பிராந்தியங்களான வடஅமெரிக்கா மற்றும் ஐரோப்பாவினை முறையே 2050ஆம் ஆண்டளவிலும் 2075ஆம் ஆண்டளவிலும் விஞ்சுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மிக விரைவானளவில் இந்தக் குடித்தொகை மாற்றம் நடைபெறுவதன் காரணமாக 21ஆம் நூற்றாண்டின் இறுதியளவில் இலங்கை ஏனைய பிராந்தியங்களுடன் ஒப்பிடுமிடத்து சனத்தொகையில் ஆகக்கூடிய பங்கில் வயதடைந்த சனத்தொகையினைக் கொண்டிருக்குமெனவும் எறிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வயதடையும் சமூகம் எனும் நிலையிலிருந்து வயதடைந்த சமூகம் எனும் நிலைக்கு மாற்றமடைவதற்கு எடுத்துக்கொள்ளும் காலம் பிரான்ஸ் (115 ஆண்டுகள், அவுஸ்திரேலியா (73 ஆண்டுகள்) மற்றும் அமெரிக்கா (69 ஆண்டுகள்) என்ற நீண்ட காலத்துடன் ஒப்பிடுமிடத்து இலங்கையினைப் பொறுத்தவரை இது 25 ஆண்டுகளாக (2007 - 2032) மாத்திரமே இருப்பதனையும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கையின் தற்போதுள்ளதும், 30 ஆண்டுகளுக்கு முன்னரும், 30 ஆண்டுகளின் பின்னர் எதிர்கூறப்படுவதுமான "குடித்தொகை முக்கோணம்" எனப்படுகின்ற சனத்தொகையின் வயது மற்றும் பால் அடிப்படையிலான பரம்பலின் வரைபினை வரைபடம் 2 காட்டுகின்றது. இலங்கையின் குடித்தொகை முக்கோணம் "ஒடுக்கமான முக்கோணமொன்றாக" மாறிவருவதனையும் விரிவடைந்துவரும் வயதடைந்த சனத்தொகைக்கெதிராக இளம் வயதுடைய சனத்தொகை சுருங்கி வருவதனையும் இவ்வரைபடம் தெளிவுபடுத்துகின்றது.

வரைபடம் 2: கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் இலங்கையின் குடித்தொகை முக்கோணம்




மூலம்: World Population Prospects, 2019, United Nations

அட்டவணை 1: இலங்கையின் வயதடையும் குடித்தொகையின் முக்கிய பண்புகள்

| | 1950 | 1970 | 1990 | 2000 | 2010 | 2020 | 2030 | 2050 | 2075 | 2100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தக் குடித்தொகை (மில்லியன்) | 7.97 | 12.49 | 17.33 | 18.78 | 20.26 | 21.41 | 22.02 | 21.81 | 19.19 | 15.28 |
| இடைய வயது (ஆண்டுகளில்) | 21.2 | 19.6 | 24.2 | 27.6 | 30.4 | 34 | 36.6 | 41.2 | 47.4 | 53.7 |
| 65 வயதுக்கு மேற்பட்ட குடித்தொகை (மொத்தத்தின் சதவீதமாக) | 8.8 | 3.7 | 5.5 | 6.2 | 7.4 | 11.2 | 15.4 | 22.6 | 28.00 | 36.5 |
| வயது முதிர்தோரின் தங்கியிருத்தல் விகிதம்[1] | 25.3 | 10.1 | 12.7 | 13 | 14.5 | 22.3 | 31.5 | 48 | 60.40 | 84.7 |
| உள்ளார்ந்த ஆதரவு விகிதம்[2] | 4 | 9.9 | 7.9 | 7.7 | 6.9 | 4.5 | 3.2 | 2.1 | 1.7 | 1.2 |
| ஆண்களின் பிறப்பின் போதான எதிர்பார்க்கும் ஆயுட்காலம் (ஆண்டுகளில்) | 53.1 | 61.1 | 65.7 | 65.6 | 71.5 | 73.3 | 75.2 | 79.1 | 83.1 | 85.9 |
| பெண்களின் பிறப்பின் போதான எதிர்பார்க்கும் ஆயுட்காலம் (ஆண்டுகளில்) | 56.8 | 65.2 | 72.7 | 72.8 | 78.5 | 80.1 | 81.4 | 84 | 86.8 | 89.6 |

1 வயது முதிர்ந்தோரின் தங்கியிருத்தல் விகிதமென்பது 25 - 64 வயதுடைய குடித்தொகையின் விகிதமாக 65 வயதுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட குடித்தொகையாகும்.

2 உள்ளார்ந்த ஆதரவு விகிதமென்பது 65 வயது அல்லது அதற்கு மேற்பட்ட குடித்தொகையின் விகிதமாக 25 - 64 வயதுடைய குடித்தொகையாகும்.

மூலம்: World Population Prospects, 2019, United Nations

இலங்கையின் வயதடையும் சனத்தொகையின் முக்கிய அம்சங்களினை அட்டவணை 1 உள்ளடக்குகின்றது. இலங்கையின் சனத்தொகை 22 மில்லியனுக்கு சற்று மேலாக 2038ஆம் ஆண்டளவில் உயர்வடைந்ததன் பின்னர் படிப்படியாக சுருக்கமடையுமெனவும் இதற்கு 65 வயதிற்கு மேற்பட்ட வகுப்பினரைத் தவிர்ந்த ஏனைய வயதுப் பிரிவினரின் சனத்தொகையிலான சுருக்கம் பங்களிப்புச் செய்யுமெனவும் எறிவு செய்யப்படுகின்றது. இது மாத்திரமின்றி தற்போதைய தசாப்தத்தின் இறுதியிலிருந்து இக்குடித்தொகைப் போக்கு தொழில்புரியும் வயதுடைய சனத்தொகையில் ஒரு சுருக்கத்திற்கும் வழிவகுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையின் மூப்படையும் சனத்தொகைப் பிரச்சனையின் மற்றொரு பரிணாமம் அதிகரித்தளவில் பெண்களின் வயதடையும் போக்காகும். ஆண்களைவிட பெண்களின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் உயர்வாகவிருப்பது பொதுவாக பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் பாதிக்கப்படக்கூடியதாகவிருக்கும் பெண்கள் வயதடைந்த குடித்தொகையில் அதிக பங்கு வகிப்பதனை எடுத்துக்காட்டுகின்றது. மேலும், இலங்கையர் “வயதடைந்தவர்” எனும் பிரிவிலிருந்து “மிகவும் வயதடைந்தவர்” எனும் பிரிவிற்கு மிக விரைவாக முன்னேறிவருவதனையும் எறிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. 60 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் 80 வயதுக்கு மேற்பட்ட முதியோரின் பங்கு 2010ஆம் ஆண்டில் 12 சதவீதத்திலிருந்து 2100ஆம் ஆண்டில் 38 சதவீதத்திற்கு உயர்வடையுமெனும் எதிர்வுகூறல் நாட்டின் சமூக மற்றும் நலச் சேவைகள் முறைமைகளுக்கு அச்சுறுத்தலாகவிருக்கக்கூடுமென்பதற்கு எச்சரிக்கையாகவிருக்கின்றது (ADB, 2019). இலங்கையின் வயது முதிர்ந்தவர்களில் 78 சதவீதமானவர்கள் தாழ்ந்த வருமானமும், சமூக உட்கட்டமைப்பு, நலன்புரி மற்றும் நலச் சேவைகளில் தாழ்ந்த மட்டங்களைக் கொண்ட கிராமப்பகுதியில் வசதிப்பதனையும் இந்த அறிக்கை கோடிட்டுக்காட்டுகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களும் இலங்கையில் வயதடையும் குடித்தொகைப் போக்கின் தீவிரத்தன்மையையும் அதன் தாக்கங்களை மட்டுப்படுத்துவதற்கான உடனடியான கொள்கை வழிமுறைகளின் தேவைகளையும் தெளிவாகக் காட்டுகின்றன.

(1) வயது முதிர்ந்தோரின் தங்கியிருத்தல் விகிதமென்பது 25 - 64 வயதுடைய குடித்தொகையின் விகிதமாக 65 வயதுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட குடித்தொகையாகும்.

(2) உள்ளார்ந்த ஆதரவு விகிதமென்பது 65 வயது அல்லது அதற்கு மேற்பட்ட குடித்தொகையின் விகிதமாக 25 - 64 வயதுடைய குடித்தொகையாகும்.

## 3.0 வயதடையும் குடித்தொகையின் சமூகப் பொருளாதாரத் தாக்கங்கள்

குடித்தொகை மாற்றங்கள் சில நாடுகளுக்கு பொருளாதார வளர்ச்சிக்கான சாத்தியத்தினை உருவாக்குகின்ற அதேவேளையில் சில நாடுகளிற்கு இது மேலதிக சமூக மற்றும் பொருளாதார சுமைகளினை உருவாக்குகின்றன. குடித்தொகையின் வயது ரீதியான பரம்பலினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழங்கப்படுகின்ற தூண்டுதல் “குடித்தொகை அனுகூலமென” அறியப்படுகின்றது. இலங்கையின் குடித்தொகை அனுகூலம் 1990ஆம் ஆண்டளவில் தொடங்கியதுடன் 2030ஆம் ஆண்டளவில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார செயற்பாடுகளில் சுறுசுறுப்புடன் பங்கேற்கின்ற இளைஞர்களின் அதிகரித்த பங்குடன் கூடிய குடித்தொகை அனுகூலத்தினை கிழக்காசிய நாடுகள் முறையாகப் பயன்படுத்தி உயர்ந்த வளர்ச்சியினை அடைந்து கொண்டமையினை வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. எனினும், அவ்வாறான கணிசமான முன்னேற்றமெதுவும்

பொருளாதார வளர்ச்சியில் இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களில் அவதானிக்கப்படவில்லை என்பதும் வளர்ச்சிக்கான பல்வேறு அமைப்பியல் தடைகளின் காரணமாக இலங்கை இந்த அநுகூலத்தினை பெருமளவில் பயன்படுத்தத் தவறியுள்ளதென்பதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. முதியோர் சனத்தொகையினை அதிகளவில் கொண்டிருப்பதும் அதன் விரைவான வளர்ச்சியும் சமூகச் சூழலில் பல நேரடியான பிரச்சனைகளையும் சவால்களையும் உருவாக்குமென்பதுடன் இது பரந்த பொருளாதாரம் முழுவதிலும் சவால்களையும் உருவாக்கக்கூடும். இது தொடர்பான முக்கிய சவால்கள் சுருக்கமாக கீழே கோடிட்டுக் காட்டப்படுகின்றன.

- **பேரண்டப் பொருளாதாரத் தாக்கங்கள்**

துரிதமாக வயதடையும் குடித்தொகை பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் பகிர்ந்தளிப்பு மீது பல்வேறு வழிகளில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். தாழ்ந்த தொழில்புரியும் வயதுடைய குடித்தொகை, தாழ்ந்த உற்பத்தித்திறன், உயர்ந்த தங்கியிருத்தல் மற்றும் உயர்ந்த முதியோர் பராமரிப்பு செலவினம் போன்றவற்றினால் தனியார் துறை மற்றும் அரச துறையின் தாழ்ந்த சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம் அத்துடன் தாழ்ந்த மட்டத்திலான புத்துருவாக்கம் போன்றவை வளர்ச்சி மீதான சாத்தியமான எதிர்க்கணிய விளைவுகளாக இருக்கக்கூடும். மூப்படையும் குடித்தொகையின் மிக முக்கியமான தாக்கமாகவிருப்பது தொழில்புரியும் குடித்தொகையின் வளர்ச்சியிலான வீழ்ச்சி அல்லது இப்பிரிவிலுள்ள குடித்தொகையிலான சுருக்கமாகும். இலங்கையில் தொழில்புரியும் குடித்தொகையின் வளர்ச்சி தற்போதைய தசாப்தத்தில் தேக்கமடைந்துள்ளதுடன் 2030ஆம் ஆண்டளவிலிருந்து சுருக்கமடையத் தொடங்குமெனவும் எறிவு செய்யப்பட்டுள்ளது. தொழில்புரியும் குடித்தொகையின் சுருக்கம் "பொருளாதார ரீதியாக செயற்படுகின்ற" குடித்தொகை அல்லது தொழிற்படையில் சுருக்கத்திற்கு வழிகோலுகின்றது. தொழில்புரிவோர் தமது பிந்திய வயதிலுள்ள காலத்தில் உடல் ரீதியிலும் அறிவாற்றல் ரீதியிலும் ஒரு தேய்வு காணப்படக் கூடுமென்பதனால் மூப்படைதலானது உற்பத்திச் செய்முறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஊழியர்களின் அளவினைக் குறைப்பது மாத்திரமல்லாது ஊழியத்தின் தரத்தினையும் பாதித்து ஊழியர் உற்பத்தித் திறனையும் ஒட்டுமொத்த காரணிகளின் உற்பத்தித் திறனையும் குறைவடையச் செய்யக்கூடும். எனினும், அனுபவம், திறமை மற்றும் நேர்க்கணிய மனப்பாங்கு போன்வற்றுடன் உற்பத்தித்திறன் வயதடைந்தோர் மத்தியில் அதிகரிக்குமென்கின்ற எதிர்வாதங்களும் முன்வைக்கப்படுவதுடன் இது ஆராய்ச்சிகளினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, வயது-உற்பத்தித்திறன் தோற்றப்பாடு நாடுகள் சார்ந்ததாகவிருப்பதுடன் இது ஆழமான ஆராய்ச்சிகளினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பாரம்பரியமான வாழ்க்கைச் சுற்றோட்டக் கருதுகோளானது தனிநபர்கள் தாம் உழைக்கின்ற காலப்பகுதியில் சேமிப்பதாகவும் இளைப்பாறியதன் பின்னர் அச்சேமிப்பினை பயன்படுத்தி நுகர்வினை மேற்கொள்வதாகவும் கருதுகின்றது. எனினும், ஊழியத்திலிருந்தான வருவாய் எதுவும் கிடைக்காமையினால் ஓய்வூதியத்திலும் ஏனைய சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவுகளிலும் மாத்திரம் பெருமளவில் தங்கியிருப்பதனால் முதியோர் குடித்தொகை ஒப்பீட்டளவில் குறைவான நுகர்வினை மேற்கொள்வதாக எதிர்வாதங்களுள்ளன. பொதுவாக, மூப்படையும் குடித்தொகையின் காரணமாக தேசிய சேமிப்புக்கள் குறைவடைவது சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மீதியினை பலவீனமடையச் செய்வதுடன் அதன் மூலம் நிதியியல் கணக்குப் பாய்ச்சல்களின் மீதும் தாக்கம் செலுத்தக்கூடும். சேமிப்பு மற்றும் முதலீட்டுப் போக்கானது சமநிலை உண்மை வட்டி வீதம் மீதும் தாக்கங்களைச் செலுத்தி அதன் மூலம் நாணயக் கொள்கையிலும் நிதியியல் முறைமையிலும் பாதிப்பினை ஏற்படுத்த முடியும் (IMF, 2019). மூலதன-ஊழியர் விகிதங்களிலான மாற்றங்களும் காரணி விலைகள் மற்றும் உற்பத்தி மீதான இதன் விளைவு போன்றவை மூலதனம் மற்றும் ஊழியத்தின் நாடுகளுக்கிடையிலான பரம்பலினை உருவாக்குவதுடன் நாடு முதலீடு மற்றும் ஊழியத்தின் சுயாதீன நகர்விற்கு அனுமதியளிக்குமாயின் மூப்படையின் குடித்தொகை எதிர்க்கணியத் தாக்கங்களை ஓரளவிற்கு குறைக்கமுடியுமென்பதனையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. மேலும், வயதடைந்த குடித்தொகையின் பிரசன்னமானது தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை மீது வீட்டுத் துறையின் நுகர்வின் பதிலிறுத்தலினை மட்டுப்படுத்தி வியாபாரச் சுழற்சியினை சுமூகமாக்குகின்ற நாணயக் கொள்கையின் வகிபாகத்தினை மட்டுப்படுத்தக்கூடுமென ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன. இத்தகைய முடிவுகள் சுருக்கமடைகின்ற குடித்தொகை, தாழ்ந்த சமநிலை வட்டி வீதங்கள் மற்றும் தாழ்ந்த பணவீக்க எதிர்பார்க்கைகளைக் கொண்டுள்ள யப்பானில் பொருளாதாரத்தினை மீட்டெடுப்பதற்காக யப்பான் வங்கியினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை பலகாலமாக சவாலுக்குட்படுத்தியிருப்பதில் உண்மையாக்கியுள்ளது (Han, 2019). அதேபோன்று, வயதடைந்த குடித்தொகையானது பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுதலில் அரசாங்கத்தின் நுகர்வுச் செலவினத்தின் (இறைப் பெருக்கி) வினைத்திறனையும் மட்டுப்படுத்துவதற்காகவும் இறைத் தூண்டல் வழிமுறைகளை வடிவமைப்பதில் குடித்தொகையின் வயது ரீதியான பரம்பலினைக் கருத்திற்கொள்ள வேண்டிய தேவையினையும் அண்மைய ஆய்வொன்று வெளிக்காட்டியுள்ளது (Basso and Rachedi, 2020).


வயதடைந்த சனத்தொகையின் மிகவும் நேரடியானதும் முக்கியத்துவமான பொருளாதாரத் தாக்கம் இறைச்சுமை மீதான அதன் அதிகரித்த தாக்கமாகும். இந்தக் குடித்தொகைக் கட்டமைப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு வழங்கல், சுகாதாரம் மற்றும் நீண்டகால நலக் கவனிப்பு வழங்கல் போன்றவற்றின் மீது உயர்ந்த இறைச் செலவினத்திற்கு வழிவகுக்கும். இலங்கையில் உயர்ந்த

வரவுசெலவுத் திட்டத்தின் பற்றாக்குறை, அரச படுகடன் மற்றும் இத்தகைய நலநோன்புகை வசதிகளின் மீது செலவிடுவதற்கு அரசிற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள இறை இடைவெளியின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு போன்றவற்றைக் கருத்திற்கொள்ளும் போது இந்த அதிகரித்த அரச செலவினத்திற்கான தேவை மிகவும் கரிசனைக்குரியதாகவிருக்கும். உயர்வான ஆயுட்காலம் காணப்படுகின்ற சூழலில் அரச துறை இளைப்பாறலுக்கான வயது 60 வயதாக நிலையாகவிருப்பதும் இளைப்பாறலுக்கு தகுதிபெறும் அரச பணியாளரின் எண்ணிக்கை விரைவாக அதிகரிப்பதும் எதிர்காலத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவுச் சுமையினை சுமக்கமுடியாத நிலைக்கு மாற்றியமைக்கும். மேலும், பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ அரசாங்கத்தின் நிதியிடலுடன் கூடிய பல்வேறு வயதானவர்களுக்கான வருமானப் பாதுகாப்புத் திட்டங்கள் இலங்கையில் தொழிற்படுத்தப்படுவது அரசிற்கான சுமையினை எதிர்வரும் காலத்தில் மேலும் அதிகரிக்கும். தொற்றா நோய்களினால் முதன்மைப்படுத்தப்பட்ட நலத் துறையின் முன்னேற்றம் ஏனைய தெற்காசிய நாடுகளைப் போலன்றி இலங்கையில் உயர் வருமானம் கொண்ட ஐரோப்பிய நாடொன்றினை ஒத்ததாகவுள்ளது (ADB, 2019). எதிர்வரும் ஆண்டுகளின் தொற்றுநோய் மற்றும் தொற்றா நோய்களுக்காக பொது நலக் கவனிப்பு சேவைகளினைப் பயன்படுத்தும் வயதானவர்களின் பங்கு பலூன் போல விரியக்கூடுமென்பதனால் இத்தகைய சாதனையை தொடர்ந்தும் தக்கவைப்பது சவால்மிக்கதாகலாம். அரச துறை வெளிநோயாளர் பிரிவின் பயன்பாட்டு வீதம் வயதடைந்த பிரிவினரிடையே ஒரு கூம்பு வடிவத்திலிருப்பதனையும் அது கடந்த காலப்பகுதியில் ஒரு சமாந்தரமான மேல் நோக்கிய நகர்வினை பதிவுசெய்திருப்பதனையும் வரைபடம் 3 காட்டுகின்றது. வயதடையும் குடித்தொகையானது அதிகரிக்கின்ற அரச செலவினத்திற்கு மாத்திரமல்லாது அரச அரசிறைக்கான வரித்தளத்தின் சுருக்கத்திற்கும் வழிவகுக்கின்றது. இது வரி முறைமை மாற்றமின்றிக் காணப்படும் சந்தர்ப்பத்தில் அரசின் இறை இடைவெளியைக் குறைக்கக்கூடியதாகவுள்ள வேளையில் அரசிறையிலான குறைநிரப்புச் செய்வதற்காக வரி அதிகரிக்கப்படுமாயின் இது தொழில்புரியும் வயதுடையோரின் மீதும் வியாபார வரி செலுத்தினர் மீதும் அதிகரித்த வரிச் சுமையை ஏற்படுத்தக்கூடும்.

- **சமூகத் தாக்கங்கள்**


வயதடையும் குடித்தொகையானது பேரண்டப் பொருளாதாரத் தாக்கங்களிற்கு மேலதிகமாக வயது முதிர்ந்தோர், நலக்காப்பாளர் மற்றும் நாடு முழுவதிலும் பல்வேறு சமூகத்தாக்கங்களைத் தோற்றுவிக்கக்கூடும். இலங்கையானது இளைய தலைமுறையினரின் குடும்ப ஆதரவு மூலமான பாரம்பரியமான முதியோர் நலனோம்புகை முறைமையினைக் கொண்டிருக்கின்றது. எனினும், மாற்றமடைந்துவரும் வாழ்வியல் முறைமைகள், சுருக்கமடைந்துவரும் குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கை நாளுக்குள்ளேயான அல்லது நாட்டிற்கு வெளியிலான குடிப்பெயர்வினால் குடும்பத்தின் பங்கு குறைவடைந்து வருகின்றமை மற்றும் முதியோர் நலனோம்புகைக் கடப்பாடு தொடர்பான மனப்பாங்கு மாறிவருகின்றமை போன்றவற்றினால் இந்தப் பாரம்பரிய சமூகப் பாதுகாப்பு முறைமை தற்பொழுது சவால் மிக்கதாக மாறிவருகின்றது. (CBSL, 2018). குடும்பத்தினருடன் வாழ்கின்ற முதியோரின் பங்கு தொடர்ந்தும் உயர்வாகக் காணப்படுகின்றதாயினும் தனியாக வசிக்கின்ற முதியோரின் பங்கு விரைவாக அதிகரித்து வருவது கண்கூடாகும். இலங்கையில் தனியாக வசிக்கின்ற முதியோரின் அதிகரிப்பு வீதமானது 40 ஆண்டுகளுக்கு முன்னர் யப்பானில் அவதானிக்கப்பட்ட வீதத்துடன் ஒப்பிடக்கூடியதாகவிருப்பது தனியாக வசிக்கின்ற முதியோருக்கான சமூகப் பொருளாதாரத் தேவைகளை வழங்குவதில் அரசாங்கத்தினதும் சமூகத்தினதும் அதிகரித்துவரும் சுமையினையும் எடுத்துக்காட்டுவதாக ADB (2019) சுட்டிக்காட்டுகின்றது. மேலும், ஒரு சிறிய பகுதியினர் மாத்திரமே சம்பளம்/ ஓய்வூதியம் மற்றும் ஏதேனுமொரு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனோம்புகைக் கொடுப்பனவுகளை கிரமமாகப் பெறுகின்றமையினால்

**வரைபடம் 3: ஆண்களிடையேயும் பெண்களிடையேயும் வெளிநோயாளர் பயன்படுத்தல் வீதம் - 1996-2016**




மூலம்: Growing old before becoming rich, Asian Development Bank, 2019

வரைபடம் 4: இலங்கையின் தங்கியிருப்போர் விகிதங்களின் போக்கு - 1960-2100




மூலம்: Growing old before becoming rich, Asian Development Bank, 2019

இலங்கையிலுள்ள முதியோர் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிப்படையக் கூடியவர்களாகவுள்ளனர். இலங்கையின் குடித்தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறைந்தவர்கள் மாத்திரமே ஏதேனுமொரு சமூகப் பாதுகாப்பு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் ஏறத்தாழ 25 சதவீதமானவர்களே ஓய்வூதியம் பெறுகின்றனர் (ILO, 2017-19). வயது முதிர்ந்தோரின் தங்கியிருத்தல் விகிதம் தொடர்ச்சியாக அதிகரிப்பது நலக்காப்பு வழங்குகின்ற குடும்ப உறுப்பினரின் நிதியியல் நிலை மீதும் வாழ்வியல் முறைமை மீதும் பாதகமான சமூகத்தாக்கத்தினைக் கொண்டிருக்கும். எதிர்காலத்தில் இலங்கையில் வயது முதிர்ந்தோரின் தங்கியிருத்தல் விகிதம் மிக விரைவாக அதிகரித்துச் செல்லும்போக்கினை வரைபடம் 4 விளக்குகின்றது.

### 4.0 வயதடையும் குடித்தொகையினால் உருவாகும் புதிய வாய்ப்புக்கள்

வயதடையும் குடித்தொகையானது மேலே குறிப்பிட்டது போன்று பல்வேறு சவால்களை தோற்றுவிப்பதற்குப் புறம்பாக பொருளாதார, சமூக மற்றும் கலாச்சாரப் பரிமாணங்களில் புதிய வாய்ப்புக்களுக்கான வழியினை தனியார் துறைக்கும் நாட்டிற்கும் உருவாக்கக்கூடும். "நரைப் பொருளாதாரம்" (Silver Economy) பற்றிக் கலந்துரையாடுதல், திட்டமிடல் மற்றும் அதன் வாய்ப்புக்களையும் தன்னகப்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் உபாயங்களை வடிவமைத்தல் போன்ற நியதிகளில் முன்னேற்றமடைந்த நாடுகள் பல மைல்களைக் கடந்துள்ளன. ஐரோப்பிய ஆணைக்குழு (European Commission, 2015) நரைப் பொருளாதாரமென்பதனை "50 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட வயதுடையோரது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான அனைத்துப் பொருளாதார செயற்பாடுகளின் கூட்டுத்தொகையென" வரைவிலக்கணப்படுத்துகின்றது. உலகளாவிய ரீதியில் நரைப் பொருளாதாரம் விரிவாக விரிவடைகின்ற வேளையில் பாரிய குடித்தொகையைக் கொண்டதும் விரைவாக வயதடைகின்றதுமான ஆசியாவிலுள்ள கொள்கை வகுப்பாளர்களும் தனியார் துறையும் இக்குடித்தொகை மாற்றத்தின் வாய்ப்புக்களை இன்னமும் பெரிதளவில் முன்னுணரவில்லை என்பதே உண்மையாகும். மூப்படைந்த குடித்தொகை அதிகரிப்பின் பொருளாதார நன்மைகளை ஆராய்வது தொடர்பில் "நீடித்து வாழ்தல் அநுகூலம்" எனும் புதிய சொற்றொடரொன்றும் தோற்றம்பெற்றுள்ளது. இந்த வகையில் வயதடைந்த குடித்தொகையிலிருந்து இலங்கையானது, இரண்டாவது குடித்தொகை அனுகூலத்தினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பிருக்கின்றது. நுகர்விற்கான விருப்பத்தேர்வு வயதுடன் சேர்ந்து மாற்றமடைவதனால் அதிக வயதடையும் குடித்தொகைப் பொருளாதாரங்களில் வீட்டுடமையாளரின் நுகர்வு விருப்பத்தேர்வில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படுவது புதிய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்வியினை உருவாக்குகின்றது. மருத்துவச் சிகிச்சை, மருந்துப் பொருட்கள், மருத்துவச் சாதனங்கள் மற்றும் வசதியளிக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான முன்னெப்பொழுதுமில்லாத அதிகரித்த கேள்வி உருவாக்கத்தினால் சுகாதார மற்றும் நலனோம்புகைத் துறை பெருமளவில் நன்மையடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையில் மிகவும் ஆரம்பகட்டத்திலேயேயுள்ள நீண்டகால நலனோம்புகை வழங்கல் சேவை துரிதமாக விரிவடைவதற்கான உள்ளார்ந்த வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதேபோன்று, ஓய்வூதிய சேமிப்புக்கள், ஒட்டுமொத்தச் சேமிப்புக்கள், மருத்துவக் கடன், மருத்துவர் காப்புறுதி, முதலீடு மற்றும்

சொத்து முகாமைத்துவம் போன்ற பாரம்பரியமற்ற நிதியியல் கருவிகள் மற்றும் சேவைகளுக்கான அதிகரித்த புதிய கேள்விகளினை வங்கித்தொழில், நிதியியல் மற்றும் காப்புறுதித் துறைகள் பயன்படுத்திக்கொள்ள முடியும். மேலும், சுற்றுலா மற்றும் போக்குவரத்துத் துறை, தல யாத்திரை உள்ளடங்கலாக நரைச் சுற்றுலாச் சந்தையினை சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளமுடியும். எதிர்காலத்தில் கட்டாய ஓய்வு பெறும் வயதெல்லை மாற்றியமைக்கப்படுவதற்கும் 60 வயதிற்குப் பின்னரும் தொழில்நிலை, சுயதொழில் மற்றும் முயற்சியாண்மையினை முதியவர்கள் தொடர்வதற்குமான சாத்தியக்கூறு பெருமளவில் காணப்படுகிறது. நீண்ட தொழில்வாழ்வு, சிரேஷ்ட வியாபார முயற்சிகள் போன்றவை மீள்திறன் வழங்கல் மற்றும் மீள் தொழிற்பயிற்சி போன்றவற்றிற்கான தேவையினை உருவாக்குவதனால் பல முன்னேற்றமடைந்த நாடுகளில் அவதானிக்கப்பட்டது போன்று வாழ்நாள் முழுவதற்குமான கல்விக் கற்கைநெறிகள் மற்றும் குறுகிய தொழிற்பயிற்சி வழங்குதல் போன்றவற்றை நிறைவேற்றுவதற்கான கற்கைநெறிகளை வடிவமைத்து வழங்குவதற்கு கல்வித்துறைக்கு வாய்ப்புக்கள் உருவாக்கக்கூடும். மேலும், வீட்டினை தன்னியக்கமாக்குதல், உணரி (Sensor) மற்றும் அபாய அறிவிப்பு முறைமைகளைப் பொருத்துதல் போன்றவற்றிற்கான தனித்துவமான தேவைகளின் அவசியத்தினால் கட்டவாக்கத்துடன் தொடர்புபட்ட துறைகள் விரிவடையும் சாத்தியமுள்ளது. முதியோரின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்கு வயதிற்கு சிநேகபூர்வமான (age-friendly) புத்துருவாக்கம் மிக்க பொருட்கள் மற்றும் சேவைகளினை வடிவமைத்துக்கொள்வது தொடர்பில் எண்ணியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய துறைகளுக்குப் புதிய வாய்ப்புக்கள் தோற்றம் பெறுகின்றது. வயதடைதலுக்கான உலகக் கூட்டணியானது (Global Coalition on Aging) 2020ஆம் ஆண்டளவில் நரைப் பொருளாதாரத்தின் அளவு ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர் 15 ரில்லியனளவில் இருக்குமெனவும் எதிர்காலத்தில் அது மேலும் விரைவாக வளருமெனவும் குறிப்பிடுகின்றது.

### 5.0 வயதடையும் சனத்தொகையின் தாக்கத்தினை மட்டுப்படுத்துவதற்கும் நரைப் பொருளாதாரத்திலிருந்து நன்மையடைவதற்குமான கொள்கை முன்னுரிமைகள்

வயதடைதலுக்கான உலகப் பேரவைக் கூட்டத்தில் 2002இல் வயதடைதலுக்கான செயற்பாட்டுக்கான சர்வதேச மாட்ரிட் திட்டம் (Madrid Plan) பின்பற்றப்பட்டதுடன் இது வயதடைதலுடன் தொடர்புடைய ஐக்கிய நாடுகளின் மிகவும் முக்கிய ஆவணமாகக் கருதப்படுகிறது. ஆசிய-பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு (ESCAP) மற்றும் ஏனைய பல்வேறு சர்வதேச முகவராண்மைகள் இத்தகைய கடப்பாடுகளை பூர்த்திசெய்வதில் நாடுகளின் முன்னேற்றத்தினைத் தொடர்ந்தும் மதிப்பிட்டுவருகின்றது. நிறுவன ரீதியான ஏற்பாடுகள், வயதடைதலுக்கான தேசிய திட்டம், வயதடைந்தோரைப் பாதுகாப்பதற்கான சட்டவாக்கங்கள், சமூகப் பாதுகாப்பு, ஆரோக்கியமான வயதடைதல், சுகாதார சேவையின் முழுமையான கிடைப்பனவு, வயதடைந்தோருக்கான சங்கம் போன்ற விடயப்பரப்புகளின் அடிப்படையில் ஆசிய-பசுபிக் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் வயதடைந்தோரைப் பாதுகாப்பதற்கான கொள்கைகளின் உள்ளடக்கத்தில் இலங்கையின் மேம்பட்ட நிலையினை ஹெல்ப்பேஜ் இன்ரநஷனல் (Helpage International, 2015) ஏற்றுக்கொண்டுள்ளது. மூத்த பிரஜைக்கான தேசிய பட்டயம் மற்றும் மூத்த பிரஜைகளுக்கான தேசிய கொள்கை, வயது முதிர்ந்தோருக்கான மன்றமும் செயலகமும், 2000ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க மூத்தோர் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டம், சேவையின் முழுமையான கிடைப்பனவு, வயதடைந்தோருக்கான சமூகப் பாதுகாப்பும் நலன்புரித் திட்டங்களும், பிராந்திய மட்டத்திலான வயதடைந்தோரின் குழுக்கள் மற்றும் பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் மூப்பியல் மருத்துவத் துறை உள்ளடக்கம் போன்றவை வயதடைந்தோரின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றின் நலனோம்புகையைப் பேணுதல் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள மைல்கல்களாகும். எனினும், அறிவிக்கப்பட்ட கொள்கைகளை நிறைவேற்றுதல், இத்தகைய ஒழுங்குகளின் உள்ளடக்கம், போதுமானதன்மை மற்றும் செயற்திறன் போன்றவற்றில் அவதானிக்கப்படுகின்ற பிறழ்வுகள் இது தொடர்பில் புதுப்பிக்கப்பட்ட முயற்சிகளை வேண்டிநிற்கின்றது. உதாரணமாக, பங்களிப்புச் செய்யும் ஓய்வூதிய நன்மைகளுடன் கூடிய நிலைத்துநிற்கக்கூடிய ஓய்வூதியத் திட்டம், அனைத்தையுமுள்ளடக்கிய சமூகப் பாதுகாப்பு முறைமை, நீண்டகால நலக்கவனிப்பு ஒழுங்கு போன்றவற்றிற்கான அவசரமான தேவைகளுள்ளன. இப்பிரச்சனைகள் பொருத்தமான சமூக ரீதியான மற்றும் பொருளாதார கொள்கைகளினூடாக தீர்க்கப்பட வேண்டும்.

வயதடைதல் பிரச்சனையென்பது ஒரு குடித்தொகை மாற்றம் மாத்திரமின்றி பொருத்தமற்ற நிறுவனங்கள் மற்றும் நடத்தை போன்றவற்றின் காரணமானது என ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB, 2009) குறிப்பிடுகிறது. எனவே, நிறுவனங்களையும் நடத்தைகளையும் மாற்றுவதற்கான கொள்கைகளையும் காலத்துக்கேற்ப மாற்றியமைப்பதனை வயதடைதலுக்கான பதிலிறுத்தல்கள் இலக்குவைக்க வேண்டும். வயதடைதலினை தேசிய கொள்கை நீரோட்டத்தில் முறையாக உள்வாங்கிக்கொள்வது பொருளாதார மற்றும் சமூகப் பாதிப்புக்களை மட்டுப்படுத்துகின்ற அதேவேளையில் பொருளாதாரத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அனுகூலங்களை பயன்படுத்துவதில் உதவும். வயதடைதலுடன் தொடர்புபட்ட தொழிற்சந்தைப் பிரச்சனைகள் ஓய்வுபெறும் கட்டாய வயதெல்லையை உயர்த்துதல் மற்றும் பெண்களின் தொழிற்படை பங்கேற்பினை ஊக்குவித்தல் போன்றவற்றினூடாக தொழிற்சந்தைப் பங்கேற்பினை அதிகரித்தல், இளம் வயதினரை தொழிற்படையில் நுழையச் செய்யக்கூடிய கல்விச் சீர்திருத்தம், சுருக்கமடையும்

தொழிற்படையினை ஈடுசெய்வதற்கான தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் கல்வியினூடாக உற்பத்தித்திறனை மேம்படுத்தல் போன்ற கட்டமைப்புச் சீர்திருத்தங்களினூடாக பகுதியளவில் தீர்க்கப்படமுடியும். இலங்கையின் நாட்டுக்கு வெளியேயான புலம்பெயர்வு வயதடையும் சனத்தொகையினை தீவிரமாக்கக்கூடுமென்பதனால் தொழிலாளர் இடம்பெயர்வு தொடர்பான கொள்கைகள் கரிசனைக்கெடுத்துக்கொள்ள வேண்டிய விடயப்பரப்பாகும். இலங்கையின் புலம்பெயர்ந்தோரின் திரும்பல் மற்றும் உள்நோக்கிய இடம்பெயர்வு போன்றவை தொடர்பான நன்கு திட்டமிடப்பட்ட கொள்கைகள் இந்தக் குடித்தொகைப் போக்கினை மெதுவடையச் செய்யக்கூடும். அரசாங்கமானது போதுமானளவு ஊக்குவிப்பு பொறிமுறை மற்றும் நரைச் சமூகத்திற்கு சேவையளிப்பதற்குத் தேவையான சூழலை உருவாக்கிக் கொடுப்பதனூடாக வயதிற்கு சிநேகபூர்வமான தீர்வுகளை வழங்குவதற்கு சுகாதாரம், கல்வி, நிதியியல் மற்றும் ஏனைய வியாபாரத் துறைகளில் தனியார் துறையினை ஊக்குவிக்க முடியும். மேலும், நெகிழ்ச்சியான வேலை ஒழுங்குகள், மீள்திறன் வழங்கல், ஆயுட்காலம் முழுவதற்கான கற்றல், நிதியியல் மற்றும் சமூக உள்ளடக்கம் போன்றவற்றிற்கு வசதியளிப்பதன் மூலம் உற்பத்தித்திறன் மிக்க வயதடைதல் (productive aging) என்பதற்காக வயதடைந்தோரின் பொருளாதார ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கு மேலும் கொள்கைகள் உருவாக்கப்படவேண்டுமென்பதுடன் தற்போதுள்ள கொள்கைகள் மீள்வடிவமைக்கப்பட வேண்டும். இறைச் சுமையினைக் குறைப்பதற்காகவும் ஓய்வுபெற்றதன் பின்னர் அனைவரினதும் வருமானப் பாதுகாப்பினை வழங்குவதற்காகவும் நீடித்து நிலைத்துநிற்க முடியாத பங்களிப்பற்ற அரச ஓய்வூதிய முறைமையானது நீடித்துநிலைத்து நிற்கின்றதும், சமத்துவமானதும் அரச, தனியார் மற்றும் முறைசாராத துறை தொழிலாளர்கள் அனைவரையும் உள்ளடக்கிய, பங்களிப்புடன்கூடிய முறைமையினால் படிப்படியாகப் பதிலீடுசெய்யும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முடிவாக வயதடைதலுடன் தொடர்புடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் நரைப் பொருளாதாரத்திலிருந்து நன்மையடைவதற்கும் அரச துறை, தனியார் துறை மற்றும் முதியோரினைப் பிரதிபலிக்கும் அமைப்புக்கள் அனைத்தையுமுள்ளடக்கிய நாடளாவிய ரீதியான முயற்சிகள் எதிர்காலத்தில் இக்குடித்தொகை மாற்றப் பிரச்சனைகளுக்கெதிரான தீர்வாக அமையும்.

**உசாத்துணை நூல்கள்**


Asian Development Bank, (2009), Aging in Asia: Trends, Impacts and Responses, Working Paper Series on Regional Economic Integration No.25, Manila.

Asian Development Bank, (2019), Growing Old before Becoming Rich- Challenges of an Aging Population in Sri Lanka, Manila.

Basso, H S and O Rachedi (2020), The young, the old, and the government: Demographics and fiscal multipliers, American Economic Journal: Macroeconomics, forthcoming.

Central bank of Sri Lanka, (2018), Need for a Nationwide Contributory Pension Scheme amidst a Rapidly Ageing Population, Box Article, Annual Report 2018, Colombo.

European Commission, (2015), Growing the European Silver Economy, Background Paper.

Han. F., (2019), Demographics and the Natural Rate of Interest in Japan, IMF Working Paper No. WP/19/31.

HelpAge International, (2015), Policy Mapping on Ageing in Asia and the Pacific Analytical Report, Muang.

International Labour Organization, (2017-19), World Social Protection Report, Geneva.

International Monetary Fund, (2019), Macroeconomics of Aging and Policy Implications, Group of Twenty.

United Nations, Department of Economic and Social Affairs, Population Division (2019), World Population Prospects 2019, New York.